
வெற்றித் திருமகன் எம்.ஜி.ஆர் - நூல்வரிசை - 3

சிக்குமங்கு சிக்குமங்கு சச்ச பாப்பா . . .



முனைவர் செ. இராஜேஸ்வரி *M.A., M.Phil., Ph.D.,*

சந்திரோதயம் பதிப்பகம்

3,462 முதல் மாடி, கம்பர் 2வது தெரு, கம்பர் சாலை,
தினமணி நகர், மதுரை – 625 018, Mob. : 7010997639.

வெற்றித் திருமகன் எம்.ஜி.ஆர். – நூல் வரிசை - 3

சிக்குமங்கு சிக்குமங்கு சச்ச பாப்பா . . .

(எம்.ஜி.ஆர். கற்பிக்கும் குழந்தை வளர்ப்பு)

முனைவர் செ. இராஜேஸ்வரி

M.A., M.Phil., Ph.D.,

சந்திரோதயம் பதிப்பகம்

3,462 முதல் மாடி, கம்பர் 2வது தெரு,கம்பர் சாலை,
தினமணி நகர், மதுரை – 625 018, Mob.:7010997639.

நூல் விவரம்

நூலின் வரிசை : *வெற்றித்திருமகன் எம்.ஜி.ஆர். -3*

நூலின் பெயர் : ***சிக்கு மங்கு சிக்கு மங்கு சச்சபாப்பா***

நூலாசிரியர் : *முனைவர் செ.இராஜேஸ்வரி* ***M.A., M.Phil., Ph.D.,***

நூல்வகை : *குழந்தைவளர்ப்பு/ எம்.ஜி.ஆர். / சினிமா / சிறுவர்*

பதிப்பு : *பிப்ரவரி 2019 (இரண்டாம் பதிப்பு)*

பக்கம் : ***160***

வெளியீடு : *சந்திரோதயம் பதிப்பகம்,*

3/462-கம்பர் II தெரு, கம்பர் சாலை,

தினமணி நகர், மதுரை

போன்:7010997639

விலை : *ரூ.200/-*

அன்பு காணிக்கை

இன்றும் எம்.ஜி.ஆருக்காக தன் உடல், பொருள்,

ஆவியை வழங்கக் காத்திருக்கும் ஐக்கிய அமீரகத்தில்

*வாழ்கின்ற **உயர் திரு. சைலேஷ் பாசு** போன்ற*

எம்.ஜி.ஆர். ரசிகர்களுக்கு இந்நூலை அன்பு

காணிக்கை ஆக்குகிறேன்.

நூலாசிரியர் பற்றி



முனைவர். செ. இராஜேஸ்வரி மொழிபெயர்ப்பியல் துறையில் முனைவர் பட்டம் பெற்றவர். புலமை, செந்தமிழ், வளர் தமிழ், ஓங்கு தமிழ் நா.வா.வின் ஆராய்ச்சி போன்ற ஆய்விதழ்களில் ஆய்வுக்கட்டுரைகள் வெளியிட்டார். *1988* முதல் தமிழ் ஆங்கில மொழிபெயர்ப்புப் பணிகளில் ஈடுபட்டுள்ளார். *Indian Women–Changes and Challenges, Urban Theology, Vaigai Paripatal, Eco Vision and Mission, Neuro Ophthalmology Articles* போன்ற பனுவல்களை தமிழில் மொழிபெயர்த்துள்ளார். தஞ்சையைச் சேர்ந்த தமிழ் இலக்கியச் செம்மல் முத்தமிழ் விரும்பியின் இரண்டு கவிதை நூல்களை *Shade of the Flowering Tree, Songs of Dryness* என்ற தலைப்புகளில் மொழி பெயர்த்துள்ளார். இந்நூல்களை சென்னை எமரால்டு பதிப்பகம் வெளியிட்டுள்ளது.

*1993*இல் ஆசியவியல் ஆய்வியல் நிறுவனத்தில் இணைப் பதிப்பாசிரியராகப் *[Associate editor]* பணயாற்றினார். அப்போது ஜப்பானிய மொழியை தமிழில் கற்பது எளிது என்பதை அறிந்து அதற்கான நூல் உருவாக்கும் பணியில் ஜப்பானியப் பெண் யூகோ ஃபுகுரோயியுடன் இணைந்து செயல்பட்டார். அந்த நூல் இன்று மூன்று பாகங்களாக வெளி வந்துள்ளது. அங்கு வெளிநாட்டு மாணவர்களுக்குத் தமிழ் கற்பித்தார். தமிழ் மாணவர்களுக்கு ஜப்பானிய மொழி இலக்கணம் கற்பித்தார். யுக்கோ சான் அம்மாணவர்களுக்கு ஒலிப்பயிற்சி அளித்தார்.

1987 முதல் எபிரேயம் - தமிழ் அகராதி; கிரேக்கம் - தமிழ் அகராதி உருவாக்கத்திற்காக மக்கள் கல்வி அறக்கட்டளையின் இயக்குனர் மறை திரு. இராபின்சன் லேவி ஐயா அவர்களுடன் இணைந்து பல ஆண்டுகள் தீவிரமாக பணியாற்றினார். ஈரோடு மகளிர் கலை, அறிவியல் கல்லூரி, திருச்சி ஸ்ரீமத் ஆண்டவன் கலை, அறிவியல் கல்லூரி, மதுரை அமெரிக்கன் கல்லூரி போன்றவற்றில் சில ஆண்டுகள் தமிழ் விரிவுரையாளராகப் பணியாற்றினார்.

2000இல் மதுரையில் அமெரிக்காவின் விஸ்கான்சின் பல்கலைக்கழக மாணவர்களுக்கு தமிழ் கற்பித்தார். அப்போது வெளிநாட்டவருக்கு தமிழ் கற்பிக்க பாட நூல் ஒன்றை உருவாக்கினார். அரவிந்த் கண் மருத்துவமனையில் மொழிபெயர்ப்பாளராகவும் தமிழ் ஆசிரியராகவும் பணியாற்றியபோது அங்கு வந்த வெளி மாநிலம் மற்றும் வெளிநாட்டைச் சேர்ந்த கண் மருத்துவர்களுக்கு தமிழ் கற்பிக்க Tamil for Non-Tamils என்ற பாட நூலை உருவாக்கினார். இன்றும் அந்த பாட நூல் அங்கு பயன்பாட்டில் உள்ளது. அது போல அங்கு செவிலியர் பயிற்சி பெறும் இளம் பெண்களுக்கு ஆங்கிலம் கற்பிக்க Easy English என்ற ஆங்கிலப் பாட நூலை உருவாக்கினார். மக்கள் கண்காணிப்பகத்தில் வெளிமாநிலத்தவருக்கும் வெளி நாட்டவருக்கும் ஆங்கிலமும் தமிழும் கற்பித்தார். மதுரை உயர் நீதிமன்றத்தில் வழக்கறிஞர்களுக்கு ஆங்கிலப் பயிற்சி அளித்தார்.

தமிழ் கற்கும் வெளிநாட்டு மாணவர்களுக்காக சென்ட்டர் ஃபார் லேங்குவேஜ் ஸ்டடீஸ் என்ற பெயரில் தனி மையம் ஒன்றை அமைத்து அவர்களுக்குத் தமிழ் கற்பித்தார். திராவிட இயக்கப் பாரம்பரியத்தில் வந்ததனால் இவர் திமுக, அதிமுக வரலாறு குறித்து அறிந்திருந்தார். குறிப்பாக

எம்.ஜி.ஆர் பற்றிய தகவல்களை நிறைய தொகுத்து வைத்திருந்தார். தமிழ்க் கலையும் பண்பாடும் பற்றிக் கற்பிக்கும்போது தமிழ்நாட்டில் மேடைத்தமிழ், மேடை நாடகம், திரைப்படம் ஆகியன அரசியலை உருவாக்கியவிதம் பற்றியும் விளக்கினார். அப்போது எம்.ஜி.ஆர். அரசியல் தலைவரான விதம் குறித்து மேலும் அறிய அமெரிக்க மாணவர்கள் மிகுந்த ஆர்வம் காட்டினர். அவர்களை எம்.ஜி.ஆர். படங்களைப் பார்க்க திரையரங்குக்கு அழைத்துச் சென்றார். திரை அரங்கில் ரசிகர்கள் காட்டிய ஆர்வமும் ஆர்ப்பரிப்பும் கண்டு கேட்டு வியந்து போய் எம்.ஜி.ஆர். குறித்து சில மாணவர்களும் பேராசிரியை ஒருவரும் ஆராய்ச்சி செய்ய தொடங்கினர். அவர்களின் ஆர்வம் கண்டு எம்.ஜி.ஆர். தகவல் மையம் ஒன்றைத் தொடங்கி அவர் குறித்த நூல்களையும் அவரது படங்களையும் சேகரித்து வைத்தார். பின்னர் அமெரிக்க மாணவர்கள் இந்தியாவுக்கு வருவது குறைந்ததால் இத்திட்டம் தொடர்ந்து செயல்பட முடியவில்லை.

எம்.ஜி.ஆர் பற்றி ஒப்பனையும் ஒரிஜினலும் எம்.ஜி.ஆர். 100 என்ற தலைப்பில் விகடன்.காமில் முப்பது கட்டுரைகள் வெளியிட்டார். அதன் தொடர்ச்சியாக கனடாவில் இருந்து வரும் www.tamilauthors.com என்ற இணைய இதழில் “எம்.ஜி.ஆர். ஒரு ஜீவ நதி” என்ற பெயரில் 16 கட்டுரைகளை வெளியிட்டார். அதனைத் தொடர்ந்து “பெண்கள் போற்றும் பெருந்தலைவர் எம்.ஜி.ஆர்.” என்ற பெயரில் 21 கட்டுரைகளை வெளியிட்டார். “எம்.ஜி.ஆரின் திரைப்படப்பாடல்கள்” என்ற தலைப்பில் புதிய கட்டுரை தொடரை இப்போது தொடங்கியிருக்கிறார். எம்.ஜி.ஆரின் ரசிகர் மன்றங்களின் தனித்தன்மை குறித்து ஒரு நூல் எழுதும் முயற்சியில் தகவல்களை திரட்டி வருகிறார். எம்.ஜி.ஆர். பற்றி நூறு நூல்கள் எழுத வேண்டும்

என்பது இவர் இலட்சியம். தற்போது எட்டு நூல்கள் வெளியிட்டுள்ளார். அவை:

1. *'வெற்றித்திருமகன்' என்ற பெயரில் தொடங்கும் வரிசை நூல்கள் ஆகும்.*
2. *எம்.ஜி.ஆர். நிழல் நிஜம் நிரந்தரம்,*
3. ***சிக்கு மங்கு சிக்கு மங்கு சச்ச பப்பா (எம்.ஜி.ஆர். கற்பிக்கும் குழந்தை வளர்ப்பு முறைகள்)***
4. *வீரமகன் போராட வெற்றி மகள் பூச்சூட*
5. *மகளிர் போற்றும் மக்கள் தலைவர் எம்.ஜி.ஆர்*
6. *எம்.ஜி.ஆர் ஒரு ஜீவ நதி*
7. *எம்.ஜி.ஆர் ஒரு கலியுகப்போராளி*
8. *ஒளி விளக்கு எம்.ஜி.ஆர்.,*

ஒன்பதாவதாக "வெற்றிப் படிக்கட்டில் நாடோடி மன்னன்" என்னும் நூல் வெளிவரவுள்ளது.

இவர் எழுதிய சிறுகதைகள் 'அமராவதியின் காதல்'என்ற பெயரில் அமேசானில் வெளிவந்துள்ளது. இவர் எழுதி வரும் ஆய்வுக்கட்டுரைகள நெருஞ்சி என்னும் இலக்கிய இதழில் வெளிவருகின்றன.



உள்ளடக்கம்

1. எம். ஜி. ஆரும் சிறுவர்களும்

2018 ஜுலை பதினைந்தாம் நாள் எம் ஜி ஆரின் 101 பிறந்த நாள் விழா கின்னஸ் சாதனை புத்தகத்தில் இடம்பெறும் வகையில் வேல்ஸ் பல்கலைக்கழக வளாகத்தில் கொண்டாடப் பட்டது. இந்த கொண்டாட்டத்தில் பங்கு கொள்வோரில் 80% பேர் எம்.ஜி.ஆர் திரையுலகை விட்டு வெளியேறிய பிறகு அதாவது 1977 க்கு பிறகு பிறந்தவர்கள். அவர்கள் பல பெயர்களில் எம்.ஜி.ஆர் ரசிகர் மன்றக்குழுக்களாக இணைந்து செயல்பட்டு வருகின்றனர் கட்சி சாராத இந்த ரசிகர் மன்றங்கள் எம்.ஜி.ஆரின் பிறந்த நாளை உலக அளவில் சிறப்பாகக் கொண்டாட திட்டமிட்டுள்ளன. எம்.ஜி.ஆர் வழியில் நிறைய தான தர்மங்கள் செய்து கொண்டாட ஏற்பாடுகள் நடக்கின்றன.



இவர்கள் எப்படி இந்த கொண்டாட்டத்தை நடத்த முன்வந்துள்ளனர்? என்ற வினா எழுந்த போது இவர்கள் சிறுவர்களாக இருந்த போது பார்த்த எம்.ஜி.ஆர் படங்கள் மனதில் பசுமையாகப் பதிந்துவிட்டன. இவர்களின் குடும்பத்தினர் எம்.ஜி.ஆர் ரசிகர்களாக இருந்துள்ளனர். இன்றைய தலைமுறையினரின் மனதில் எம்.ஜி.ஆர் இடம் பிடித்தது எப்படி என்ற ஆய்வில் பல கருத்துக்கள் தென்பட்டன. அவற்றை ஒவ்வொன்றாகக் காண்போம்.



"நல்ல நல்ல பிள்ளைகளை நம்பி

இந்த நாடே இருக்குது தம்பி

சின்னஞ்சிறு கைகளை நம்பி

ஒரு சரித்திரம் இருக்குது தம்பி" *என்று*



தாலாட்டுப் பாடல்கள் உட்பட குழந்தைகளுக் கான அறிவுரை பாடல்களை சுமார் இருபதுக்கு அதிகமாகப் பாடிய எம்.ஜி.ஆர்., சிறுவர்களுக்கும் தம் ரசிகப் பட்டாளத்தில் முக்கிய இடத்தைக் கொடுத்தார். இன்றைய குழந்தைகளே நாளைய இளைஞர்கள் என்பதால் சிறுவர்களிடம் தம் பாட்டும் படமும் போய்ச் சேர வேண்டும் என்பதில் கண்ணும் கருத்துமாக இருந்தார்.

எம்.ஜி.ஆர். தனக்கு பாடல் எழுதும் பாடலாசிரியரிடம் ‘என் தனிப் பாடல்களின் பல்லவியை இரண்டு வயது குழந்தை பாட வேண்டும்’ என்பார். ஏனெனில் இரண்டு வயதில் பிள்ளைகளுக்கு நன்கு பேசத் தெரிந்துவிடும். அப்போது அவை நன்றாக பாடவும் ஆரம்பித்துவிடும், இந்த வயதிலேயே குழந்தைகள் தனது பாடல்களை பாடத் தொடங்கிவிடவேண்டும் என்பது எம்.ஜி.ஆரின் குறிக்கோளாக இருந்தது. அது நிறைவேறியதற்குச் சரித்திரம், சான்று காட்டுகிறது.

எம்.ஜி.ஆரின் பாடல்களை இரண்டு வயது முதல் பாடி வந்த சிறுவர்கள் அவரையே தம் மானசீக குருவாக ஏற்றுக்கொண்டனர். அவரைத் தன் வாழ்வின் முன்னோடியாகவும், தலைவராகவும் போற்றி வந்ததால் இன்றும் அவர்களால் அவரை மறக்க இயலவில்லை. அன்பான சிற்றன்னையை விளக்கும் 'சித்தி' என்ற பழைய படத்தில் சிறுவர்கள் 'எங்க வீட்டு பிள்ளை' படத்தில் இடம் வரும் **"நான் ஆணையிட்டால் அது நடந்துவிட்டால்....."** என்ற பாட்டை பாடி வரும் காட்சி இடம்பெற்றது,



இது அக்காலத்தில் சிறுவர்களிடம் இருந்து வந்த அன்றாடப்பழக்கம் தான். சிறுவர்கள் வளர்ந்து பெரியவர்கள் ஆகும்போது நல்லவர்களாகவும் வல்லவர்களாகவும் வர வேண்டும் என்று விரும்பிய எம்.ஜி.ஆர். இரு படங்களில் உடற்கல்வி ஆசிரியராக தன் கதாபாத்திரத்தை அமைத்துக்கொண்டார். ஆனந்த ஜோதி படத்தில் மாணவர்கள் டிரில் செய்யும் காட்சியில் இடம்பெற்ற **'ஒரு தாய் மக்கள் நாம் என்போம்'** என்ற பாட்டு சில பள்ளிகளில் காலையில் பாடப்படும் பிரார்த்தனைக் கூட்டத்தின் பாடலாக இருந்தது.

எம்.ஜி.ஆர். ரசிகைகள், தம் பிள்ளைகளை எம்.ஜி.ஆர் ரசிகர்களாக வளர்த்தனர். ராஜாஜி ஒரு பெண்ணைப் படிக்க வைத்தால் ஒரு குடும்பமே கல்வியறிவு பெறும் என்றார். அது போல ஒரு பெண் எம்.ஜி.ஆர் ரசிகையானால் அவள் பிள்ளைகளும் எம்.ஜி.ஆர் ரசிகராக வாய்ப்புக்கள் மிகுதி.



தாய்மார் மூலமாக சிறுவர்களைக் கவரும் இந்த உத்தியும் இன்று வரை எம்.ஜி.ஆருக்கு புதிது புதிதாக ரசிகர்களை உருவாக்கிக்கொண்டு இருக்கிறது. வணிக நோக்கத்துக்காக எம்.ஜி.ஆர். சிறுவர்களைக் கவர முயன்றார் என்று சொல்லிவிட முடியாது. உண்மையிலேயே அவர் சிறுவர்களின்பால் அதிக அக்கறையும் பொறுப்பும் கொண்டவராக இருந்திருக்கிறார்.

அவருக்குக் குழந்தைகள் இல்லையென்றாலும் அவர் தனது வீட்டில் தனது அண்ணன் பிள்ளைகளையும், ஜானகி அம்மாவின் மகனையும், ஜானகி அம்மாவின் அண்ணன் பிள்ளைகளையும்

சொந்தத் தகப்பன் போல வளர்த்து வந்தார். அவர் வீட்டில் எப்போதும் ஏழெட்டு பிள்ளைகள் வளர்ந்து வந்தனர். அவர்களிடம் அவர் நல்ல பண்புகள் வளர வேண்டும் என்பதில் கண்டிப்பாக இருந்தார். அவருடைய நண்பர்கள் வீட்டுப் பிள்ளைகளும் எம்.ஜி.ஆர். வீட்டில் வந்து விளையாடிச் செல்வதுண்டு.

எம்.ஜி.ஆர். படங்களில் காதல் காட்சிகள் மிகையாகக் காணப்படும், எனவே அவர் படங்களுக்கு சிறுவர்களை அழைத்துச் செல்லக் கூடாது என்று ஒரு சாரார் அக்காலத்தில் கருதியதுண்டு, ஆனால் எம்.ஜி.ஆர். படங்கள் மகிழ்ச்சியான முடிவு கொண்டனவாகவும் தன்னம்பிக்கை அளிப்பனவாகவும் இருந்ததால் சிறுவர்கள் எம்.ஜி.ஆர். படத்தையே விரும்பினர்.

குடும்பப் படங்கள் என்ற பெயரில் அழுகை, சாவு போன்றவற்றால் மனதை வருத்துகின்ற வாழ்க்கையில் அச்சம் ஊட்டுகின்ற படங்களை சிறுவர்கள் விரும்பவில்லை. அவர்கள் பெற்றோருக்கு தெரியாமல் எம்.ஜி.ஆர். படத்தைப் பார்க்க விரும்பினர். அவை அவர்களுக்கு மனதுக்கு மகிழ்ச்சியும் வாழ்க்கைக்கு நம்பிக்கையும் ஊட்டின.

எம்.ஜி.ஆர். காபி தேநீர் குடிப்பதில்லை; மது அருந்துவதில்லை; புகை பிடிப்பதில்லை போன்ற நல்ல பழக்கங்களைப் பின்பற்றி வந்ததால் அவர் தனது படங்களிலும் அப்படியே நடித்தார். நிஜத்திலும் படங்களிலும் அவர் தன் அம்மாவை மிகவும் நேசித்தார். படங்களின் தலைப்பை ***“தாய்***

சொல்லைத் தட்டாதே” , “தாயைக் காத்த தனயன்” என்று தாயைப் போற்றும் வகையில் வைத்தார்.

இரண்டு வயதில் தந்தையை இழந்த எம்.ஜி.ஆர். தாயின் பராமரிப்பில் வாழ்ந்ததால் அவர் தன் அன்னையைத் தெய்வமாகப் போற்றினார். தாய்க்கு நல்ல மகனாக வாழ்ந்த அவர் மற்ற பிள்ளைகளும் நல்லவர்களாகவும் வல்லவர்களாகவும் வளர வேண்டும் என்று நினைத்து தன் படங்களில் சிறுவருக்கான நல்ல கருத்துக்களை அமைத்தார். ஏழு வயதில் தன் அன்னையைப் பிரிந்து மூன்று வேளை சோற்றுக்காக நாடகக் கம்பெனியில் சேர்ந்த எம்.ஜி.ஆர். தாய்ப்பாசத்துக்கு ஏங்கினார். அந்த ஏக்கமானது சிறு வயதுப் பிள்ளைகளின் உணர்வை அறிந்து அவர்களுக்கேற்ற பாடல்களையும் காட்சியையும் வடிவமைக்க அவருக்கு உதவியது.

தாயிடம் கடவுள் நம்பிக்கையைப் பெற்ற எம்.ஜி.ஆர். ஆரம்பத்தில் கழுத்தில் தாமரைமணி மாலை அணிந்தவராகக் காங்கிரசில் இருந்தார். பின்பு அண்ணாவில் சமூக சீர்திருத்தக் கருத்துக்களால் கவரப்பட்டார். **‘நாங்கள் பிள்ளையாரையும் உடைக்க மாட்டோம் பிள்ளையாருக்குத் தேங்காயும் உடைக்க மாட்டோம்’** என்று அண்ணா தெரிவித்ததால் கடவுள் பக்திக்கு மனதளவில் இடமளித்த திமுகவில் சேர்ந்தார். திமுக அக்காலத்தில் மக்களுக்குப் பகுத்தறிவு மூட நம்பிக்கை அகற்றுதல், தன்மானம் வளர்த்தல், தமிழ்மொழிப் பற்று போன்ற கொள்கைககளைப் பரப்பி வந்ததால் தன் படங்களில் அக்கருத்துக்களைப் பிரச்சார நோக்கில் இடம்பெறச் செய்தார். சிறுவர்கள் எம்.ஜி.ஆரின் சீர்திருத்தக் கருத்துள்ள பாடல்களாலும் காட்சிகளாலும்

ஈர்க்கப்பட்டனர். இவ்வாறாக எம்.ஜி.ஆரின் கருத்து பாசறையில் வளர்ந்து வந்த சிறுவர்கள் பெரியவரான பிறகும் அவரை மறக்கவில்லை. அவரை வாழ்வின் வழிகாட்டியாக கொண்டவர்கள் இன்று தெய்வமாகக் கருத தொடங்கிவிட்டனர். இன்றும் அவருக்கு பல ஆயிரக்கணக்கான மன்றங்கள் இயங்கி வருகின்றன. அவை கட்சி சார்பில்லாமல் சமூகப் பணிகள் செய்து வருகின்றன.



2. தன்மானம் ஊட்டும் தந்தை – எம்.ஜி.ஆர்.



‘சாதாரணமாக நான்கைந்து வயது குழந்தைகள் கூட வீட்டில் நான் தான் எம்.ஜி.ஆர். நீதான் நம்பியார் என்று சொல்லிக்கொண்டு விளையாடுகிற காட்சியை எங்கும் காணலாம், ஒவ்வொரு வீட்டிலும் நடந்த நடக்கக்கூடிய நிகழ்ச்சி இது. குழந்தைப் பருவத்தில் ஹீரோயிஸத்தை அவர்கள் மனதில் உண்டாக்கியவர் எம்.ஜி. ஆர். ஒவ்வொரு குழந்தையும் தன்னை ஒரு ஹீரோவாக நினைக்க வைத்த பெருமை எம்.ஜி.ஆரையே சேரும்.

“நான் ஒரு நடிகையாக அல்ல ஒரு குழந்தைக்குத் தாயாக இருந்து சொல்கிறேன். குழந்தைகளுக்கு எதைச் சொல்ல வேண்டுமோ அதைச் சொல்லி பதிய வைக்க வேண்டும். அந்த வகையில் எம்.ஜி.ஆரை எவ்வளவு போற்றினாலும் தகும். குழந்தைகள் மத்தியில் இப்படித்தான் இருக்க வேண்டும் இப்படித்தான் வாழ வேண்டும் என்ற இமேஜ் கிரியேட் செய்ததற்காக அவருக்கு நன்றி கூற வேண்டும்”.

இவ்வாறு எம்.ஜி.ஆரைப் பாராட்டி நன்றி தெரிவித்தவர் நடிகை இலட்சுமி. இது அவரது கருத்து மட்டும் அல்ல. நாட்டில் பலருடைய கருத்தும் ஆகும்.

ஹீரோவாக ஒருவர் தன்னைக் கருதிக்கொள்வதற்கும் செயல்படுவதற்கும் உறுதுணையாய் நிற்பது அவரிடம் உள்ள அபரிமிதமான தனமான உணர்ச்சியே ஆகும். சுய மரியாதை இயக்கத்தை சார்ந்த எம்.ஜி.ஆர். தன் படங்களில் தனக்கும் தனது வழியில் வர வேண்டும் என்று கருதிய சிறார்களுக்கும் வசனம் மற்றும் பாடல்கள் மூலமாக தன்மான உணர்ச்சியை ஊட்ட முயன்றார். தந்தையாக அவர் நடித்த படங்களில் பாடிய பாடல்களில் இருந்து குழந்தைகளை வளர்ப்பதில் அவர் காட்டிய அக்கறை குறித்து அறியலாம்.

எம்.ஜி.ஆர். தன் பாடல்களில் சிறார்களுக்குப் பெற்றோரைப் போற்றுதல்; தமிழ் மொழிப் பற்று; சுய மரியாதை; பகுத்தறிவு; சாதி மத பேதம் வெறுத்தல் போன்ற திராவிட இயக்கக் கருத்துக்களை

வலியுறுத்தினார். குழந்தைகளுக்கு எம்.ஜி.ஆர். தன் படங்கள் மூலமாக ஹீரோ இமேஜில் ஆர்வம் ஊட்டினார். ஹீரோ என்றாலே தோல்வி இல்லாதவன், எதையும் திட்டமிட்டு செயலாற்றி வெற்றி காண்பவன், வலிமை குறைந்தோரை பாதுகாப்பவன், வீரதீர சாகசங்கள் செய்பவன் என்பதால் பிள்ளைகள் அவர் படத்தைப் பார்க்க விரும்பினர். அவரும் அந்த வாய்ப்பை நன்கு பயன் படுத்திக்கொண்டு நல்ல பல கருத்துக்களை அவர்கள் மனதில் ஆழமாகப் பதித்தார்.

குழந்தைவளர்ப்பு

ஒரு குழந்தை எப்படி இருக்க வேண்டும் அதனிடம் என்னென்ன கருத்துக்களைச் சொல்லி வளர்க்க வேண்டும் எனபதை எம்.ஜி.ஆர். பாட்டுக்கள் உணர்த்துகின்றன.

எம்.ஜி.ஆர். தந்தையாகப் போவதை அறிந்தவுடன் தன் மகன் எப்படி இருக்க வேண்டும் என்று ‘பணம் படைத்தவனில்’ ஒரு கற்பனை செய்கிறார். அந்த கற்பனையைப் போல ‘கண்ணன் என் காதலனில்’ ஒரு தாயும் [ஜெயலலிதா] தான் ஒரு மகனைப் பெற்றதும் அதைத் தந்தை [எம்.ஜி.ஆர்.] எவ்வாறெல்லாம் கவனிப்பார் என்று ஒரு கனவு காண்கிறாள்.

இவற்றுடன். தந்தை என்ற பொறுப்பில் இருந்து ‘வேட்டைக்காரன்’ மற்றும் ‘நான் ஏன் பிறந்தேன்’ படங்களில் எம்.ஜி.ஆர். தன் பிள்ளைகளுக்கு பாட்டின் முலமாக என்ன கருத்து சொல்கிறார் என்பதையும் காணலாம். ஒவ்வொரு பிள்ளையையும் இலட்சியத்தோடு வளர்த்து

இந்நாட்டுக்கும் தாய்மொழிக்கும் சேவையாற்றும் தலைமகனாக அவனை உருவாக்கும் பணியில் ஒவ்வொரு தந்தையும் ஆற்ற வேண்டிய கடமை பற்றி எம்.ஜி.ஆரின் பாடல்கள் சொல்கின்றன.

வீரத்தை ஊட்டும் தந்தை பொறுப்பில் எம்.ஜி.ஆர்.

எம்.ஜி.ஆர் தான் நடித்த படங்களில் இரண்டு படங்களில் மட்டுமே பேசி விளையாடும் வயதுடைய குழந்தைக்கு தந்தையாக நடித்தார். ***'வேட்டைக்காரன்'*** *படத்தில் இவர் மகன் ராஜாவிடம் இவர் செல்லம் கொடுக்கும் தந்தையாகவும் கண்டிப்பு காட்டும் தந்தையாகவும் நடித்தார். மூன்று வயது மகனான் ராஜாவை காசநோய் பீடித்த தாயிடம் இருந்து பிரித்து வளர்க்க வேண்டி இருப்பதால் கைக்குழந்தையாக இருந்த காலம் முதல் அவரே அவனை வளர்த்து வருவார். அப்போது அவனுக்கு ஒரு பாட்டுப் பாடி உறங்க வைக்கும் போது*



அப்பாட்டில் குழந்தைக்கு வேண்டிய நல்ல வாழ்வியல் கருத்துக்களை எடுத்துரைப்பார். இக்காட்சி ஒரு தாயோ தந்தையோ தன் குழந்தையிடம் பேசித் தூங்க வைக்கும் நிகழ்ச்சியைப் போன்றதாகும். அப்போது அவர்

“வெள்ளிநிலா முற்றத்திலே

விளக்கெரிய விளக்கெரிய

உள்ளமெனும் தாமரையில்

உனைஎடுத்து கொண்டு வந்தேன்.......”

எனத் தன் அன்பை வெளிப்படுத்திய பின்பு வரும் வரிகள்

“வேலேடுக்கும் மரபிலே

வீரம் செறிந்த மண்ணிலே

பால் குடிக்க வந்தவனே

நடையை காட்டு – வரும்

பகைவர்களை வென்று விடும்

படையை காட்டு....”

என்று ‘ஆண் பிள்ளைக்கு வீரம் வேண்டும் என்பதையும் அவனது மண்ணின் மாண்பு அத்தகையது என்பதையும் ஊட்டி வளர்க்க வேண்டும்’ என்ற கருத்தை இப்பாட்டு வரிகளின் மூலமாக உணர்த்துகிறார். அடுத்ததாக மொழிப்பற்றை ஊட்டும் வகையில் திருக்குறளின் மாண்பை தன் மகனுக்கு சொல்கிறார்.

“முக்கனியின் சாறெடுத்து

முத்தமிழின் தேனெடுத்து

முப்பாலிலே கலந்து

எப்போதும் இனித்திருப்பாய்.... “

என்கிறார். ஆக ஒரு ஆண் மகனுக்கு சிறு வயதிலேயே வீரம் புகட்டப்படவேண்டும். அவனுக்கு தன் மண், மொழி, மரபுப் பற்றிய பெருமிதம் ஊட்டப்பட வேண்டும் என்று இந்த பாட்டு, நாட்டில் உள்ள அனைத்துத் தாய்மாருக்கும் தந்தைமாருக்கும் எடுத்துக்காட்டுகிறது.

பாரதிதாசன் பாடிய ஆண்பால் தாலாட்டுக்கு நிகர்த்த பெருமை உடையது இப்பாடல்.

[பாட்டை கவிஞர் எழுதினார்; பாடியவர் வேறொருவர்; இதில் இவருடைய பங்கு என்ன இருக்கிறது? இது ஒரு குழுவேலை தானே என்று சிலர் நினைக்கலாம். ஆனால் எம்.ஜி.ஆர் பாடல்களில் என்ன கருத்து இருக்க வேண்டும். அதற்கு எப்படி இசை அமைய வேண்டும் எவ்வாறு பாட வேண்டும் என எல்லாவற்றையும் முழுக்க முழுக்க எம்.ஜி.ஆர் மட்டுமே முடிவு செய்கிறார் என்பதைக் கருத்தில் கொள்ள வேண்டும்]

‘வேட்டைக்காரன்’ *படத்தில் அவரது எஸ்டேட்டை பாதுகாக்கும் பொறுப்பு நாளை தன் மகனுக்கு இருப்பதால் அவன் காட்டுக்குள் போய்வர பயம் இல்லாமல் துணிச்சலுள்ளவனாக வளர வேண்டும்;* ***“அப்படித்தான் நான் அவனை வளர்க்கப் போகிறேன்”*** *என்பார். அந்தச் சிறுவனுக்கு வீட்டுக்குள்ளேயே புலி வேட்டையை கற்றுக்*

கொடுத்து விளையாட்டு காட்டுவார். அவன் வைத்து விளையாட கரடிக்குட்டி கொண்டு வருவார்.

வீட்டுக்குள் வந்த புலியை தேடி எம்.ஜி.ஆர் காட்டுக்குள் போகும் போது அவர் மகன் தானும் புலியைப் பிடிக்க வருகிறேன் என்பான். ஆக வீட்டுச் சூழ்நிலைக்கு ஏற்ப பிள்ளைகளுக்கு வீரமும் விவேகமும் இருக்க வேண்டும் என்பது இந்த படத்தில் எம்.ஜி.ஆர் தன் மகனை வளர்ப்பதன் மூலமாக அறியலாம். எனவே அவனுக்குப் பாடும் தாலாட்டில் வீரம் பொங்கும்.

***'நான் ஏன் பிறந்தேன்'** படத்தில் இவருக்கு மகளாக நான்கு வயது பேபி இந்திரா நடித்திருப்பார். ஆனால் அவரிடம் இவர் தனியாக தந்தை என்ற பொறுப்புடன் பேசும் காட்சிகள் இல்லை. ஆனால் தன் தங்கை மக்களுடன் இந்திராவையும் சேர்த்து வைத்துக்கொண்டு இவர் பாடும் பாட்டு குறிப்பிடத்தக்கதாகும். இந்த பாடலில் வீரம், விவேகம் போன்ற கருத்துக்கள் இல்லாமல் நற்பண்பு, நம்பிக்கை மற்றும் சேவை மனப்பான்மை பற்றி பாடியிருப்பார். படத்தின் கதைக்கும் கதாபாத்திரத்துக்கும் ஏற்ப சிறுவர்களுக்கான பாட்டுக்களை அவர் எழுதி வாங்கியுள்ளார்.*

"தம்பிக்கு ஒரு பாட்டு –அன்பு

தங்கைக்கு ஒரு பாட்டு - வாழ்வில்

நம்பிக்கை வளர்வதற்கு உதவும்

நான் சொல்லும் கதைப் பாட்டு ......"

எனத் தொடங்கும் பாடலில், வாழ்வில் நம்பிக்கை ஊட்டும் வரி பல்லவியிலேயே அமைந்துவிட்டது. மனிதராக வாழ்வதற்கு நல்ல குணம் அவசியம் என்பதை அவர்களுக்கு உணர்த்தும் விதமாக ஒரு மேதையின் வாழ்க்கை சம்பவம் ஒன்றை சுட்டிக் காட்டி பாடுவார்.

"ஒரு மேதை பகல் வேளை

கையில் விளக்குடன் சென்றாராம்

மனிதன் எங்கே தேடுகிறேன்

காணவில்லை நான் என்றாராம்

பிறப்பால் வளர்ப்பால் இருப்பவர் எல்லாம்

மனிதர்கள் அல்ல என்றாராம்

இனத்தால் அல்ல மனத்தால் மட்டும்

வாழ்பவன் மனிதன் என்றாராம்"

இது ஒரு தாலாட்டு பாட்டு போன்ற இராகத்துடன் அமையாவிட்டாலும் இரவில் பாடி பிள்ளைகளை உறங்க வைக்கும் பாட்டாக அமைந்தது.

3. மதத்தை ஒதுக்கி மனிதனை நேசிக்கச் சொல்லும் எம்.ஜி.ஆர்



ஒருவன் தந்தையாகப் போகும் செய்தி கேட்டதும் அவன் மனம் கொள்ளும் உற்சாகம் தன் மகன் குறித்து அவனுடைய கற்பனைகளை ***பணம் படைத்தவன்*** *படத்தில் வரும் பாட்டு உணர்த்தும் இதுவும் பெற்றோருக்கு ஒரு நல்ல வழிகாட்டியாக அமைந்த பாடல் ஆகும். தன் பிள்ளையை வளர்க்க வேண்டிய முறையை ஒரு வீட்டுப் பெரியவர் போல இந்தப் பாட்டில் கற்று தருகிறார்.*

எனக்கொரு மகன் பிறப்பான் -அவன்

என்னைப் போலவே இருப்பான்

தனக்கொரு பாதை வகுக்காமல் – என்

தலைவன் வழியிலே நடப்பான்

இந்தப் பல்லவி ஒருவனின் மகன் தன் தந்தை செல்லும் வழியில் பயணிக்க வேண்டும் என்பதைக் காட்டுகிறது. தந்தை சொல் மிக்க மந்திரம் இல்லை என்பது அவ்வையின் வாக்கு. அதன்படி தந்தை பின்பற்றும் தலைவனையே மகனும் பின்பற்றுவான் என்று உறுதிபட சொல்வதாக இப்பாடல் அமைந்துள்ளது. இளையோரை திமுகவைப் பின்பற்ற வைக்கும் முயற்சியில் இதுவும் ஒன்றாகும். இவர் தலைவன் என்று அண்ணாவை சொல்கிறார் என்பது அனைவருக்கும் புரியும்.

ஒரு சிறந்த ஆண்மகன் எப்படி இருக்க வேண்டும் என்று கற்பனை செய்கிறார். அனைவருடனும் அண்ணன் தம்பியாக ஒற்றுமையுடன் வாழ வேண்டும், நமக்குள் பிரிவினைகள் கூடாது. இரண்டு வரி கொண்டு மூன்று நெறி கண்ட திருக்குறளின் வழியில் வாழ வேண்டும். அவன் மற்றவருக்கு நம்பிக்கை நட்சத்திரமாக திகழ வேண்டும். இது மிகவும் முக்கியமான கருத்து ஆகும். 'நாளை வருகின்ற வாழ்வு நமக்கென்று ஏழை முகம் பார்த்து சொல்வான்' என்ற வரி விரைவில் திமுக ஆட்சிக்கு வரும்; அப்போது ஏழைகளின் வாழ்வு சிறக்கும் என்ற கட்சி பிரச்சாரத்தையும் உள்ளடக்கியதாகும்.

மற்ற நடிகரின் படங்களில் நம்பிக்கை ஊட்டும் பாடல்கள் எழுதப்பட்டிருக்கும் ஆனால் படத்தின் முடிவில் அந்த நம்பிக்கை அற்று போய்விடும் அவர் தோற்றுப் போய்விடுவார். அல்லது இறந்துவிடுவார். நிஜ வாழ்வில் அவருக்கும் அந்த பாட்டுக்கும் தொடர்பில்லாமல் இருக்கும்.

ஆனால் எம்.ஜி.ஆர் பாடல்களில் வரும் தன்னம்பிக்கை கருத்து படத்தின் முடிவில் மெய்ப்பிக்கப்படும். அது தான் பெரிய வேறுபாடாகும். ***நல்லவன் வாழ்வான்*** *என்ற கருத்து மெய்ப்பிக்கப்படுவதால் அவரைப் பலரும் விரும்பினர். தன் சொந்த வாழ்விலும் அதை அவர் நிரூபித்து காட்டினார். அவர் ஒரு வெற்றித் திருமகனாக வாழ்க்கையின் இறுதி வரை இருந்தார் , இன்றும் அவரது வெற்றி குறித்து பலரும் ஆராய்கின்றனர் ; வியந்து போகின்றனர்.*

தன்மான உணர்ச்சி எதற்கு தேவை?

ஈ.வே. இராமசாமி பெரியார் 1925இல் சுய மரியாதை இயக்கத்தை தோற்றுவித்தார். பின்பு அதை 1944இல் திராவிட இயக்கமாக மாற்றினார். இந்த இயக்கம் தோன்றுவதற்கான காரணத்தை நாம் அறிந்தால் மட்டுமே திராவிட இயக்கங்களின் ஐம்பதாண்டு கால அரசியல் வெற்றியையும் தேவையையும் புரிந்துகொள்ள முடியும். பெரியார் சுய மரியாதையை அதாவது தன்மானத்தை வலியுறுத்தி இயக்கம் தொடங்கியிருக்காவிடில் இன்றும் ஒடுக்கப்பட்ட பட்டியல் சாதியினரும் பிறப்படுத்தப்பட்ட சாதியினரும் கல்வி அறிவில்லாமல் உடை உடுக்கவும் உணவுண்ணவும் வீடுகள் கட்டி குடியிருக்கவும் உரிமையில்லாமல் ஒடுங்கிக் கிடந்து இருப்பர். அக்காலத்தில் பெண்களுக்கு ஜாக்கெட் அணியும் உரிமை இல்லை. வெள்ளி வெண்கல பாத்திரங்கள் பயன்படுத்தும் உரிமை பிராமணர் குடும்பங்களுக்கு மட்டுமே இருந்தது. திண்ணை வைத்து வீடு கட்டி வாசல் வைக்கும் இருக்கும் உரிமை அனைவருக்கும்

கொடுக்கப்படவில்லை. வீட்டின் வாசல் இரண்டடி உயரம் மட்டுமே இருக்க வேண்டும். உழைப்பாளி வர்க்கத்தினர் முட்டிக்கு மேலே மட்டுமே உடை உடுத்த வேண்டும். மேல்துண்டு அணியும் உரிமை கிடையாது இதனால் தான் திராவிட முன்னேற்ற கழகம் உதயமானதும் கட்சிக்காரர்கள் தோளில் நீளமான துண்டை அணிந்தனர்.

குமரி மாவட்டத்தில் பெண்கள் மேலாடை அணியக்கூடாது என திருவாங்கூர் சமஸ்தானத்தில் சட்டம் இருந்ததால் தோள் சீலை போராட்டம் என்ற பெரிய போராட்டம் நடந்தது. மேலே தோளில் சேலையோ துண்டோ போட்ட பெண்கள் தீ வைத்து கொல்லப்பட்டனர். அவர்களின் மார்பு அறுத்து எறியப்பட்டது அவர்கள் பாலியல் வன்முறைக்கு உள்ளானார்கள். இதனால் பலர் கிறிஸ்தவ சமயத்தில் சேர்ந்தனர். பெண்களை அரை நிர்வாணமாக்கும் மதம் எங்களுக்கு வேண்டாம் என அவர்கள் மதம் மாறினர். மதத்தின் பெயரால் சுய மரியாதையை இழந்த மனிதர்கள் வாழ்ந்த காலம் ஆதலால் எம்.ஜி.ஆர் தன் திராவிட இயக்கத்தின் கருத்துக்களை சமூகச் சீர்திருத்த நோக்கில் தனது பாடல்களில் புகுத்தினார்.

“உன் நரம்போடு தான் பின்னி வளரனும்

தன்மான உணர்ச்சி”

என்று அரசிளங்குமரியில் அவர் பாடுவதற்குக் காரணம் அனைத்து சிறார்களும் அவர்கள் காலத்திலாவது மதமென்னும் பேய் பிடியாதிருக்க

வேண்டும் என்ற வள்ளலாரின் கருத்தின் வழியில் மதத்தை விட்டொழித்து மான மிகு வீரர்களாக உருவாக வேண்டும் என்பதே ஆகும். வாழ்வில் வெற்றி பெற முதல் வழி தன்னம்பிக்கையும் கடின உழைப்பும் ஆகும் என்பதை தன் ஒவ்வொரு பாட்டிலும் காட்சியிலும் சுட்டிக் காட்டியவர் எம்.ஜி.ஆர். அவர் கையெழுத்திடும் போதும்; உழைப்பவரே உயர்ந்தவர் என்று எழுதிக் கையெழுத்திடுவார்.

எம்.ஜி.ஆர். தன் மகன் எப்படி இருப்பான் என்று கற்பனை செய்யும் பாட்டில் இன்னொரு முக்கியக் கருத்தும் சொல்லப்பட்டிருக்கிறது. அக்காலகட்டத்தில் இந்தி திணிப்பை எதிர்த்து தமிழ் ஆர்வலர்கள் மத்திய மாநில அரசுகளோடு போராடி வந்தனர். அப்போது பலரும் தாய்மொழியாம் தமிழுக்காக தன் இன்னுயிரை ஈந்தனர். இந்தக் கருத்தையும் பாட்டில் சேர்த்துள்ளார் எம்.ஜி.ஆர்.

உயிரை தமிழுக்கும் உடலை மண்ணுக்கும்

உதவும் நாள் கண்டு துடிப்பான்

சுற்றிப் பகை வந்து சூழும் திரு நாளில்

வெற்றி தோள் தட்டி முடிப்பான்

தமிழுக்காக தன் உயிரைக் கொடுக்க வேண்டும் நாட்டிற்காக தன் உடலை அர்ப்பணிக்க வேண்டும் அவனே சிறந்த ஆண்மகன் என்ற வரைவிலக்கணத்தை இப்பாட்டின் மூலம் வகுத்துத் தருகிறார்.

இவ்வாறு ஒரு பாட்டிலேயே ஒரு சிறந்த ஆண் குழந்தை எப்படி இருக்க வேண்டும் அதை எப்படி வளர்க்க வேண்டும் என்று பாடம் புகட்டுகிறார் வாத்தியார்.

தாயின் கனவில் தந்தையாக வந்து பரஸ்பர மரியாதை வலியுறுத்தல்



தந்தையாகக் கனவு கானும்போதும் தந்தையான பிறகும் குழந்தை வளர்ப்பில் அக்கறை காட்டுவது பற்றிய பாடல்களை அடுத்து கால் ஊனமுற்ற ஒரு தாய் தன் கணவன் தன் பிள்ளைக்கு ஒரு தந்தையாகத் தன் பொறுப்பை நிறைவேற்றுவது குறித்து கனவு காண்பதாக அமைந்த பாட்டிலும் தந்தையின் பொறுப்புணர்ச்சி விளக்கப்படுகிறது. நல்ல வழியை பிள்ளைகளுக்கு காட்ட வேண்டியது ஒரு

தகப்பனின் கடமை, பிள்ளைகள் நாம் சொல்லும் அறிவுரைக்கு காதை மூடிக்கொள்வர்; ஆனால் கண்களை விரித்துப் பார்த்து நமது நடைமுறைகளை நம்பிக்கையைப் பின்பற்றுவர். அவர்கள் எதிர்பார்ப்பது நல்ல முன் மாதிரிகள். எனவே எம்.ஜி.ஆர் தன் தலைவனை அறிஞர் அண்ணாவை நல்ல முன் மாதிரியாக குழந்தைக்குக் காட்டுகிறார். அண்ணாவின் வழியில் நடந்தால் அவன் மானமிகு மனிதனாக தன்மானச் சிங்கமாக வருவான். தாய்மொழியை நேசிப்பான். எல்லோரையும் சாதி மதப் பேதமின்றி உடன்பிறப்பாகக் கருதுவான். மதத்தை மதிக்காமல் மனிதனை மதிப்பான் என்று எம்.ஜிஆர். நம்புகிறார்.

கண்ணன் என் காதலன் *படத்தில் வரும் கனவுப் பாட்டில் குழந்தையைக் குளிப்பாட்டி சீராட்டிப் பாராட்டும் எம்.ஜி.ஆர் தன் மகன்*

"சரித்திரம் புகழ்ந்திடும் அறிஞரின் வழி நடப்பான்" *என்கிறார். அதற்கு அந்த தாய்*

"இருப்பதைக் கொடுப்பதில் தகப்பனின் பேர் எடுப்பான்"

என்கிறாள். தன் மகன் தந்தையைப் போல் வள்ளலாக வருவான் என்று மகிழ்கிறாள். ஒரு குழந்தையிடம் தந்தை மற்றும் புகுந்த வீட்டாரை பற்றி ஒரு தாய் உயர்வாக மட்டுமே பேச வேண்டும்; இழிவாகப் பேசக் கூடாது என்பதற்கு இந்த வரி ஒரு நல்ல சான்று. இந்தப்பாட்டில் குழந்தையின் தந்தை அதன் தாயைப் புகழ்வதும் அந்த தாய் தன் கணவனைப் புகழ்வதுமாக ஒரு ஆதர்ச தம்பதியாக அந்தப்

பெற்றோர் திகழ்வர். இன்றைக்கு பல குடும்பங்களில் தந்தையைத் தாய்மார் கேவலமாகப் பேசுவதும் அதைப் பார்த்து பிள்ளைகளும் அப்பாவை மரியாதை இல்லாமல் பேசுவதும் சகஜமாகிவிட்டது. இது தவறான போக்காகும். தாய் தந்தைக்கு இடையில் பரஸ்பர அன்பும் மதிப்பும் மிகவும் முக்கியம் என்பதை இந்தப் பாடல் நமக்கு உணர்த்துகிறது.

இவை தவிர இன்னும் சில படங்களில் கைக்குழந்தையிடம் எம்.ஜி.ஆர் பாடும் பாட்டுக்கள் உண்டு. அவற்றைக் குறித்து வேறு தலைப்புகளில் காணலாம்.



4. பெற்றால்தான் பிள்ளையா - படம் தரும் பாடம்



வளர்ப்புத் தந்தையாக வந்து சொந்தத் தந்தையாகவே பிள்ளை வளர்க்கும் உரிமையை எம்.ஜி.ஆர் ***கன்னித்தாய்*** மற்றும் ***பெற்றால்தான் பிள்ளையா*** படங்களில் பெறுகிறார். இரண்டு கதைகளிலும் கதாநாயகிகளின் தியாகம் போற்றற்குரியதாக கதை அமைக்கப்பட்டிருந்தது. பெற்றால்தான் பிள்ளையா படம் எம்.ஜி.ஆருக்கு மிகவும் பிடித்த படம் என்று அவர் தனது பேட்டி

ஒன்றில் குறிப்பிட்டுருந்தார். இந்தப்படம் பற்றிய பேச்சு அவர் துப்பாக்கியால் சுடப்பட்டு மருத்துவமனையில் இருந்தபோதும் நீதி மன்றத்தில் வழக்கு நடந்த போதும் வந்தது. இந்தக் கட்டுரைக்கு அது தேவையில்லாவிட்டாலும் எம்.ஜி.ஆர் வாழ்வில் மிகுந்த முக்கியத்துவம் பெற்ற படம் என்பது குறிப்பிடத்தக்கது.

படத்தின் கதை

பெற்றால் தான் பிள்ளையாவில் மண்டபத்தில் கண்டெடுத்த குழந்தையை ஒரு ஏழை தொழிலாளி ஒழுக்கத்துடனும் பண்பாட்டுடனும் நன்றாக வளர்க்கிறான். இடையில் அந்தச் சிறுவனின் பெற்றோர் வந்து தன் மகனைப் பெற்றுக்கொள்கின்றனர். பின்பு அச்சிறுவன் தன் வளர்ப்புத் தந்தையை நினைத்து ஏங்குவது கண்டு மனம் பொறுக்காமல் அந்தப் பெற்றோர் இந்த தொழிலாளியிடமே பிள்ளையைக் கொடுத்து விடுகின்றனர். இது தான் கதை. இதில் ஏழை தொழிலாளியாக எம்.ஜி.ஆரும் சிறுவனாக பேபி ஷகிலாவும் நடித்தனர்.

மூலப்படம் - The Kid

பெற்றால் தான் பிள்ளையா படம் 1921ஆம் ஆண்டு ஜனவரி 21ஆம் நாள் வெளிவந்த ஆங்கிலப் படத்தின் தழுவல் ஆகும். தழுவல் என்றால் adaptation அதாவது கலைப்படைப்பின் மூலக்கதையை, கருவை மாற்றாமல் மற்றவற்றை தனது பண்பாட்டுக்கும் மொழிக்கும் இனத்துக்கும் ஏற்றபடி மாற்றி அமைப்பதாகும்.

சார்லி சாப்ளின் இயக்கித் தயாரித்து நடித்து



இசையமைத்து முதலில் வெளிவந்த ஊமைப்படம் The Kid. இப்படம் வசூலில் இரண்டாவது இடத்தை பெற்ற வெற்றிப்படம் ஆகும். ஐம்பது ஆண்டுகள் கழித்து மறு வெளியீட்டின் போது படம் இன்னும் கொஞ்சம் சுருக்கப்பட்டிருந்தது. இந்த படத்தைத் தழுவி எடுக்கப்பட்ட படம் தான் பெற்றால்தான் பிள்ளையா.

இதன் திரைக்கதையையும் வசனத்தையும் தமிழுக் கேற்ற படி எழுதியவர் ஆரூர் தாஸ் ஆவார்.

தமிழுக்காக செய்யப்பட்ட மாற்றங்கள்

ஆங்கிலக் கதையில் தவறான முறையில் பிள்ளை உண்டாகியதால் அதை பெற்று போட்டுவிட்டு தாய் போய்விடுவாள். தமிழில் ஒரு பணக்காரனால் ஏமாற்றப்பட்ட அபலைப்பெண் அவனிடம் நீதி கேட்டும் கிடைக்காமல் கோயில் மண்டபத்தில் பிள்ளையை வைத்துவிட்டு கடலுக்குள் இறங்கிவிடுவாள். ஆங்கிலத்தில் அவள் நடிகையாகி பிரபலமானவுடன் தன் பிள்ளையைத்

தேடுவாள் தமிழில் பணக்காரப் பெண்பித்தன் அதுவரை தான் மயங்கிக் கிடந்த ஒரு பெண் தனக்குத் துரோகம் செய்ததால் மனம் வருந்தி ஒரு விபத்தில் சிக்கிக் கால் ஒடிந்து மகனால் உயித் தண்ணீர் ஊற்றப்பட்டு திருந்தி தான் விரட்டிவிட்ட பெண்ணை ஏற்றுக்கொள்வான். தமிழ்க் கதாபாத்திரப் படைப்பில் தவறு செய்தவன் ஆணாக மாற்றப்பட்டிருக்கும். சார்லி சாப்ளின் அவரும் மற்றவர்களும் படத்தில் தேவதை வடிவில் இறக்கைகளோடு பறப்பதாகக் கனவு காண்பர். தமிழில் அது எம்.ஜி.ஆர். தன் காதலியுடன் காரில் பறப்பதாகக் கனவு காண்பார். ஆங்கிலப்படத்தில் விடுதியில் இருந்த ஒருவன் சன்மானத்துக்கு ஆசைப்பட்டு இவர்களைப் பற்றி போலிசுக்கு தகவல் கொடுப்பான். தமிழில் பணத்துக்காக எம்.ஆர்.ராதா [கதாநாயகியின் அண்ணன்] போலிசுக்குத் தகவல் கொடுப்பார்.

எம்.ஜி.ஆருக்காக செய்யப்பட்ட மாற்றங்கள்

எம்.ஜி.ஆர் நல்லவர் என்று காட்டுவதற்காக ஒரு மாற்றம் செய்யப்பட்டது. அது சிறுவனை அவர் நல்லவனாக வளர்த்ததாகும்.

ஆங்கிலத்தில் சார்லி சாப்ளின் ஜன்னலுக்கு கண்ணாடி பொருத்தும் வேலை செய்வார். அதற்காக சிறுவனை முதலில் அனுப்பி வீடுகளில் இருக்கும் கண்ணாடி ஜன்னல்களை கல்லைவிட்டு எறிந்து உடைக்கச் செய்வார். ஆனால் எம்.ஜி.ஆர். தன் மகனை மிகுந்த பாசத்துடன் ஒழுக்கத்துடன் வளர்ப்பார்.

குழந்தை கண்ணனின் தாய் கணவனால் கைவிடப்பட்ட மனைவி தானே தவிர தவறான முறையில் குழந்தை பெற்றவள் அல்ல. எம்.ஜி.ஆர் படத்தில் அவருடன் தொடர்புடையவர்களை நல்லவர்களாக காட்டுவது ஒரு மரபு. வில்லன் ஒருவன் மட்டுமே பொல்லாதவனாக இருப்பான்.

எம்.ஜி.ஆருக்காகப் புதிதாகச் சேர்க்கப்பட்டவை

அவர் ஒரு சிறந்த நடிகர் என்பதற்காக அவருக்கு நடிக்க வாய்ப்புள்ள காட்சிகள் சிலவும் சேர்க்கப்பட்டன. தமிழில் நீதிமன்றத்தில் எம்.ஜி.ஆர் **பெற்றால் தான் பிள்ளையா** என்று வாதாடும் வலுவான காட்சி உண்டு. பெற்றோரிடம் பிள்ளையைப் பறிகொடுத்த துக்கத்தில் தெருவில் பித்து பிடித்து எம்.ஜி.ஆர் அலைகின்ற காட்சிகள் சோகத்தை வரவழைக்கும். பிள்ளையும் அப்பாவுக்காக ஏங்கி அழுது காய்ச்சல் வந்து பிதற்றும்.

அடுத்து அவர் வல்லவர் என்று காட்டுவதற்காக படத்தின் இறுதியில் ஒரு சண்டைக் காட்சி சேர்க்கப்பட்டது. நம்பியார் பிள்ளையைக் கடத்திக் கொண்டு போகையில் எம்.ஜி.ஆர் அவனைக் காப்பாற்ற சண்டை போடும் காட்சியும் புதிதாக சேர்க்கப்பட்டிருக்கும். அப்போது சிறுவனை பீரோவுக்குள் அடைத்துவிட்டு அங்கு ஒரு கம்பியின் மீது தேளைவிட்டு அவனைப் பயமுறுத்தும்போது எம்.ஜி.ஆர் பதறிப்போய் அந்த தேளைக் கையில் எடுத்துக் கொள்வார்.

பீரோவின் சாவியைத் தர மறுத்து ஜாக்கெட்டுக்குள் போட்டு கொள்ளும் வில்லியின்

மீது தேளை எறிவது போல பாவனை காட்டி அந்த சாவியை அவளே தந்துவிடும்படி செய்வார். பின்பு தேளை வெளியே எறிவார். பெண் மீது தேளை எறியாமல் வெறுமனே பயமுறுத்தியதால் அவர் நல்லவர், பெண்களைத் துன்புறுத்தமாட்டார் எனக் கருதும் பெண் ரசிகைகளின் ஆதரவு அவருக்கு அமோகமாக கிடைத்தது.

குழந்தையால் கிடைத்த மகிழ்ச்சி

மகிழ்ச்சியானவனாக அறிமுகமாகும் ஏழை ஆனந்தன் [எம்.ஜி.ஆர்] தனக்கு ஒரு குழந்தை கிடைத்ததும் வாழ்க்கையில் ஒரு பிடிப்புள்ளவனாகிவிட்டான். "குழந்தையை வளர்க்குறதுக்காக என் சொந்த சுகத்தை கொஞ்ச நாள் ஒத்திப்போட நினைக்குறேன்" என்று தன் காதலியிடம் சொல்கிறான். மகன் தன் காலில் நிற்கும் நிலை வந்த பின்பு திருமணம் செய்துக்கொள்வதாக தன் காதலியிடம் சொல்கிறான். தான் எடுத்துக்கொண்ட தந்தை பொறுப்பை செவ்வனே நிறைவேற்றிய பின்பு கணவன் என்ற அடுத்த பொறுப்பை ஏற்க வேண்டும் என்ற மன உறுதி பாத்திரப்படைப்பிலும் வசனத்திலும் இங்கு வெளிப்படுகிறது. இதன் வெற்றி படத்தின் இறுதிக் காட்சியில் இருவரும் இணைந்து மகிழ்ச்சியாக கண்ணனுடன் சேர்ந்து தங்கள் வீட்டுக்குத் திரும்பும்போது தெரிகிறது.

வளர்ப்பின் பெருமை

ஐந்து வருடம் ஆகிவிட்டது. ஒரு நாள் சிறுவன் கண்ணன் வந்து தன் தந்தையிடம் நானும் வேலைக்கு போகிறேன் என்கிறான்.

“நீதான சொன்ன. பொய் சொல்லக் கூடாது, திருடக் கூடாது பிச்சை எடுக்கக் கூடாதுன்னு அதுதான் நான் ஏதாவது வேலைப் பார்க்க போறேன்.”

என்ற வசனம் குழந்தை வளர்ப்பின் பெருமையைக் காட்டுகின்றது. ஒரு தந்தை தன் பிள்ளைக்கு வறுமையிலும் செம்மை என்ற வாழ்க்கைத் தத்துவத்தைக் கற்றுக்கொடுக்க வேண்டும். பின் ஒரு காட்சியில் சிறுவன் கண்ணன் தன் தந்தைக்கு மருந்து வாங்க வந்த போது திருடன் என்று அவனைப் போலிஸ் பிடித்து கொண்டு போகிறது. அப்போது அந்தப் போலிஸ் நிலைய காட்சியிலும் எம்.ஜி.ஆர் தான் அருமையாக பிள்ளை வளர்த்த விதத்தை எடுத்துச் சொல்வார்.

வீட்டின் வாசலில் பெயர்ப்பலகை

இந்த படத்தில் வீட்டின் வாசலில் பெயிண்டர் ஆனந்தன் என்ற பெயர்ப்பலகை மாட்டப்பட்டிருக்கும். அது தன் தொழிலுக்கு அவர் அளிக்கும் மரியாதை ஆகும். இதைப் பார்த்து அந்தக் காலத்தில் நிறைய பேர் குறிப்பாக எம்.ஜி.ஆர் ரசிகர்கள் தங்கள் வீடுகளில் தமது தொழிலை குறிப்பிட்டு பெயர்ப் பலகை மாட்டினர். அதுவரை பி.ஏ., எம். ஏ., என பட்டப் படிப்பு படித்தவர்கள் மட்டுமே பெயர்ப்பலகை மாட்டிவைத்தனர்.

வீட்டின் உள்ளே பெரியவர்கள் படங்கள்

பொதுவாக எம்.ஜி.ஆர் படங்களில் வீடு என்றால் அங்கு நம் வாழ்க்கைக்கு முன்மாதிரியாக வாழ்ந்தவர்கள் படங்களை வைக்க வேண்டும் என்பதைக் காட்சிப்பூர்வமாக விளக்கியிருப்பார்.

அவர் வீட்டில் அண்ணா, திருவள்ளுவர், புத்தர், இயேசு பிரான் ஆகியோரின் படங்கள் காணப்படும்.

இந்தப்படத்தில் வீட்டின் உள்ளே தந்தையும் மகனும் சிரித்தபடி சேர்ந்து இருக்கும் குளோசப் புகைப்படம் ஒன்றும் மாட்டப்பட்டிருக்கும். இதிலும் அவர் பலருக்கு முன்மாதிரியாக இருந்தார். இந்த 'போசில்' அதன் பிறகு பலரும் படமெடுத்து மாட்டினர். அதுவரை அனைவரும் 'உம்மென்று' இருக்கும் குடும்பப் படங்களும், பிள்ளைகள் தனியாக இருக்கும் படங்களும் மட்டுமே வீடுகளின் சுவரில் தொங்கின.

பாடல்களில் நற்கருத்துக்கள்

இந்தப்படத்தில் பிள்ளையைக் கண்டெடுக்கும் முன்பே அவர் சிறுவர்களோடு சேர்ந்து நல்ல நல்ல பிள்ளைகளை நம்பி என்ற பாட்டை பாடுவார். அதில் அவர்களுக்கு அன்னை தந்தையின் பெருமையை கற்றுக்கொடுப்பார். தவறு செய்யக் கூடாது என்று புத்திமதி சொல்வார். வாழும் வழியைச் சொல்லிக் கொடுப்பார். பாட்டின் முடிவில் தன் சட்டையின் ஓட்டை பையில் இருந்து விழுந்த காசை எடுத்துகொடுத்த சிறுவனைப் பாராட்டும் வகையில் அவனுக்கு ஒரு முத்தம் கொடுப்பார்.

தனிப் பெற்றோரின் பொறுப்புக்கள்

தாய் தந்தை என இருவருமாக இல்லாமல் தனி ஒருவராக பிள்ளை வளர்க்கும்போது அவர்களுக்குப் பொறுப்பு அதிகமாகி விடும். இதை இப்படத்தில் காணலாம். ஒரு போதும் எம்.ஜி.ஆர் தன் பிள்ளையைத் தன் காதலியிடம் ஒப்படைக்க

மாட்டார். குழந்தை வந்ததும் அவனை வளர்க்க ஒரு நிரந்தர வருமான வேண்டுமே என்று தூர் வாரும் வேலைக்குப் புறப்படுவார். அப்போதும் குழந்தையைத் தன் தோளில் தூக்கி செல்வார். குழந்தை சிறுநீர் கழித்ததும்,

“பன்னீர் வாஷ் பண்ணிட்டியா இனி துணியை நான் டிரை வாஷுக்கு தான் போடனும்” என்று சிரித்தபடி சொல்வார்.

இக்காலத்துக்கு இப்படம் தரும் பாடம்

சிறிது நேரம் அச்சிறுவனுடன் காதலி சரோஜாதேவி பேசிக்கொண்டிருந்தது விபரீதமாகப் போய்விடும் சிறுவன் கண்ணன் தன் உண்மையான தந்தை ஆனந்தன் இல்லை என்று புரிந்துகொள்வான். எனவே தனித்து வாழும் தாய்மாரோ தந்தையரோ பிள்ளைகளை அடுத்தவரிடம் விடாமல் தானே பொறுப்பாக வளர்க்க வேண்டும் என்பது இந்தக் காலத்துக்கு இப்படம் கற்றுத்தரும் பாடம் ஆகும். பெற்ற பிள்ளையோ, வளர்ப்பு பிள்ளையோ அதைச் செம்மையாக வளர்க்க வேண்டிய கட்டாயம் அதன் பெற்றோருக்கு அல்லது பொறுப்பாளருக்கு உண்டு. பிள்ளை வளர்ப்பின் போது இவர்கள் தன் சொந்த சுகங்களை தள்ளிவைக்க வேண்டும் என்பதும் இப்படம் கற்றுத்தரும் பாடம் ஆகும்.


கதைக்குக் கால் உண்டா?

பொதுவாக கிராமங்களில் பாட்டிமார் கதை சொல்லும்போது நம்ப முடியாத அதீத கற்பனைகள் வரும். அப்போது அவற்றைக் கேட்கும் குழந்தைகள் கண்டிப்பாக நம்பியாக வேண்டும், என்பர். அத்துடன்

கதைக்கு கால் உண்டா என்று கேட்பது வழக்கம். அதாவது கதையில் முழுக்க முழுக்க உண்மை மட்டுமே இருக்காது அது கற்பனையில் மிதக்கும்; பறக்கும் ஏனென்றால் அதற்கு கால் கிடையாது என்று விளக்குவர். ஆனால் எம்.ஜி.ஆர் இந்த சொலவடையை வேறு விதமாகக் கையாண்டுள்ளார். அவர் தன் படத்துக்கு கதை சொல்ல ஆட்கள் வரும்போது இந்தக் கதையில் கால் [துணை எழுத்து] இருக்கிறதா என்று கேட்பார். கால் இருந்தால் தானே படம் பாடம் ஆகும் என்பாராம். தனது ஒவ்வொரு படமும் மக்களுக்கு ஒரு பாடமாக விளங்க வேண்டும் என்பதில் அவர் காட்டிய அக்கறையினால் இன்றைக்கும் இப்படம் தனித்து வாழும் பெற்றோருக்கு தமது பொறுப்பின் மகிமையை உணர்த்தும் பாடமாக விளங்குகிறது. படத்திற்குக் கால் இருப்பதால் படம் பாடமாகி இன்று வரை தன் சொந்தக் காலில் நிற்கிறது.



5. எம்.ஜி.ஆரின் சொந்த வாழ்க்கையில் குழந்தை வளர்ப்பு



எம்.ஜி.ஆர் தன் வீட்டில் **வளர்ந்த பிள்ளைகளைத் தன் பிள்ளைகளாகக் கருதி பொறுப்புடன் வளர்த்ததைச் சில சான்றுகளால் அறியலாம்.**

பிறந்த நாள் கொண்டாட்டம்

அவர் வீட்டில் எப்போதும் யாருக்காவது பிறந்த நாள் திருமண நாள் என்று வந்துகொண்டேயிருக்கும் அப்போது அவர் ஆங்கில நாகரிகப்படி கேக் வெட்டுவதை விரும்பமாட்டார். எரியும் மெழுகுவர்த்தியை வாயால் ஊதி அணைப்பதையும் எம்.ஜி.ஆர் விரும்பியதில்லை.

நல்ல விருந்து சாப்பாடு வைத்து அனைவருடன் பகிர்ந்துண்டு மகிழ்வதையே அவர் விரும்பினார். .இத்தகவலை ஜானகி அம்மையாரின் அண்ணன் மகள் சுதா விஜயன் சொல்லிக் கேட்டிருக்கிறேன்.

மேலும் நடிகை ஜி சகுந்தலா எம்.ஜி.ஆரின் நாடகங்களில் அவருடன் நடித்தவர். அவர் ''எம்.ஜி.ஆரும் அவர் அண்ணனும் சேர்ந்து வாழ்ந்த வீட்டுக்கு போய் வரும்போது பெரிய திருகு கூஜாவில் அண்ணி பாயாசம் கொடுத்துவிடுவார்கள்'' அவர்கள் வீட்டில் குழந்தை பிறந்திருக்கும் அல்லது யாருக்காவது பிறந்தநாள் வரும், எப்போதும் ஏதாவது விசேஷம் இருந்துகொண்டே இருக்கும். வீட்டுக்குக் கொண்டு போய் கொடு என்று என்னிடம் பாயசம் கொடுத்துவிடுவார்கள்'' என்று தன் பேட்டியில் சொல்லியிருக்கிறார்.

எம்.ஜி.ஆர் பேச முடியாமல் இருந்தபோது அவருக்கு பழைய நினைவுகளைக் கொண்டுவரவும் பேச வைக்கவும் பயிற்சி அளித்தபோது ஜி.சகுந்தலாவை அழைத்து அவரிடம் தினமும் நாடக அனுபவங்களைப் பகிர்ந்து கொள்ளும்படி மருத்துவர்கள் கூறினர்.

தமிழ்ப்பற்று

எம்.ஜி.ஆர் தன் படங்களில் மட்டும் தமிழின் பெருமை பற்றி பாடுவதில்லை. அவர் மனதளவில் தமிழ்ப் பற்று கொண்டவராகவே இருந்தார். அதை தன் வீட்டிலும் நாட்டிலும் கடைப்பிடித்தார், தமிழ் பற்றாளராக வாழ்ந்து காட்டினார். தாய்த்தமிழுக்கு தனியாக ஒரு பல்கலைக்கழகம் ஒன்றையும் தஞ்சையில் நிறுவினார். உலகத் தமிழ் சங்கத்தை

மதுரையில் தொடங்க எட்டு கோடி ரூபாய் ஒதுக்கினார்.

எம்.ஜி.ஆர் தன் வீட்டில் யாரும் காலையில் குட் மார்னிங் என்று சொல்வதை விரும்பமாட்டார். அழகாக 'காலை வணக்கம்' என்று சொல்லும்படி கூறுவார். மேலும் வீட்டில் அனைவரும் தமிழில் தான் பேச வேண்டும் என்று கட்டளை பிறப்பித்திருந்தார். அவரும் தமிழில் தான் பேசுவார். அவர் அம்மா இருந்தவரை தமிழ் தெரியாத மருமகளிடமும் தன் சம்பந்தக்காரரிடமும் மலையாளத்தில் பேசினார். பின்பு எல்லோரும் தமிழில் நன்றாகப் பேசத் தொடங்கிவிட்டனர்.

ஒரு முறை எம்.ஜி.ஆர் கேரளாவில் ஒரு கூட்டத்தில் பேசும்போது அவரை மலையாளத்தில் பேசும்படி கூட்டத்தினர் வற்புறுத்தினர். ஆனால் அவர் மறுத்துவிட்டார். 'எனக்கு மலையாளம் தெரியாது. எனக்குத் தமிழ் மட்டுமே தெரியும் என்னை வாழவைத்த தமிழில் தான் நான் பேசுவேன் பிடிக்காதவர்கள் எழுந்துபோய்விடுங்கள்' என்று கோபமாகக் கூறிவிட்டார்.

அவர் நடித்த 'ஜெனோவா' படத்தை மலையாளத்தில் மொழிமாற்றம் செய்தபோது அவர் பேசிய வசனங்கள் மலையாளம் மாதிரி இல்லை என்பதால் அவருக்குப் பதிலாக இன்னொருவரைப் பேச வைத்தனர். அவருக்கு மலையாளம் நன்றாகப் பேச வராது. பேசினால் புரிந்துகொள்வார் சில வாக்கியங்கள் பேசுவார். எம்.ஜி.ஆர் ஆங்கிலம் நன்றாகப் பேசக் கற்றிருந்தார் என்று கமலஹாசன் தன் பேட்டி ஒன்றில் குறிப்பிட்டிருந்தார், அவரது

அண்ணன் நாடகத்தில் ஆங்கிலப் பாடல்களைச் சிறப்பாகப் பாடுவார். வீட்டில் இருவரும் தம் குடும்பத்தினருடன் தமிழில் தான் பேசி வந்தனர்.

பெரியவருக்கு மரியாதை

எம்.ஜி.ஆர் எல்லோருக்கும் மரியாதை கொடுத்துப் பேசுவார். அது போலவே அவர் தனது வீட்டுப் பிள்ளைகளையும் வளர்த்தார். சில பிரபல நடிகர்கள் எல்லோரையும் போடா வாடா என்றும் பட்டப்பெயர் வைத்தும் மரியாதை இல்லாமல் பேசுவார்கள். ஆனால் எம்.ஜி.ஆர் வயதில் குறைந்தவர்களை தம்பி வாங்க, போங்க என்று தான் பேசுவார். மூத்தவர்களை 'அண்ணன்' என்றும் 'அம்மா' என்றும் அழைத்து பேசுவார். சரோஜாதேவி அண்மையில் ஒரு தமிழ்ப்படத்தில் நடிக்க வந்திருந்தபோது யாரோ கிழவி என்று குறிப்பிட்டதை கேட்டு வருத்தப்பட்டார். அப்போது அவர், ''எம்.ஜி.ஆர். இருந்தபோது மூத்த நடிகர் நடிகையருக்கு இந்த மரியாதை குறைவு ஏற்பட்டதில்லை. அவர் யாரையும் மரியாதை இல்லாமல் பேசமாட்டார்; மற்றவர் பேசுவதை கேட்டுக்கொண்டு அமைதியாகவும் இருக்கமாட்டார். அவர் பெரிசு, கிழவி என்று சொல்லமாட்டார் அந்த 'பெரிய அம்மாவை கூப்பிடுங்கள்' என்று தான் சொல்வார்' என எம்.ஜி.ஆர் மற்றவருக்கு தந்த மரியாதையை பற்றிக் கூறி பெருமைப்பட்டார். எம்.ஜி.ஆர். ஒரு முன்மாதிரியாக (POSITIVE ROLE MODEL) வாழ்ந்து காட்டினார்.

ஒரு முறை தன் வீட்டில் குழந்தைகளைப் பள்ளிக்கூடத்துக்கு அழைத்துப்போக ரிக்க்ஷா

வந்தபோது ‘ஏ ஆறுமுகம் கொஞ்சம் இரு வர்றோம்’ என்று பிள்ளைகள் சொன்னதைக் கேட்டு எம்.ஜி.ஆர் கோபித்துக்கொண்டார். ரிக்ஷக்காரரை ‘அண்ணன்’ என்றே அழைக்க வேண்டும் என்று அறிவுரை கூறினார். அன்று முதல் அவர் வீட்டு பிள்ளைகள் வேலைக்காரர் வெளியாட்கள் யாரையும் மரியாதை இல்லாமல் பேர் சொல்லி அழைப்பது கிடையாது.

Charity begins at home என்பது போல நற்பண்புகளும் பழக்க வழக்கங்களும் வீட்டில் இருந்து தான் வளர்கின்றன. எந்த அதிகாரியையும் எம்.ஜி.ஆர் மற்ற தலைவர்களைப் போல வாய்யா போய்யா என்று அழைத்தது கிடையாது.

இலவசப் பள்ளிக்கூடம்

எம்.ஜி.ஆர். கல்வியின் முக்கியத்துவத்தைப் பகுத்தறிவின் இன்றியமையாமையை தன் பாடல்களில் புகுத்தியிருப்பார். அது சினிமாவுக்காக செய்தது மட்டுமல்ல; அவர் தன் வாழ்வில் முக்கியம் என்று கருதி செயல்பட்டு வந்த நடைமுறை ஆகும். அவர் கோடம்பாக்கத்தில் சினிமா துறையினரின் பிள்ளைகள் கல்வியறிவு பெற வேண்டும்; தனக்குக் கிடைக்காத கல்வி இவர்களுக்காவது கிடைக்க வேண்டும் என்ற நல்லெண்ணத்தில் இலவசப் பள்ளிக்கூடம் ஒன்றைத் தொடங்கி நடத்தினார். சினிமாக்காரரின் பிள்ளைகள் படிக்க வசதியின்றி சினிமாவிலோ மற்ற ஆபத்தான, தவறான வழிகளிலோ போய்விடக் கூடாது என்ற சமூக அக்கறை அவருக்கு நடிகராக இருக்கும்போதே இருந்தது. அவர் சினிமா துறையினரின் பிள்ளைகளைத் தன் சொந்தப் பிள்ளைகளைப் போல

கருதினார். அதனால் இலவசமாக கல்வி அளிக்க பள்ளிக்கூடம் ஒன்றைக் கட்டினார்.

ஒரு சுதந்திர தினத்தன்று எம்.ஜி.ஆர் தனது பள்ளியில் கொடி ஏற்றுவதாக இருந்தது. அவர் மிகுந்த மகிழ்ச்சியுடன் வந்து விழாவில் கலந்துகொண்டார். ஆனால் கொடி ஏறவில்லை, சிக்கிக்கொண்டது. ஏழாம் வகுப்பு படிக்கும் ஒரு சிறுவன் ஓடிவந்து அந்தச் சிக்கலை எடுத்துவிட்டான். அவர் அவனையே கொடியேற்றும்படி கூறினார். சிறப்புரையாற்றும்போது "நான் மிகுந்த ஆணவத்துடன் வந்துவிட்டேன். என் பள்ளியில் நான் கொடியேற்றப் போகிறேன் என்ற ஆணவத்துக்கு இந்த சிறுவன் பாடம் கற்றுக்கொடுத்துவிட்டான். இனி இந்த பள்ளியில் மாணவர்களே ஆண்டுதோறும் கொடி ஏற்றட்டும்' என்றார். அன்று முதல் மாணவர்களே கொடி ஏற்றினர். தனது பள்ளியில் தான் கொடி ஏற்றுவதை கூட ஆணவம் என நினைத்து அந்த எண்ணத்தை மாற்றிக்கொண்ட எளிய மனிதர் எம்.ஜி.ஆர். தனக்கு ஏற்பட்ட அனுபவங்களை சுய அலசல் [SELF ANALYSIS] செய்து புதிய முடிவுகளுக்கு வரும் அற்புத மனிதர்.

சத்துணவு திட்டம்

எம்.ஜி.ஆர். காலத்தில் பள்ளிக் குழந்தைகளுக்கு சத்துணவு திட்டம் தொடங்கப்பட்டது. இது அரசு பள்ளிகளில் மட்டுமல்ல; அரசு உதவி பெறும் அனைத்து பள்ளிகளிலும் அனைத்து மாணவர்களுக்கும் பன்னிரெண்டாம் வகுப்பு முடிக்கும் வரை தொடங்கப்பட்டது. குழந்தை பால்குடி தவிர்த்து திட உணவு உண்ணத்தொடங்கிய நாள் முதல் இத்திட்டம்

உணவளித்தது தான் இதன் சிறப்பம்சம் ஆகும். குழந்தை பிறந்து நான்கு மாதம் முதல் சத்துமாவுருண்டைகள் சத்துணவு மையத்தில் வழங்கப்படும். பள்ளி வகுப்பு முடிக்கும் வரை மதிய உணவு வருடம் முழுக்க வழங்கும் வகையில் இத்திட்டம் தொடங்கப்பட்டது. இதனை அவர் தனது பள்ளியில் எப்போதோ தொடங்கிவிட்டார். தான் நடித்து சம்பாதித்த பணத்தில் பள்ளிகூடம் கட்டி அங்கு படித்த மாணவர்களுக்கு இலவச கல்வி அளித்து இலவச உணவும் அளித்து வந்தார். அவர் தன சொந்த வாழ்வில் நடத்தி வந்தவற்றையே ஆட்சிக்கு வந்த பிறகு பெரிய அளவில் அரசின் திட்டமாகக் கொண்டுவந்தார். ஆட்சியும் அரசும் அவர் செய்துவந்த பணிகளை பெரியளவில் செய்ய அவருக்கு நல்லதொரு வாய்ப்பை அளித்தது.



எம்.ஜி.ஆரின் பள்ளியில் மதிய உணவு முழுமையான சத்துணவாக அனைவருக்கும் இலவசமாக வழங்கப்பட்டு வந்தது. ஒரு நாள் எம்.ஜி.ஆர் அங்கு திடீரென மதியம் வந்தார்



அப்போது குழந்தைகளுக்கு மோர் வழங்கப்படாதது கண்டு மனம் கொதித்தார். பால்காரரர் வரவில்லை என்று தலைமை ஆசிரியர் காரணம் கூறினார். உடனே எம்.ஜி.ஆர் தன் பழைய நண்பரான கே.பி.கே.கேசவனை பள்ளிக்கு அருகில் வீடு பார்த்து அமர்த்தினார். அடிக்கடி பள்ளிக்கு போய் அங்கு சாப்பாடு முறையாக பரிமாறப்படுகின்றதா என்பதை கவனிக்கும்படி பணித்தார். சிறுவனாக இருந்தபோது ஒரு வேளை சாப்பாட்டுக்காக தான் ஐந்து வயதில் தன் அன்னையை பிரிந்து நாடக கம்பெனியில் போய் இருந்ததை நினைத்துப் பார்த்த அவர் தனக்கு வசதி வந்ததும் தன் துறை சார்ந்த சிறுவர்களுக்கும் அந்த நிலை வந்துவிடக் கூடாது என்று இலவச பள்ளிக்கூடம், இலவச மதிய உணவு என வழங்கினார்.

எம்.ஜி.ஆர் முதலமைச்சரான பிறகு ஆட்சிப்பளு காரணமாக அவரால் முன்பு போல

இந்த பள்ளியைக் கவனிக்க இயலவில்லை. அப்போது இந்த பள்ளியில் சிறியளவில் கட்டணம் வாங்குவதாக அறிந்து ‘ஒரு ரூபாய் கூட வாங்கக் கூடாது’ எனத் தடுத்துவிட்டார். படங்களில் நடித்து வந்த போது அவர் தனக்கு முதலமைச்சர் பதவி கிடைக்கும் என நம்பி சிறுவருக்கு புத்திமதி பாடல்களைப் பாடவில்லை; பள்ளிக்கூடம் கட்டவில்லை; இலவச உணவு வழங்கவில்லை. அவர் நடிகராக இருந்தபோதே தன்னால் முடிந்தவரை சிறுவர்களுக்கு உதவினார். இலவச மருத்துவமனை ஒன்றும் ஆரம்பித்திருந்தார். அதை தொடர்ந்து நடத்த இயலவில்லை. அவர் படங்களிலும் சொந்த வாழ்விலும் பெரும்பாலும் ஒன்று போலத் தான் இருந்தார்.

எம்.ஜி.ஆரின் தந்தை கோபி சார்

எம்.ஜி.ஆரின் தந்தை கோபால மேனன் கேரளாவில் மாஜிஸ்ட்ரேட்டாக இருந்தபோது ஒரு விதவையில் சொத்தை அவரது குடும்பத்தினர் அபகரிக்க நினைத்தனர். ஆனால் அவர் அதற்கு இடம் கொடுக்காமல் அந்த விதவைக்கே அவரது சொத்து கிடைக்கும்படி தீர்ப்பளித்தார். இதனால் அவர் மீது அவப்பெயர் சுமத்தி ஊரை விட்டு விலக்கி வைத்துவிட்டனர். அதனால் அவர் தன் மனைவி சத்தியபாமா மற்றும் நான்கு குழந்தைகளுடன் நாடு விட்டு நாடு சென்றார். இலங்கைக்கு போய் கண்டி நகரில் இருந்த பள்ளிக்கூடம் ஒன்றில் தலைமை ஆசிரியராக பணியமர்ந்தார். அங்கு போன பிறகு காமாட்சி, தங்கமணி என்ற அவரது இரண்டு பெண் குழந்தைகளும் நோய்வாய்ப்பட்டு இறந்து போயின. ஆனால் பூரணச் சந்திரன் போல எம்.ஜி.ஆர் பிறந்தார்.

அவர் வைகாசி விசாகத்தனறு பிறந்தார். போயா [புத்தர் பிறந்த நாள்] தினத்தன்று பிறந்ததால் அவர் பெரும் புகழ் அடைவார் என்று புத்த துறவியான ரத்னபாலா அப்போது சொல்லியிருக்கிறார்.

எம்.ஜி.ஆரின் தந்தையார் ஒரு கண்டிப்பான வாத்தியார். ஒரு நாள் ஒரு பணக்காரர் ‘ஏன் என் மகனை அடித்தீர்கள்’ என்று கேட்டதற்கு ‘படிக்காவிட்டால் கண்டிக்க வேண்டியது ஆசிரியரின் கடமை. என் கடமையை தான் நான் செய்தேன். உங்களுக்கு விருப்பமில்லை என்றால் அழைத்து சென்றுவிடுங்கள்’ என்று கண்டிப்பாக சொல்லிவிட்டார். அவரது நல்ல பண்புகளுக்காக அவரை அந்த பகுதியினர் கோபி சார் என்று அழைத்து மகிழ்ந்தனர். அவர் அங்கிருக்கும்போதே ஒரு நாள் மாரடைப்பால் இறந்துவிட்டார். அவர் நினைவாக அந்த தெருவுக்கு கோபி சார் தெரு எனப் பெயரிட்டனர். தன் தந்தை வழியில் எம்.ஜி.ஆரும் பிள்ளைகளிடம் கண்டிப்பாக இருந்திருக்கிறார்.

எம்.ஜி.ஆர் படங்களில் அவர் சிறுவர்களுக்கு பாடியிருக்கும் பாட்டுக்களின் கருத்துக்கள் யாரோ எழுதி யாரோ பாடியவை அல்ல. அவை அனைத்தும் எம்.ஜி.ஆரின் சொந்த கருத்தின் பிரதிபலிப்புகளே ஆகும்.

6. எம்.ஜி.ஆரின் சிறுவர் பாடல்களில் 'உடலை உறுதி செய்' கருத்து



எம்.ஜி.ஆர் தன்னை சந்திக்கும் அனைவரிடமும் அடிக்கடி சொல்லும் அறிவுரை தேகப்பயிற்சி செய்ய வேண்டும் என்பதாகும்.

அவர் இறப்பதற்கு முதல் நாளன்று பகலில் தன்னைக் காண வந்திருந்த கோவை ஓட்டல் அதிபர் குடும்பத்துச் சிறுவனிடம் 'என்ன இப்படி குண்டா இருக்கிற. எக்சர்சைஸ் பண்ணு. அடுத்த முறை வரும்போது இளைச்சு இருக்கணும்' என்று சொல்லி அவனது வாட்சை வாங்கி தனது கையில் கட்டிக்கொண்டு விளையாடினார். அன்று மூன்று மணி வரை சாப்பிடாமல் அந்த சிறுவனுடன் விளையாடிக்கொண்டும் அந்த குடும்பத்தினரிடம் பேசிக்கொண்டும் இருந்தாராம்.

மாணவருக்கு உடற்பயிற்சி ஆசிரியராக எம்.ஜி.ஆர்.

சிறுவராயினும் பெரியவராயினும் உடலை உறுதி செய் என்பது எம்.ஜி.ஆரின் தாரக மந்திரம். அதனால் தான் அவரது படங்களில் அவர் வாத்தியார் வேடமிடும் கதாபாத்திரம் இருந்தால் அதை உடற்கல்வி ஆசிரியராக ஆக்கிக்கொள்வார். ஆனந்த ஜோதியில் சிறுவர்கள் பங்கேற்கும் "ஒரு தாய் மக்கள் நாமென்போம்" என்ற பாட்டு அந்தக் காலத்தில் திண்டுக்கல்லிலும், மலேசியாவில் தமிழர்கள் வாழும் ஊர்களில் சில பள்ளிக்கூடங்களில் காலையில் தினமும் பாடப்பட்டதுண்டு. இப்படத்தில் சிறுவன் கமலஹாசனுக்கு முன் மாதிரி மனிதராக எம்.ஜி.ஆர் இருப்பார். அவர் சொல்படி கேட்டு திருத்தமாக வாழ வேண்டும் என்று அந்தச் சிறுவன் பேசும் காட்சிகள் உண்டு.

பணம் படைத்தவன் *படத்திலும் அவர் தனக்கு உடற்பயிற்சி ஆசிரியர் வேலை கிடைத்திருப்பதாக தன் மனைவியிடம் வந்து சொல்வார். அந்தப் படத்தின் தொடக்கத்தில் அவர் ஒரு விளையாட்டு வீரராக பல பரிசுகள் வாங்கி வருவதாக ஒரு காட்சியில் நடித்திருப்பார்.*

நீரும் நெருப்பும் *படத்தில் முதல் பாட்டான* **கடவுள் வாழ்த்து பாடும் இளங்காலை நேரக் காற்று** *பாட்டுக் காட்சியில் சிறுவர்களுடன் நடித்திருப்பார் அப்போது அவர்களுடன் அவர் விளையாட்டாக கத்தி சண்டை போடும் காட்சி அவர்களுக்கு இடையே கத்தியுடன் பாடிக்கொண்டு வரும் காட்சிகள் அழகாக நயமாக எடுக்கப்பட்டிருக்கும்.*

நாடும் வீடும் நம்மால் என்றும்

நலம் பெற வேண்டாமோ –அந்த

கடமைக்காக உடலும் மனமும்

பலம் பெற வேண்டாமோ

என்று அச்சிறுவர்களுக்கு உடலை உரமேற்றினால் நம் வீட்டையும் நாட்டையும் காக்க முடியும் என்று எடுத்து கூறுவார். சிறுவர்களும் இப்பாட்டில் பல்வகையான் உடற்பயிற்சிகளை செய்து காட்டுவர்.

சிறுவர்களுக்கு விளையாட்டின் பயன்

விளையாட்டு என்பது சிறுவர்களிடம் சுய கட்டுப்பாட்டை மேம்படுத்த உதவும் ஒரு எளிய வழிமுறை ஆகும். ஒரு விளையாட்டு விளையாடும் போது அவர்கள் அதன் விதிமுறைகளுக்கு கட்டுப்பட்டு விளையாடுவர் அப்போது கட்டுப்பாடு என்ற உயர்குணத்தை பழகிக் கொள்வர். சிறுவர்களுக்கு உடல் வளர்க்கும் பயிற்சியாக விளையாட்டு திகழ்கிறது.

உடலை வளர்ப்பது தவிர, விளையாட்டு என்பது தனது கருத்தை வெளிப்படுத்தும் திறன், மற்றவர் சொல்வதை புரிந்துகொள்ளும் திறன் மற்றும் கூட்டுணர்வு ஆகிய பண்புகளையும் பிள்ளைகளிடம் வளர்க்கும். இதனை உணர்ந்த எம்.ஜி.ஆர் தனது படங்களில் சிறுவர்களுக்கு ஆர்வமூட்டும் நோக்கத்தில் பல விளையாட்டு காட்சிகளை வைத்ததுண்டு. எம்.ஜி.ஆருக்கு மற்ற நடிகர்களை விட சிறுவர் ரசிகர்கள் ஏராளம்.

பசுமரத்தாணி போலப் பதிந்து விட்ட எம்.ஜி.ஆரை இப்போது அவர்கள் கிழவர்களான பிறகும் கூடப் பிரிக்க இயலவில்லை. அப்போதே பிள்ளைகளிடம் ஒழுக்கம் கட்டுப்பாடு உயர்பண்பு ஆகியவற்றை வலியுறுத்தி வசனங்களும் பாடல் காட்சிகளும் வைக்கும்படி எம்.ஜி.ஆர் இயக்குனரிடம் கூறி அதை செயல்படுத்தியது இன்றும் அவருக்கு ரசிகர் பலத்தைத் தக்க வைத்துள்ளது.

குழந்தையின் முழு வளர்ச்சி

குழந்தையின் வளர்ச்சி என்பது உடல் ரீதியாகவும் மன ரீதியாவும் சமூக ரீதியாகவும் அமைய வேண்டும் என்பது உளவியலாரின் கருத்தாகும். எம்.ஜி.ஆரின் அரசிளங்குமரி படத்தில் வரும் பாட்டு

“ஆளும் வளரணும் அறிவும் வளரணும் அது தாண்டா வளர்ச்சி!”

என்ற பாட்டு ஒரு குழந்தையின் முழு வளர்ச்சியை விவரிக்கிறது.

“சின்னப்பயலே சின்னப்பயலே சேதிகேளடா”

என்ற இந்தப் பாட்டையும்; நாடோடி மன்னன் படத்தில் வரும்

“தூங்காதே தம்பி தூங்காதே” *பாட்டையும் மலேசியாவில் 1960களில் தமிழர் படிக்கும் பள்ளிக்கூடங்களில் தினமும் காலையில் பாடும் பழக்கம் இருந்தது. எம்.ஜி.ஆர் படங்களில் பெண்களும் சடுகுடு, சிறகு பந்தாட்டம், கிளித்தட்டு, போன்ற விளையாட்டுக்களை ஆடுவதாகவும் காட்டியதுண்டு. குடும்பத் தலைவன் படத்தில் பல*

விளையாட்டுக்களில் விளையாடி எம்.ஜி.ஆர் பரிசுகளை வாங்கி குவிப்பார். **பணம் படைத்தவன்** படத்தில் தடகள வீரராக கல்கத்தாவிற்கு போய் குண்டெறிதல், ஓட்டப்பந்தயம், ஈட்டி எறிதல் போன்றவற்றில் பரிசுகள் வாங்கி வருவார். இந்த விளையாட்டுகளில் அவர் பங்கு பெறுவதை படத்தில் காட்டுவார்கள்.

உடற்பயிற்சியில் ஈடுபாடு கொண்ட எம்.ஜி.ஆர்

உடற்பயிற்சியின் அவசியம் எம்.ஜி.ஆர் ஏழை நடிகராக இருந்த போது அவருக்கு உடற்பயிற்சி செய்ய தேவையான கருவிகள் இல்லை அப்போது அவர் மரத்தை பிடித்து நின்று **ஐசொடோப்** பயிற்சியை செய்து உடம்புக்கு உரமேற்றினார். பின்பு யானை கவுனியில் வசிக்கும்போது அங்குள்ள உடற்பயிற்சி சாலைக்கு அடிக்கடி வந்து அங்கு நடக்கும் குஸ்தி, மல்யுத்தம், சிலம்பாட்டம், செடிக்குச்சி ஆகியவற்றைப் பார்வையிடுவதுண்டு அவற்றில் கலந்துகொள்வதுமுண்டு. அந்த வகையில் தான் அவர் ஸ்டன்ட் பார்ட்டி ஆட்களைத் தெரிவு செய்தார்.

பின்னர் வடபழனி அருகே ஒரு இடம் வாங்கி அங்கு வந்து தினமும் உடற்பயிற்சி செய்யுமாறு அவர்களிடம் தெரிவித்தார். அவர்களும் படப்பிடிப்பு இல்லாத நாட்களில் அங்கு வந்து பயிற்சி செய்து பழகுவர். அவர் முதல்வர் ஆனதும் திருமங்கலத்தில் அவர்களுக்கு 48 வீடுகள் கட்டித்தர ஏற்பாடு செய்தார். ஆனால் அவர்கள் அந்த பகுதி மிகவும் தூரம் என சொல்லி மறுத்துவிட்டனர். இப்போது நினைத்து வருத்தப்படுகின்றனர்.

உடற்பயிற்சிக்கான அறிவுரை



சாண்டோ சின்னப்பா தேவர் கோவையில் மாருதி தேகப்பயிற்சி சாலை என்ற உடற்பயிற்சி நிலையம் ஒன்று வைத்திருந்தார். அங்கு படங்கள் எடுக்கப்பட்டு வந்த காலத்தில் தேவர் , எம்.ஜி.ஆர் , நம்பியார் ஆகியோர் பல்வேறு வீர விளையாட்டுக்களைப் பழகுவர். பளு தூக்கியும் பயிற்சி பெறுவார், அப்போது அந்த மூவரில் எம்.ஜி.ஆர் அதிகப் பளு தூக்குவார். அந்த பயிற்சியின் உதவியால் பின்னர் **காஞ்சி தலைவன், அன்பே வா** போன்ற படங்களில் எடை மிகுந்த வீரர்களை அப்படியே தலை மேலே தூக்கி சில நிமிடங்கள் வைத்திருந்து கீழே எறிந்தார். தான் செய்து பலனடைந்த உடற்பயிற்சி சார்ந்த விஷயங்களை அவர் மற்றவருக்கும் அறிவுரையாக சொல்வார். கமல்ஹாசன், சிவகுமார், ரஜினிகாந்த், ஜெய்சங்கர் போன்ற அவர் காலத்திய இளம் நடிகர்களுக்கு உடற்பயிற்சியின் அவசியத்தையும் அறிவுரைகளையும்

எடுத்துக்கூறியதாக அவர்கள் தம் பேட்டியில் குறிப்பிட்டுள்ளனர்.

இறுதி வரை இளைஞர்

மனிதனாகப் பிறந்தவருக்கு உடல் ஒரு யோக சாதனம். அதனை கோயில் போலப் பாதுகாக்க வேண்டும் என்பதில் எம்.ஜி.ஆர் கண்ணும் கருத்துமாக இருந்தார். அவர் காலத்து நடிகர்கள் தொப்பை விழுந்து பல் விழுந்து தோற்றமளித்த போது அவர் தன் உடம்பை உடற்பயிற்சியால் கட்டுக்கோப்பாக வைத்திருந்தார். அதனால் படங்களில் அவர் தன்னை இளைஞனாகக் காட்டிக்கொள்ள முடிந்தது.

இடையில் அவர் கால் ஒடிந்த பிறகும் கூட அவர் தனது வீட்டிலேயே நீச்சல் குளம் கட்டி நீச்சல் பயிற்சியின் மூலமாக தன் கால்களுக்கு வலுவேற்றினார். அவரது கடைசிப் படம் வரை அவரது உடல் துள்ளி குதிக்கும் சக்தி பெற்றிருந்தது. அவரது கழுத்தில் தான் வயோதிகம் தெரிந்தது. அவரது நடிப்பில் தெரியவில்லை. நேரிலும் அவர் மக்கள் முன் வரும்போது படிகளில் ஏறினாலும் உயரத்தில் இருக்கும் சிலைக்கு மாலை போட்டாலும் வேகமும் துடிப்பும் உடையவராக இருந்தார்.

சிறுநீரக மாற்று அறுவை சிகிச்சைக்காக அவர் அமெரிக்கா சென்று வந்த பிறகும் 25 கிலோ எடை மிகுந்த பளிங்கு கல்லை ஒரு முறை மேடையில் வைத்து தலைக்கு மேலே தூக்கி கூட்டத்தாருக்கு காட்டினார். அப்போதும் அவர் உடல் வலிமை உடையவராகவே இருந்தார்.

உடல் உறுதியின் பலன்கள்

உடல் உறுதியாக இருந்தால் மனம் துணிவுடையதாக இருக்கும். உளவியலார் குழந்தை உளவியலை மூன்றாக பகுப்பர் அதில் முதலாவது உடல் வளர்ச்சி [Physical development]. இந்த உடல் வளர்ச்சியை சத்துணவாலும் விளையாட்டாலும் நல்ல பழக்க வழக்கங்களினாலும் பெற முடியும்.

எனவே எம்.ஜி.ஆர் சிறுவர்களுடன் பேசும் காட்சிகளில் பெற்றோரை மதிக்க வேண்டும்; மொழியை பாதுகாக்க வேண்டும்; பகுத்தறிவைப் போற்ற வேண்டும், உடலை உறுதி செய்ய வேண்டும் என்ற கருத்துக்களை திரும்ப திரும்ப வலியுறுத்துகிறார். படங்களில் இளைஞர்களைக் கவரவும் சிறுவர்களைக் கவரவும் விளையாட்டுக் காட்சிகளை அமைக்கிறார். சண்டைக் காட்சிகளை அமைக்கிறார்.

விளையாட்டால் வளரும் இடது பக்க மூளை

பகுத்தறிவுப் பாசறையைச் சேர்ந்த எம்.ஜி.ஆர் தன் இயக்க சிந்தனைகளைத் தன் படங்களில் புகுத்துவதைக் கடமையாகக் கொண்டிருந்தார். அவர் படங்களில் வலியுறுத்தும் உடற்பயிற்சி மற்றும் விளையாட்டினைப் பின்பற்றினால் சிறுவருக்கு இடது பக்க மூளை வளரும். இந்த இடது பக்க மூளை வளர்ந்தால் தான் ஒரு விஷயத்தைக் கேட்கும்போது அதில் காரண காரிய தொடர்பு இருக்கிறதா என்றறிய முடியும். அதுவே பகுத்தறிவுக் கொள்கை ஆகும்.

புராண இதிகாசம் போன்ற கற்பனைகளில் மனம் செல்லாது. கணிதம், அறிவியல் துறைகளில் ஈடுபாடு அதிகரிக்கும். அவற்றில் நல்ல தேர்ச்சி பெற முடியும். புதிய தகவல்களை நினைவில் இருத்த முடியும். யதார்த்தமான வாழ்க்கை வாழ முடியும். கனவு கற்பனைகளில் மிதந்து ரிஸ்க் எடுப்பதில் வாழ்க்கையை வீணாக்காமல் இருக்க இடது பக்க மூளை நமக்கு உதவுகிறது இதன் வளர்ச்சிக்கு எம்.ஜி.ஆர் தனது சிறுவர் பாடல்களில் வலியுறுத்திய விளையாட்டும் உடற்பயிற்சியும் அவசியம் தானே.

வீர விளையாட்டுக்கள்

பழந்தமிழரின் பாரம்பரியப் பெருமை பேசி வந்த கட்சியான திமுகவில் இருந்த எம்.ஜி.ஆர் தமிழரின் வீர விளையாட்டுக்களில் ஆர்வம் காட்டினார். சிலம்பம், செடிக்குச்சி [சின்ன சிலம்ப குச்சி], மான் கொம்பு விளையாட்டு, மல்யுத்தம் போன்றவற்றில் தேர்ச்சி பெற்றிருந்தார். சிறுவர் பாடல்களிலும் அதை வலியுறுத்தினார்

வேலும் வாளும் சுழன்றிட வேண்டும்

வீரரின் விளையாட்டில்- அது

நாளும் காணும் பரம்பரை வழக்கம்

தென்னவர் திருநாட்டில்

என்ற பாட்டு வரிகளும் அது காட்சிப்படுத்தியிருந்த விதமும் சிறுவர்களைப் பெரிதும் கவர்ந்தது. வீரப்பண்பை சிறுவர்களிடம் இளம்பருவத்திலேயே வளர்க்க வேண்டும் அவர்களைப் பேய் பிசாசு என்று பயந்தாங்கொள்ளிகளாக வளர்த்துவிட்டால் பின்னர் அவர்களால் இந்த நாட்டுக்கும் வீட்டுக்கும் பயன்

ஒன்றும் இருக்காது. பட்டுக்கோட்டை கல்யாண சுந்தரம் எழுதிய பாடல்வரிகளில்

வேப்பமர உச்சியில் நின்னு

பேயொன்னு ஆடுதுன்னு

விளையாடப் போகும்போது

சொல்லிவைப்பாங்க –உந்தன்

வீரத்தைக் கொழுந்திலேயே

கிள்ளி வைப்பாங்க!

என்பவை எம்.ஜி.ஆரின் உள்ளக் கருத்தை சரியாக வெளிப்படுத்தின. அதனால் தான் அவர் முதல்வரானதும் ‘‘எனது முதல்வர் நாற்காலியின் நான்கு கால்களில் ஒன்று பட்டுக்கோட்டையாரின் பாடல்கள்’’ என்று பாராட்டினார்.

தாலாட்டில் வீரம்

குழந்தைப் பருவத்தில் தாய்மார் பரம்பரை வீரத்தை பாலோடு ஊட்டியதாக அக்காலத் தாலாட்டு பாடல்களைச் சொல்வதுண்டு. அந்த கருத்தில் எம்.ஜி.ஆர் தான் வளர்க்கும் தனது செல்ல மகனுக்கு பாடும் தாலாட்டில்

“வேலெடுக்கும் மரபிலே

வீரம் செறிந்த மண்ணிலே

பால் குடிக்க வந்தவனே

நடையை காட்டு - வரும்

பகைவர்களை வென்று விடும்

படையை காட்டு”

என்பார். ஆண் குழந்தை என்றால் பகைவரை வென்று நாட்டை காக்க வேண்டும் அது அவனது முதற்கடமை ஆகும். இன்று பெண்களும் இராணுவத்தில் சேர்ந்து தன் நாட்டுப் பற்றையும் வீரத்தையும் காட்டுகின்றனர். இது வளர்ச்சி.

பாரதியும் எம்.ஜி.ஆரும்

பாரதியார் உடலை உரமேற்றுவதை வலியுறுத்தினார்

“விசையுறு பந்தினை போல் - உள்ளம்

விரும்பியபடி செல்லும் உடல் கேட்டேன்”

என்றார். வேகமாக வீசிய பந்தினை போல உடல் வேகமாக செயல்பட வேண்டும் என்பது பாரதியின் இறை வேண்டலாகும். எம்.ஜி.ஆர் ***பட்டிக்காட்டு பொன்னையா*** படத்தில் பல்வேறு உடற்பயிற்சிகளை செய்து காட்டி அவரது உடம்பின் வேகமான செயல்பாட்டை நமக்கு உணர்த்துவார். உலகம் சுற்றும் வாலிபன் படத்தில் எக்ஸ்போ 70 எனப்படும் உலக பொருட்காட்சியில் பாடுகின்ற ‘‘**உலகம் அழகு கலைகளின் சுரங்கம்**’’ எனத் தொடங்கும் பாடலில்

உள்ள மட்டும் அள்ளிக் கொள்ளும்

மனம் வேண்டும், - அது

சொல்லும் வண்ணம் துள்ளிச் செல்லும்

உடல் வேண்டும்

என்ற வரிகளில் மனம் சொல்லும்படி இயங்கும் உடல் ஒரு வரம் என்ற கருத்து காணப்படுகிறது. இந்த வரிகள் இன்றும் தன் உடலைக் கட்டுகோப்பாகவும் ஆரோக்கியமாகவும் வைத்திருக்கும் நடிகர் சத்யராஜுக்கு பிடித்த வரிகள் ஆகும்.

உடற்பயிற்சி கருவி அன்பளிப்பு

ஒரு முறை சத்யராஜ் எம்.ஜி.ஆரின் வீட்டுக்குப் போயிருந்த போது எம்.ஜி.ஆர் "உனக்கு ஏதாவது நான் செய்ய விரும்புகிறேன் கேள்" என்றார் அதற்கு சத்யராஜ் "எனக்கு நீங்கள் உடற்பயிற்சி செய்யும் கருவிகளில் ஒன்றை கொடுங்கள்" என்றார். உடனே தன் கர்லா கட்டைகளில் ஒன்றைக் கொண்டு வரச்சொல்லி "இதைக் கவனமாக தூக்க வேண்டும்; இல்லையென்றால் கைக்குள் பிடித்து கொள்ளும்" என்று அறிவுறுத்தி அதை இருபது முறை சுழற்றி காட்டினாராம்.

அப்போது ஜானகி அம்மையார் "முன்பு நூறு முறை சுற்றுவார்; இப்போது அமெரிக்காவுக்கு சிகிச்சைக்கு போய் வந்த பிறகு இருபது முறை தான் சுற்றுகிறார்." என்றாராம். எழுபது வயதிலும் அவரால் தினமும் இருபது முறை அந்த கர்லா கட்டையை சுற்ற முடிந்ததென்றால் அவர் உணர்ந்து பின்பற்றிய உடல் உரத்தின் முக்கியத்துவம் பற்றி இனியும் நாம் விளக்க வேண்டியதில்லை. தான் பின்பற்றி நன்மை அடைந்ததையே அவர் தனது பாடல்களில் சிறுவர்களுக்கு அறிவுரையாகக் கூறிச் சென்றார். இவற்றால் அவர் திரையிசைப் பாடல்களில் பாடியதை தன் வாழ்க்கையிலும் பின்பற்றி வந்தார் என்பது தெளிவாகிறது.

7.குழந்தை வளர்ப்பில் எம்.ஜி.ஆரும் இசைப்பாட்டும்




எம்.ஜி.ஆர் திரைப்படங்களில் நடிப்பதைவிட்டு நாற்பது ஆண்டுகள் கழிந்த பின்பும் இன்றும் தொலைக்காட்சிகளில் அதிக எண்ணிக்கையில் திரையிடப்படும் படங்கள் அவருடையவையே. திரையரங்குகளில் அதிக எண்ணிக்கையில் மறு

வெளியீடாக வருபவையும் அவரது படங்களே ஆகும். ஏன் மக்கள் இன்னும் அவரை மறக்காமல் அவரது படங்களை பாடல்களை ரசிக்கின்றனர்.

சன்லைஃப் தொலைக்காட்சியில் தினமும் காலை அல்லது மாலையில் ஒரு எம்.ஜி.ஆர். படம் வெளியிடுவது சர்வசாதாரணமான நிகழ்வாகும். சென்னை, மதுரை, கோவை, நெல்லை, சேலம் என்று நகரங்களின் திரையரங்குகளில் இப்போதும் ஒன்றிரண்டு எம்.ஜி.ஆர். படங்கள் திரையிடப்படுகின்றன. இது வேறு எந்த நடிகருக்கும் இல்லாத தனிச்சிறப்பாகும். மற்றவர்களின் படங்கள் மறுவெளியீட்டில் இலாபம் தருவதில்லை. இதற்கு முக்கிய காரணம் எம்.ஜி.ஆர். இறந்த பிறகு பிறந்தவர்கள் கூட அவருக்கு ரசிகர்களாக இருக்கின்றனர்.

அவரை நேரில் பார்க்காதவர்களும் அவருடைய ரசிகர்களாகி வருகின்றனர். அவருக்கும் அவருடைய படத்துக்கும் பாடல்களுக்கும் புதுப்புது ரசிகர்கள் உருவாகி வருவதே அவரது படங்கள் இன்னும் ரசிக்கப்படுவதற்குக் காரணம் ஆகும். இன்றும் கூட பத்து பன்னிரெண்டு வயது சிறுவர்கள் அவருடைய ரசிகர்களாக இருக்கின்றனர். அவர் பாடல்களை ரசிக்கின்றனர். கோகுல் போன்ற புது இயக்குனர்கள் அவர் படக்காட்சிகளைத் தனது படங்களில் வெற்றியை வேண்டிச் சேர்க்கின்றனர்.

எம்.ஜி.ஆர். தனக்குத் தனிபாடல் அல்லது தத்துவபாடல்கள் எழுதும் கவிஞரிடம் "இரண்டு வயது பிள்ளை என் பாட்டின் பல்லவியை பாடும் அளவுக்கு எளிமையாக எழுதுங்கள்' என்பார்.



அதாவது ஒரு குழந்தை நன்றாகப்பேசத் தெரிந்தவுடன் அது எம்.ஜி.ஆர். பாட்டை பாட வேண்டும். அப்போதே பசுமரத்தாணி போல பாட்டு வரிகள் மனதில் பதிய வேண்டும் என்பது அவருடைய நோக்கமாக இருந்தது. இதில் தவறொன்றும் இல்லை. அவருடைய நல்ல கருத்துச்

செறிவுள்ள தனி பாடல் அல்லது தத்துவப் பாடல்களை பிள்ளைகள் மனதில் பதிய வைப்பது நல்லதுதான்.

குழந்தைக்கு இசைப் பாடலின் பயன்

இசைப் பாடல் கேட்பதால் மூளையில் நியுரான் செல்களின் அடர்த்தி அதிகமாகும். இதனால்தான் குழந்தை கருவில் இருக்கும்போதே தாயைப் பாட்டு பாடவும் வளைகாப்பின் போது தாய்க்குக் கண்ணாடி வளையல் அணிவித்து அதற்கு கலகலவென்று ஒலி கேட்கும்படி பழக்குகிறோம். குழந்தை பிறந்ததும் தாலாட்டுப் பாடி தூங்க வைக்கிறோம்.

'இசைப் பாட்டு கேட்டு வளரும் குழந்தைகள் மனநலம் சிறந்த குழந்தைகளாக வளரும். அவற்றின் நினைவாற்றல் பெருகும், அவை புதிர்களை எளிதில் விடுவிக்கும்.' என்பது குழந்தை உளவியலாளரின் கருத்தாகும். ஆக இசைப் பாடல்களை குழந்தைகள் பாடுவது நல்ல பழக்கமே ஆகும்.

சிலர் தம் குழந்தைகளுக்கு சுலோகம் சொல்லி தருவதும் பைபிள் வசனங்கள் சொல்லி தருவதும் **லாஇலாஹி** எனச்சொல்லி தருவதும் கூட குழந்தையின் மூளை வளர்ச்சிக்கு உகந்ததே ஆகும். இசையைக் கற்றுக் கொடுப்பதால் மொழித்திறன், கணிதத்திறன், செஸ் விளையாடும் திறன் போன்றன வளரும் பொது அறிவு பெருகும். நினைவாற்றல் அதிகரிப்பதால் எதையும் ஒருமுறை பார்த்தாலோ படித்தாலோ அது அப்படியே அந்த குழந்தையின் நினைவுச் செல்லில் பதிந்துவிடும் இதனால் பொது அறிவும் பெருகும். கணிதத்தில் ஆர்வம் பெருகும்.

சிக்கலான கணக்குகளையும் எளிதில் போட்டுவிடும், வேகம் வளரும்.

கடின உழைப்பு, ஊகித்துணரும் ஆற்றல், தொலைநோக்கு பார்வை ஆகியவற்றை வரமாகப் பெற்ற எம்.ஜி.ஆர். தன் சிறுவயதில் நாடகக் கம்பெனியில் இசை பயின்றார். பின் சினிமாவுக்கு வந்ததும் முறைப்படி ஒரு கர்நாடக சங்கீத வித்வானிடம் இசை பயின்றார். அப்போது ஆரோகண அவரோகண குறிப்புகள் எழுதிய அவரது டைரியை நினைவகத்தில் இன்றும் பாதுகாப்பாக வைத்துள்ளனர்.

இசையின் மகிமையை நன்குணர்ந்த எம்ஜிஆர் தனது படங்களில் சிறுவர்கள் ரசிக்கும்படியான அவர்களுக்கு நல்ல கருத்து தெரிவிக்கும்படியான பாடல்களை இடம்பெறச் செய்ததில் வியப்பொன்றும் இல்லை. அவர் தன் வீட்டில் தன் குழந்தைகளுக்கு என்ன செய்தாரோ அதைத்தான் படங்களிலும் செய்தார் .

வளர்ப்புக் குழந்தைகளுக்கு இசைப் பயிற்சி

எம்.ஜி.ஆர். தன் வீட்டில் பல குழந்தைகளை வளர்த்து வந்தார். அவர்களுக்கு அதிகளவில் இசைப்பயிற்சி அளித்தார். ஜானகி அம்மையாரின் பாட்டியின் தங்கையின் பேரக்குழந்தைகளான அப்புவும், ராதாவும் அவர்களின் பெற்றோர் காலராவில் இறந்ததால் எம்.ஜி.ஆரின் வீட்டில் அவரது தத்துப் பிள்ளைகளாக வளர்ந்தனர்.

ராதாவுக்குத் திருமணமான பின்பு *‘இனி வீட்டில் குழந்தை இல்லையே’* என்ற ஏக்கம்

வந்ததும் ஜானகி அம்மையாரின் தம்பியின் குழந்தைகள் மூவர் இங்கு அழைத்துவரப்பட்டனர். கீதா, சுதா, ஜானு என்ற மூவரும் எம்ஜிஆர் வீட்டில் வளர்ந்தனர். அவர்கள் ஜானகி அம்மையாரையே *'அம்மா'* என்று அழைக்கின்றனர்.

இவர்களுக்கு எம்.ஜி.ஆர். தனது வீட்டில் இசை தொடர்பாக என்னென்ன படிக்க வைத்தார் என்று ஒரு பட்டியலே தருகிறார் பள்ளி முதல்வர் கீதா மது மோகன். **"கர்நாடக இசை, மற்றும் இசைக்கருவிகள்- வீணை, வயலின், தபலா, ஹார்மோனியம், மிருதங்கம்".**

ஆக எம்.ஜி.ஆர். தான் வளர்த்த குழந்தைகளுக்கு வீட்டில் ஆசிரியர் ஏற்பாடு செய்து கர்நாடக இசையும் அதனுடன் தொடர்புடைய இசைக்கருவிகளையும் கற்று தந்திருக்கிறார். குழந்தைகள் தமது கலைப் பாரம்பரியம் பற்றிய பெருமிதத்துடன் இருக்க வேண்டும். எனவே அவற்றைப் பற்றித் தெரிந்து கொண்டிருக்க வேண்டும். இசையில் எல்லோரும் விற்பன்னர்களாகிவிட முடியாது; ஆனால் அடிப்படைகளை தெரிந்து கொள்ள வேண்டும். அடிப்படை இசையறிவை ஊட்டுவது என்ற கடமையை எம்.ஜி.ஆர். ஒரு தந்தையாக தனது வளர்ப்புக் குழந்தைகளுக்குச் செய்திருக்கிறார். இதை இன்றும் மகிழ்வோடும் நன்றியோடும் நினைத்துப் பெருமிதம் அடைகிறார் திருமதி. கீதாமதுமோகன்.

தந்தையின் கடமைகள்

"ஈன்று புறந்தருதல் என் தலை கடனே சான்றோன் ஆக்குதல் தந்தைக்குக் கடனே" என்றார் சங்ககாலப் பெண்பாற்புலவர் பொன்முடியார். **ஒரு**




குழந்தைக்கு வாழ்வியல் கல்வியும், சமூகக்கல்வியும் ஊட்டுவது தந்தையின் கடமை என்ற கருத்தை அன்று முதல் இன்று வரை தமிழகம் ஏற்றுக்கொண்டுள்ளது. இப்போது பள்ளி முதல்வராக இருக்கும் இச்சகோதரிகள் தங்கள் பள்ளிகளில் கலைப் படிப்புகளிலும் *[extra curricular courses]* கலை நிகழ்ச்சிகளிலும் *[cultural events]* சிறப்பாகச் செயல்பட எம்.ஜி.ஆர். அவர்களுக்கு ஊட்டிய

இசையறிவு உதவுகிறது. இன்னும் பலவற்றை அவர் கற்றுத்தர ஏற்பாடு செய்திருக்கிறார் என்றாலும் இந்த கட்டுரையில் இசையைப்பற்றி மட்டும் காண்போம். திருவள்ளுவரும் தந்தையின் கடமையை எடுத்து சொல்லும் போது

“தந்தை மகற்காற்றும் உதவி அவையத்து

முந்தி இருப்பச் செயல்“

என்கிறார்.


அன்பு விஜயன், சுதா. நெற்கதிர் முதல் ஆண்மகனுக்கு
எனது "நல்லாண்டு வாழ்த்துக்கள்".
'மகன் தந்தைக்காற்றும் உதவி இவன் தந்தை
என்னோற்றான் கொல் எனும் சொல்" என்ற குறளுக்
கேற்ப எல்லாப்புகழும் பெற்று நோயற்ற வாழ்வும்
குறைவற்ற செல்வமும் பெற்று நீடூழி சிறப்போடு
வாழ வாழ்த்துகிறேன். (ஒப்பம்) எம்.ஜி.ஆர்
6/2/81
ஜானகி ராமச்சந்திரன்
6/2/81

ஒரு அவையில் ஒருவன் பலராலும் பாராட்டும்படி திகழும் வகையில் ஒரு தந்தை தன் மக்களை வளர்க்க வேண்டும் என்பது வள்ளுவர் கருத்து. இதன்படி தனக்குப் பிடித்த இசையை தான் உயர்வானது என்று மதித்த இசையை எம்.ஜி.ஆர். தனது வளர்ப்பு மகள்களுக்கு ஊட்டி வளர்த்திருக்கிறார்.

இசைக்கருவிகளும் எம்.ஜி.ஆரும்

இசைக்கருவி பயிற்சி என்பது எம்.ஜி.ஆருக்கு வெகுபிரியமான ஒன்றாகும். அவர் தனது பல

படங்களில் இசை வாத்தியாராகவும், **தேடி வந்த மாப்பிள்ளை** படத்தில் இசைக்கருவிகள் வாசிப்பவராகவும் நடித்திருப்பார். பல படங்களில் பாட்டு காட்சியில் இசைக்கருவிகளை வாசிப்பார். இவை அனைத்தும் அவருக்கு இசையின் மீதான ஈடுபாட்டை உணர்த்துகின்றன.

மன்னாதி மன்னன் படத்தில் ஆடாதமனமும் உண்டோ என்ற பாட்டுக்கு நாட்டிய பேரொளி பத்மினி நடனம் ஆடும் போது இவர் பல்வேறு கருவிகளை வாசிப்பார். இருவர் முகத்திலும் மகிழ்ச்சி தாண்டவமாடும். அற்புதமாக அமைந்த அக்காட்சியில் அவர் கால் பாதத்தால் தாளம் போட்டபடி அமர்ந்து வாசிப்பது இசையை அவர் ரசித்து நடிப்பதை நமக்கு உணர்த்தும். அந்தக் காட்சியில் கால் தெரியாது; மிகவும் கவனமாகப்பார்த்தால் மட்டுமே தெரியும். அப்படி ஒரு காட்சியில் அவர் நடிக்கும் போதும் தன்னை அறியாமல் இசையை ரசித்து காலில் தாளம் போட்டபடி இருப்பார். தபலா, புல்லாங்குழல், வீணை, எனப் பல கருவிகளை வாசிப்பார்.

தொழிலாளி, நாடோடி படங்களில் ஹார்மோனியமும் **மகாதேவி, நவரத்தினம்** படங்களில் வீணையும், **நினைத்ததை முடிப்பவன்** படத்தில் சுந்தரம் கதாபாத்திரமாக வரும்போது பலப்பல இசைக்கருவிகளும் **பணம் படைத்தவன்** படத்தில் அக்கார்டியன் மற்றும் வயலினும், **கண்ணன் என் காதலன், நான் ஏன் பிறந்தேன்** படங்களில் பியானோவும் என அவருக்கு இசைக்கருவி மீதான் விருப்பத்தை உணர்த்தும் படங்களும் காட்சிகளும் ஏராளம் ஆகும்.



இசைப்பாட்டும் இனிய கருத்தும்

பொதுவாக குழந்தைகள் ஒன்றரை வயது முதல் மூன்று வயதுவரைதான் பாட்டு கேட்பார்கள். அதன் பிறகு அவர்களே பாடத்தொடங்கி விடுவார்கள். அப்போது குழந்தைகளுக்கு நல்ல கருத்துள்ள பாடல்களைக் கற்றுத்தர வேண்டும். பாலர் கல்விச்சாலைகளில் இந்த வயதில் *action songs* என்றும் *rhymes* என்றும் கற்றுத் தருவதுண்டு. அந்த வயதில் குழந்தைகள் எம்ஜிஆரின் பாடல்களைக் கேட்க வைப்பதும் அவற்றை முணுமுணுக்க வைப்பதும் நல்ல பலனை தரும். சிறுவர்கள் இவ்வாறு கருத்துள்ள பாடல்களைப்பாடி பழகி விட்டால் பின்னர் வளர்ந்த பிறகு ஆபாசப்பாடல்களை பாட அவர்கள் கூச்சப்படுவார்கள். இந்த நாடு அவர்களைத் தானே நம்பியுள்ளது.

குழந்தைகள் பெரியவர்களாகும் போது தமிழ்ப்பண்பாட்டை காக்க வல்லவர்களாக இருந்தால் மட்டுமே நாடு நம்நாடாக இருக்கும். கலை இலக்கிய பண்பாட்டு வளர்ச்சியிலும் பொருளாதார மேம்பாட்டிலும் சரித்திரம் படைக்கும். நம்நாடு படத்தில்

நல்ல நல்ல பிள்ளைகளை நம்பி – இந்த

நாடே இருக்குது தம்பி

சின்னஞ் சிறுகைகளை நம்பி – ஒரு

சரித்திரம் இருக்குது தம்பி

என்ற பாட்டைப் பாடும் குழந்தைகளுக்கு தம் தேசிய கடமை தானாகவே புரிந்துவிடும் இதை ஒருவர் தனியாகக் கற்றுத் தர தேவையில்லை.

கிளி போல பேசு நீ குயில் போல பாடு

மலர் போல சிரித்து நீ குறள் போல வாழு

மனதோடு கோபம் நீ வளர்த்தாலும் பாவம்

மெய்யான அன்பே தெய்வீகம் ஆகும்

என்ற வரிகளைப்பாடும் குழந்தைகள் சக குழந்தைகளிடம் கோபப்படாமல் அன்புடன் பழகி வரும். குறள் இன்று உலகப் பொதுமறையாக விளங்குகிறது பைபிளுக்கு அடுத்தபடியாக அதிக மொழிகளில் மொழி பெயர்க்கப்பட்டுள்ள நூல் என்ற பெருமை திருக்குறளுக்கு உண்டு. மற்றொரு பாடலிலும் குறளின் பெருமையை, பிறக்கப்போகும் தனது மகனின் வாழ்வியல் நெறியாக எடுத்துரைப்பார்.

இரண்டுவரி கொண்டு மூன்று நெறிகண்ட

குறளில் வழி தேடி செல்வான்

இப்பாடல் வரிகள் தமிழகத்தில் வளரும் குழந்தைகளுக்கு தமிழ் மறையாம் திருக்குறளின் பெருமையை பிஞ்சுமனதில் பதிய வைக்கின்றன. பெற்றோரும் ஆசிரியரும் சொல்வதைக் காட்டிலும் இந்த இசைப்பாடல் சொல்வது இன்னும் ஆழமாக பதியும்.

இவ்வாறு படங்களில் நல்ல கருத்துக்களை இசையோடு புகுத்திய எம்ஜிஆர் இசையிலும் இசைக்கருவியிலும் தனக்கிருந்த ஆர்வத்தை தனது வளர்ப்பு குழந்தைகளுக்கும் புகுத்தினார்.

எளியசொற்கள்; இனிய இசை; பொருத்தமான காட்சி

குழந்தை உளவியலார் social and emotional learning என்பது இந்த சமுதாயத்தில் மதிக்கப்படுவன எவை? இகழப்படுவன எவை? என்பதைக் குறிப்பனவாகும். எம்.ஜி.ஆர். பாடல்கள் சிறுவயதிலேயே ஒரு குழந்தைக்கு இவற்றைக் கற்றுக் கொடுத்துவிடும்.

எதற்கு மகிழ்ச்சி அடைய வேண்டும்? எதற்கு வருத்தப்பட வேண்டும்? எதற்கு அவமானப்பட வேண்டும்? என்பதை

தவறு செய்தவன் திருந்த பார்க்கணும்

தப்பைச் செய்தவன் வருந்தியாகனும்

போன்ற எம்.ஜி.ஆர். பாடல் வரிகள் பிள்ளைகளுக்கு கற்றுக்கொடுக்கின்றன. இவற்றிற்கு உறுதுணையாய்

நிற்பன தேர்ந்தெடுத்த சொற்களும் திறமையான இசையும் ஆகும்.

தனது கருத்தைச் சொல்வதற்கு ஏற்ற பொருத்தமான சிறந்த சொற்களை கவிஞரிடம் இருந்து எம்.ஜி.ஆர். பெற்றுவிடுவார். கவிஞர் எழுதிய பாடலில் தான் நினைத்த கருத்து வரவில்லை என்றால் உடனே மாற்றித்தரும்படி கூறுவார். தான் எதிர்பார்த்தபடி பாடல் எழுதப்படவில்லை என்றால் பாடலாசிரியரை மாற்றி விடுவார். தனது கருத்துக்களைக் குழந்தைகள் மற்றும் பெரியவர்களிடம் கொண்டு செல்லும் வாகனமான இசையை, இசையமைப்பாளரிடம் இருந்து தெரிவு செய்வார். அவர் எத்தனை மெட்டு போட்டிருந்தாலும் அவற்றை பொறுமையாகக் கேட்டு அவற்றில் சிறந்ததை தெரிவு செய்யும் இசை அறிவு, எம்ஜிஆருக்கு இருந்ததால் இன்றும் எம்ஜிஆர் பாடல்கள் மக்கள் மனதில் நிலைத்து வாழ்கின்றன.


எளிய சொற்கள், இனிய இசை என அவர் தெரிவு செய்து அவற்றைப் பொருத்தமான காட்சியில் இடம்பெறச் செய்வார். இதனால் சிறுவர்கள் எம்.ஜி.ஆருக்கு ரசிகர்களாக அன்றும் இருந்தனர். இன்றும் புதிதுபுதிதாக உருவாகின்றனர். வீட்டில் பெற்றோர் எம்.ஜி.ஆர். ரசிகர்களாக இல்லாத போதும் கூட பிள்ளைகள் துணிந்து தங்களை எம்.ஜி.ஆர். ரசிகர் என்று சொல்லும் துணிச்சல் அன்று முதல் இன்றுவரை சிறுவர்களுக்கு இருந்து வருகிறது.

சிவாஜியின் மகன் பிரபு எம்.ஜி.ஆரின் தீவிர ரசிகர். அன்று முதல் இன்றுவரை பிரபு சென்னையில்

இருக்கும்போது எம்.ஜி.ஆர். படப்பிடிப்பு பார்க்க செட்டுக்கே வந்து விடுவார். எம்.ஜி.ஆர். ஜெயலலிதா ஜோடி நடிக்கிறார்கள் என்றால் அவருக்கு மிகவும் பிடிக்கும். வெளியே எம்.ஜி.ஆர். ரசிகர்களும் சிவாஜி ரசிகர்களும் அடிபிடி சண்டை போட்ட காலத்தில் கூட சிவாஜியின் மகன் பிரபு எம்.ஜி.ஆரின் ரசிகராக இருந்தார் என்பது குறிப்பிடத்தக்கது.

எம்.ஜி.ஆர். படங்களில் பாட்டுக்கள் மூலமாக ஊருக்கு சொன்னதும் தனது வீட்டுக்கு சொன்னதும் ஒரே தகவல்தான். அவர் தனது இசை நாட்டத்தை தனது பிள்ளைகளிடமும் செலுத்தி இருக்கிறார். ரசிகர்களிடமும் செலுத்தி இருக்கிறார். அவர் நிஜத்தில் வேறாகவும் படத்தில் வேறாகவும் இருந்ததில்லை. அவர் தனது வாழ்வில் கடைப்பிடித்த நெறிகளையே படத்திலும் காட்டியிருக்கிறார் என்பதை அறிய இந்த இசையறிவும் நமக்கு உதவியது. அவர் தான் வளர்த்த பிள்ளைகளுக்கு இன்னும் என்னென்ன கற்றுத் தந்தார், அவர்களின் நன்னடத்தையில் எவ்வாறு கவனம் செலுத்தினார், கல்வியின் முக்கியத்துவத்தை எவ்வாறு உணர்த்தினார் என்ற பல செய்திகளை அடுத்தடுத்து வரும் கட்டுரைகளில் காணலாம்.

8.எம்.ஜி.ஆரின் வறுமையும் கண்டிப்பும்



ஒருமுறை எம்.ஜி.ஆர். வசனகர்த்தா ஆரூர்தாசிடம் பேசிக்கொண்டிருக்கும் போது என் அண்ணனுக்கு ஒன்பது குழந்தைகளைக் கொடுத்த இறைவன் எனக்கு ஒரு குழந்தை கொடுக்கவில்லையே என்று வருத்தப்பட்டார். அப்போது அவர் எனக்கு மறுஜென்மம் என்று ஒன்று இருந்தால் அப்போது பெரிய பிள்ள குட்டிக்காரனாகப் பிறக்க வேண்டும். நல்ல கல்விமானாகப் போற்றப்பட வேண்டும் என்றார். இப்போது எனக்கு தெரிந்த நூலறிவு பொது அறிவு ஆகியவற்றைக் கொண்டு நான் மேடையில்

பேசுகிறேன். இருந்தாலும் கற்றறிந்தவர்களைக் காணும் போது எனக்குள் நாமும் இப்படி படிக்க வசதி இல்லாமல் போய்விட்டதே என்ற ஏக்கமும் கவலையும் வருகிறது என்று தனது சோகத்தைப் பகிர்ந்து கொண்டார். எம்.ஜி.ஆரின் மனதில் அவர் குழந்தைக்காகவும், கல்விக்காகவும் ஏங்கி தவித்ததால் தன் வாழ்நாளில் அந்த இரண்டிலும் அவர் அதிக அக்கறை காட்டினார்.

தமிழகத்தில் குழந்தைகள் உணவின்றித் தவறான வழிகளில் போய்விடக்கூடாது பள்ளிகளுக்குப் போகாமல் கல்வி பெறாமல் இருந்து விடக்கூடாது என்று அக்கறையில் தான் சத்துணவைக் கொண்டுவந்தார். தனக்குச் சோறு போட வழியிருந்திருந்தால் தன் அம்மா தன்னைப் பள்ளிக்கு அனுப்பாமல் நாடகக் கம்பெனிக்கு அனுப்பி இருப்பார்களா என்று எண்ணி ஏங்கினார். அந்த நிலை தனது ஆட்சியின் கீழ் இருக்கும் எந்தத் தாய்க்கும், எந்தக் குழந்தைக்கும் வந்து விடக்கூடாது என்று முடிவு செய்து பல ஏளனங்களுக்கு இடையில் அந்தத் திட்டத்தைத் தொடக்கினார். உணவும் கல்வியும் ஒரு பிள்ளைக்குப் பதினேழு வயது வரை கிடைத்து விட்டால் பின்பு அது தன்மானத்துடன் உழைத்து வாழும் என்று உறுதியாக நம்பினார்.

இறையருளால் உலகில் ஒரு பெரிய பொருளாதாரக் கொள்கை மாற்றம் எம்.ஜி.ஆர். ஆட்சிக்காலத்தில் அறிமுகமானது. தனியார் மயமாக்கம் என்ற பொருளாதாரக் கொள்கை அறிமுகமானதும் எம்.ஜி.ஆர். அதை நன்கு பயன்படுத்திக் கொண்டார்.

தனது ஆட்சியில் பல தனியார் பாலிடெக்னிக் கல்லூரிகளும், பொறியியல் கல்லூரிகளும், கலை அறிவியல் கல்லூரிகளும் தொடங்க தனியாருக்கு அனுமதி கொடுத்தார். அவற்றில் 25% பேர் இலவசமாகக் கல்வி பெற வழிவகை செய்தார். தனக்குத் தெரிந்தவர்களையும் [போரூர் ராமச்சந்திரா] தனது நண்பர்களையும், கட்சிக்காரர்களையும் [விஜடி விஸ்வநாதன்] கல்லூரிகள் பள்ளிகள் திறக்கும்படி ஊக்குவித்தார். ***இன்று இந்தியாவிலேயே தமிழகம் உயர்கல்வியில் முதலில் இருப்பதற்கு எம்.ஜி.ஆரின் கல்வி ஆர்வமும் அவர் தனியாரை ஊக்குவித்த முயற்சியும் முக்கியக் காரணங்கள் ஆகும்.***

எம்.ஜி.ஆர். திரைப்படத்திலும் தனது வாழ்விலும் சிறு குழந்தைகள் மீது மிகுந்த அன்பும் அக்கறையும் காட்டி வந்தார். அவர் ஏழு வயதில் தன் தாயைப் பிரிந்து போய் நாடகக் கம்பெனியில் சேர்ந்து வயிற்றுப் பசிக்காக வாழ்க்கையை ஓட்டியபோது அவருடைய பசிக்கு உணவும், நெஞ்சுக்கு நேசமும் தீரா ஏக்கமாக இருந்தது.

செழிப்பும் வறுமையும்

செழிப்பான குடும்பத்தில் பிறந்து வறுமையில் தள்ளப்பட்டு கும்பகோணத்திற்கு வந்து தன் தாயுடன் இருந்த போது இவருக்கு ஏற்பட்ட வறுமையும் அவரது தாயாரின் தன்மானப் போராட்டமும் கொடுமையானது. அதற்கு ஒரு உதாரணம் காட்டலாம். வீட்டில் மணி அரிசி இல்லை. கஞ்சி கூடக்காய்ச்சி தர இயலாது. அடுத்த வீட்டம்மா சில நாட்களாக சிறுவர்களுடன் சத்தியாம்மா பசியுடன் இருப்பதை பார்க்கப்

பொறுக்காமல் ஆழாக்கு அரிசி கடன் தரமுன்வந்தார். ஆனால் சத்தியாம்மாவுக்கு அதை வாங்க மனம் ஒப்பவில்லை. வேண்டாம் என்று அன்புடன் மறுத்து விட்டார். ஆனால் பட்டினி கிடந்து வயிறு ஒட்டி முகம் வாடி தன் முகம் பார்க்கும் குழந்தைகளை என்ன செய்வது என்று நினைத்து கலங்கினார். வீட்டில் எறும்பு புற்றை குடைந்தார் அதில் கொஞ்சம் புற்றரிசியைச் சேகரித்தார். அந்த அரிசியைக் கஞ்சி காய்ச்சி தன் மக்களுக்குக் கொடுத்தார். இதை கதாசிரியர் ரவீந்தரிடம் எடுத்துச் சொன்ன எம்.ஜி.ஆர். என் வீட்டில் அரிசி போட்டு வைக்கும் பெரிய குதிர்கள் இருந்து நான் பார்த்திருக்கிறேன். அந்த நிலை மாறி எறும்புப் புற்றில் இருந்து அதன் சேகரிப்பை எடுத்துக் கஞ்சி காய்ச்சி குடிக்கும் நிலையையும் அனுபவித்திருக்கிறேன் என்றார்.

இந்த உரையாடல் ஏன் வந்தது என்றால், *நாடோடி மன்னன்* படத்தின் வெற்றி விழாவின் போது எம்.ஜி.ஆருக்கு ஐம்பது கிலோ எடையில் ஒரு வெள்ளி கோப்பையை அதில் நடித்த நடிகர்கள் சேர்ந்து பரிசாக அளித்தனர். அது இன்றும் எம்.ஜி.ஆர். நினைவில்லத்தில் இருக்கிறது. நடிகர்கள் அதில் சீனி போட்டு நிரப்பி கொடுத்தனர். எம்.ஜி.ஆர். அந்த சர்க்கரையை எடுத்துவிட்டு அதில் நெல்மணிகளை நிரப்பி வைத்தார். தனது வீட்டில் இருந்த பழைய நெல்குதிர்களின் நினைவாக அவர் அப்படிசெய்தார். அது குறித்து ரவீந்திரன் கேட்டபோது எம்.ஜி.ஆர். புற்றரிசி சாப்பிட்ட கதையை எடுத்துக்கூறினார்.

எம்.ஜி.ஆரின் தாயார் தான் பசி பொறுத்தாலும் பிள்ளைகள் பசியால் தவிக்ககூடாது. அவர்களுக்கு

மூன்று வேளை சோறாவது கிடைக்கவேண்டும் எனக்கருதி அதே வேளையில் அவர்கள் அந்த உணவைத் தர்மமாகவும் பெறக்கூடாது என நினைத்து ஒரு நாடகக் கம்பெனியில் சேர்த்துவிட்டார். நாடகத்தில் நடித்து அந்த உழைப்பின் காரணமாக அவர்களுக்கு உணவு கிடைக்கட்டும் என முடிவெடுத்தார். ஏற்கெனவே கொடும் நோய்களுக்கு இரண்டு பெண் குழந்தைகளையும் ஒரு ஆண் குழந்தையையும் பலியாகக் கொடுத்த தாய்க்கு எஞ்சி இருக்கும் இந்த இரு மகன்களாவது உயிருடன் பிழைத்து இருக்கட்டுமே என்று கண்கலங்கி குழந்தைகளைப் பிரிய முன் வந்தார். நாடகக் கம்பெனியில் கட்டுப்பாடுகள் அதிகம். அதை எம்.ஜி.ஆர். நல்லவிதமாக புரிந்து கொண்டதால் பிற்காலத்தில் தன் வீட்டில் வளர்ந்த பிள்ளைகளையும் அதே கட்டுப்பாட்டுடன் வளர்த்தார்.

ராதா வாங்கிய அடிகள்

எம்.ஜி.ஆரின் வளர்ப்பு மகள் ராதாவுடன் பேசியபோது பல சம்பவங்களை அவர் எடுத்துரைத்தார். ராதா ஆரம்பத்தில் பெரியவீட்டில் [பெரியவர் சக்கரபாணியின் வீடு] அவரது பிள்ளைகளுடன் சேர்ந்து வாழ்ந்து வந்தார். அவருடன் அவரது அண்ணன் அப்புவும் அங்கிருந்தார். அப்போது ஒருநாள் சிறுவர்களுக்குள் ஏற்பட்ட சண்டையில் ராதா ஒரு குழந்தையின் மூக்கை குத்திவிட்டார். ரத்தம் வடியத் தொடங்கியது. எம்.ஜி.ஆர் வந்ததும் சொல்லி கொடுத்து விட்டார்கள். எம்.ஜி.ஆர். ஒரு அடி கொடுத்து கண்டித்தார். ***“அடுத்தவரை அடிக்கும் அளவுக்கு உனக்கு கோபம் வரக்கூடாது. இனி எப்பவும் இந்த மாதிரி நீ நடந்து கொள்ளாதே”*** *என்றுகண்டித்தார்.*

சண்டைக் காட்சியில் எம்.ஜி.ஆர்.

திரையில் அடிதடி காட்சிகளில் ஜொலிக்கும் எம்.ஜி.ஆர். தன் சண்டைக் காட்சிகளில் சில தர்ம நியாயங்களை பின்பற்றுவார். அநியாயம் நடக்கும்போது கூட அவர் முதலில் கெட்டவனை அடிக்க மாட்டார். தன்னை எதிரி துன்புறுத்தினால் மட்டுமே பதிலுக்கு தற்காப்புக்காகவே அவரைத் தடுப்பார். எல்லை மீறிப்போகும் போது வில்லனை அடித்துக் கயிற்றால் கட்டிவைப்பார் அல்லது வில்லனே தப்பித்து ஓடி விடுவார். வீட்டிலும் எம்ஜிஆர் தனது பிள்ளைகள் அடிதடியில் இறங்குவதை விரும்பியதே இல்லை. ராதாவுக்கு அடுத்து கீதா, ஜானுலதா ஆகியோர் அங்கு வளரும் போது அவர்களை ஒரு பார்வையிலேயே எம்.ஜி.ஆர். அடக்கிவிடுவார். கை நீட்டும் பழக்கம் கிடையாது. அவர்களும் எம்.ஜி.ஆர். ஒரு சொல் சொல்லும்படி நடந்து கொண்டதே இல்லை.

மனதோடு கோபம் நீ வளர்த்தாலும் பாவம்

மெய்யான அன்பே தெய்வீகம் ஆகும்

*என்று நம் நாடு படத்தில் அவர் தன் அண்ணன் பிள்ளைகளான குட்டிபத்மினி மற்றும் ஸ்ரீதேவி ஆகியோரிடம் பாடியது திரைக்காக மட்டும் அல்ல நிஜத்திலும் அவர் குழந்தைகளுக்கு சொல்ல விரும்பிய கருத்து ஆகும். **’சினம் என்னும் சேர்ந்தாரை கொல்லி’’** என்றார் வள்ளுவர். எனவே எம்ஜிஆர் சிறுவர்களுக்கு சினம் கூடாது என்பதில் கண்ணும் கருத்துமாய் இருந்தார்.*



உலகம் சுற்றும் வாலிபன் படத்தில் ஒரு காட்சி. இரண்டு சிறுவர்கள் சண்டை போட்டு கொண்டிருப்பார்கள் நாகேஷ் அவர்களை பார்த்து **“நல்லா அடிச்சிக்கங்கடா, நல்லா அடிச்சிங்க, நீங்க சண்டையை போட்டு மண்டையை ஒடைச்சா எங்களுக்கு ஜாலியா இருக்கும்”** என்று சொல்லி சண்டையை வளர்ப்பார். அப்போது எம்ஜிஆர் அங்கு ஒடி வந்து சண்டை போட்டவர்களை பிரித்துவிட்டு சண்டை போடக்கூடாது என்று அறிவுறுத்தி

சிரித்து வாழவேண்டும் - பிறர்

சிரிக்க வாழ்ந்திடாதே

உழைத்து வாழவேண்டும் பிறர்

உழைப்பில் வாழ்ந்திடாதே ‘’

என்ற பாட்டைப் பாடுவார் அந்தப் பாட்டில் நடித்த சிறுவர்கள் அனைவருக்கும் அவர் பொம்மைகள் வாங்கி பரிசளித்தார். சிறுவர்களுக்குள் பகை, பொறாமை, கோபம் ஆகியன இருக்கவே கூடாது

அவர்களிடம் அன்பும் பண்பும் சிறக்க வேண்டும் என்பதைத் தன் வாழ்விலும் திரையிலும் எம்ஜிஆர் வலியுறுத்தினார்.

வேறு எப்போது எம்.ஜி.ஆர். கண்டிப்பார்?

ராதாவிடம் எம்.ஜி.ஆருக்கு இன்னும் சில சமயங்களில் கோபம் வந்ததுண்டு. ஒருமுறை ராதா தனது வீட்டுச் சுவரில் எதையோ கிறுக்கி கொண்டிருந்தார். இந்தப் பிள்ளை இப்படி பொறுப்பில்லாமல் நடந்து கொள்கிறதே என்று எம்.ஜி.ஆருக்கு கோபம் வந்து ஒரு அடி கொடுத்தார்.

***'பிரம்பைப் பகைக்கிறவன் பிள்ளையைப் பகைக்கிறான்'** என்ற பைபிள் வசனம் நினைவுக்கு வருகிறது. பிள்ளைகள் தவறு செய்யும் போது முதல் முறையிலேயே கண்டிக்க வேண்டும் விட்டுவிட்டால் பிறகு அது கீழ்ப்படியாமை என்ற கெட்ட பழக்கமாக உருவெடுத்துவிடும். அதன் பிறகு எவ்வளவு சொன்னாலும் கேட்க மாட்டார்கள். ஒரு அடி கொடுப்பது சரிதான். கண்டிக்கிறேன் என்று கருதிக்கொண்டு அடித்து உதைத்து அழவிடக்கூடாது.*

எம்.ஜி.ஆரின் தாயார் தன் பிள்ளைகளைக் கண்டிப்புடன் வளர்த்திருந்தார். அவர்களை பாய்ஸ் நாடக கம்பெனியும் கண்டிப்புடன் வளர்த்திருந்தது. எனவே எம்.ஜி.ஆரும் தவறைக் கண்டுபிடித்த போது அடி கொடுக்கத் தயங்கியதே இல்லை. மீண்டும் அந்தத் தவறு நிகழக்கூடாது என்ற நோக்கத்தில் தான் அவர் கண்டித்தார்.

*நடிகைகளிடம் கைவரிசை காட்டுவோரை எம்.ஜி.ஆர். அடித்துக் கண்டித்திருக்கிறார். **"நடிகை***

தானே யார் கேட்கப் போகிறார்கள்'' *என்று சிலர் நினைத்து தவறான செய்கையில் இறங்குவதுண்டு. அப்போது எம்.ஜி.ஆர். பட்டென்று அடித்துவிடுவார். அவர் இருந்தவரை திரை உலகுக்கு அவர் ஒரு god father ஆக இருந்தார்.*

பிள்ளைகளிடம் செல்லமும் கண்டிப்பும்

ஒருமுறை எம்.எஸ்.விஸ்வநாதன் தன் பிள்ளைகளை ஊட்டி காண்வென்டில் படிக்க சேர்த்தார். அப்போது அவர்கள் அங்கு உணவு சரியில்லை என முறையிட்டனர். உடனே அங்கு ஒரு சொந்த வீட்டை வாங்கி அதில் தனது அம்மாவை வைத்து அங்கு சில பணியாட்களை அம்மாவுக்குத் துணைக்கு அமர்த்தி பிள்ளைகளைப் பாட்டியுடன் தங்கி படிக்க வைத்தார். இந்தத் தகவலை ஒருமுறை ஏதோ பேச்சில் எம்.ஜி.ஆரிடம் கூறியபோது எம்.ஜி.ஆர். அதைக் கண்டித்தார். ''ஹாஸ்டலில் இருந்து படித்தால் கண்டிப்புடன் வளர்வார்கள் பாட்டியுடன் தங்கினால் படிக்கமாட்டார்கள் செல்லம் கொஞ்சி கெட்டுப் போவார்கள்'' என்றார் எம்.ஜி.ஆர். ஆனால் பிள்ளைப்பாசம் எம்.எஸ்.விஸ்வநாதனை விடவில்லை. பிள்ளைகள் அவர் எதிர் பார்த்த மாதிரி சிறப்பாகப் படிக்கவில்லை. ஒரு பேட்டியில் இந்தச ம்பவத்தை சொல்லிவிட்டு எம்.ஜி.ஆர். பேச்சை கேட்காமல் போனது பற்றி வருத்தப்பட்டார்.

பிள்ளைகளைக் கண்டிக்க வேண்டிய நேரத்தில் கண்டித்து வளர்க்க வேண்டும் என்பதில் எம்.ஜி.ஆர். கவனமாக இருந்தார். ***நான் ஏன் பிறந்தேன்*** *படத்தில் ஒரு காட்சி ஒரு தாய் [புலியூர் சரோஜா] தன் மகனை பள்ளிக்கூடத்துக்கு அனுப்புவார்; அவன்*

போகமாட்டேன் என்று அடம்பிடிப்பான்; தாய் அவன் கையைப் பிடித்து இழுத்துக்கொண்டு போகப்பார்ப்பார்; அவன் கீழே விழுந்து முரண்டு பிடிப்பான்; அப்போது எம்.ஜி.ஆர். அங்கு வந்து சில அருமையான கருத்துகளைப் பாட்டாக பாடுவார்; அந்தக் கடைசி வரி பொன்வரியாக அமைந்து அவரது வாழ்க்கையில் உண்மை ஆயிற்று. தாயின் சிறப்பையும் தனயனின் பொறுப்பையும் குறிக்கும் வரிகள் அவை

உன்னைப் பெற்றதனால் அவள் மற்றவராலே

போற்றப்பட வேண்டும்

கற்றவர் சபையில் உனக்காகத் தனி

இடமும் பெறவேண்டும்

உன் கண்ணில் ஒரு துளி நீர் வந்தாலும்

உலகம் அழ வேண்டும்

தாயின் சொல்லைக் கேள்; அவள் சொல்படி போய் படி; கற்றவர் சபையில் தனி இடம்பெறு என்று அறிவுறுத்தும் வரிகள்.

மாபெரும் சபையினில் நீ நடந்தால் உனக்கு

மாலைகள் விழ வேண்டும் – ஒரு

மாற்று குறையாத மன்னவன் இவனென்று

போற்றிப் புகழ வேண்டும்

என்று வேட்டைக்காரன் படத்தில் எம்.ஜி.ஆர். பாடிய பாடல் வரிகளும் குழந்தைகள் பொறுப்புடன் வளர்ந்து நல்ல நிலையை அடைந்து தனது பெற்றோருக்கு பெருமை தேடித் தர வேண்டும் என்ற கருத்தை உள்ளடக்கியது தான்.

9. எம்.ஜி.ஆரின் திரையிலும் வாழ்விலும் தமிழ்ப்பற்று



எம்.ஜி.ஆரைப் பார்க்காத சிறுவர்களும் எம்.ஜி.ஆர். இறந்த பின்பு பிறந்தவர்களும் கூட இன்று எம்.ஜி.ஆர். ரசிகர் மன்றங்களில் உறுப்பினராக இருக்கின்றனர். *12, 13* வயது சிறுவர்கள் இன்று எம்.ஜி.ஆர். ரசிகர்களாக இருப்பதை காணும்போது வியப்பாக இருக்கிறது. எம்.ஜி.ஆர். ரசிகர்கள் பாட்டி, அம்மா, அப்பா, அண்ணன், என்று பரம்பரை பரம்பரையாக வருகின்றனர். எம்.ஜி.ஆரைத் தங்கள் தெய்வம் போல, குலசாமி போல கருதும் பலர்

தங்கள் பிள்ளைகளை எம்.ஜி.ஆர். ரசிகர்களாக உருவாக்கியுள்ளனர். எம்.ஜி.ஆரும் தன் பங்குக்கு இவர்கள் மனதில் தாயையும், தமிழையும் போற்ற வேண்டும் என்ற கருத்தை ஊட்டி வளர்த்திருக்கிறார். *நாடோடி மன்னன்* படம் எடுத்ததன் நோக்கம் என்ன என்று அவரிடம் ஒரு நிருபர் கேட்டபோது "என் விருப்பத்துக்குப் படம் எடுக்க வேண்டும் என்றால் அது சொந்தப்படமாக இருந்தால்தான் முடியும். மற்றவர் படங்களில் என் கருத்தை அதிகம் எடுத்துரைக்க முடியவில்லை" என்றார். அவர் தன் சொந்தப்படத்தில் செய்திருந்த முதல் புதுமை, திமுக கட்சியை எம்.ஜி.ஆர். பிக்சர்ஸ் இலச்சினையில் இணைத்தது. அடுத்தது,

செந்தமிழே வணக்கம் திராவிட

வாழ்வினை சீரோடுவி ளக்கும்

செந்தமிழே வணக்கம்

ஐந்து இலக்கணங்கள் ஆய்ந்தே உயர்

தமிழுக்கு நீ தந்ததாலே செந்தமிழே வணக்கம்

என்ற பாடல். இப்பாடல் எம்.ஜி.ஆரைத் தொடர்ந்து எதிர்த்து வந்த வைகோவின் மறுமலர்ச்சி.தி.மு.க. கட்சியில் இறைவணக்கப் பாடலாக இன்று ஏற்றுக் கொள்ளப்பட்டிருக்கிறது. கலைஞரின் *'எங்கள்தங்கம்'* படத்தில் எம்.ஜி.ஆர். "**என் சாம்பலும் தமிழ் மணந்து வேக வேண்டும்**" என்று ஒரு வசனம் பேசுவார் அது உண்மையில் அவரது உள்ளக்கிடக்கையை உணர்த்திய வசனம் என்றுதான் சொல்ல வேண்டும். இந்த வசனத்தை கருணாநிதி அவருக்காக எழுதியிருப்பார். ஓடும் ரயிலை இடைமறித்து தமிழுக்காகக் கருணாநிதி போராடிய போராட்டத்தை

ஒரு பாடலில் சேர்க்க வேண்டும் என்று வாலியிடம் எம்.ஜி.ஆர். சொன்னதால் கலைஞரின் தமிழ்ப்பற்று அந்தப் பாடல் வரிகளில் இன்றும் மிளிர்கிறது. தமிழோடு தன்னை இரண்டற இணைத்துக்கொள்ளும் வேகமும் ஆர்வமும் எம்.ஜி.ஆருக்கு என்றும் இருந்து வந்தது.

தினமும் பத்து குறள்

எம்.ஜி.ஆர். தனது வீட்டில் இருப்பவர் தமிழில் மட்டுமே பேசவேண்டும்; 'குட்மார்னிங்' என்று சொல்லகூடாது ***'காலைவணக்கம்'*** என அழகாகச் சொல்ல வேண்டும்; வீட்டுக்கு விருந்தினர்கள் வந்தால் குழந்தைகள் வந்து "வாங்கவணக்கம்" என்று சொல்லி வணங்கி வரவேற்ற பின்பு வீட்டுக்குள் சென்று விட வேண்டும். பெரியவர்கள் பேசும்போது அருகிலிருக்கக் கூடாது. அவர்கள் கிளம்பும் போது வந்து 'போய் வாருங்கள் வணக்கம்' என்று சொல்ல வேண்டும் என பலபல நல்ல நடத்தைகளைக் கற்றுத் தந்திருந்த எம்.ஜி.ஆர். தமிழ்ப்பற்றை ஊட்டி வளர்ப்பதிலும் அதே கண்டிப்புடன் திகழ்ந்தார்.

எம்.ஜி.ஆர். அப்பு, ராதா என்று இரு மக்களை தத்து எடுத்து வளர்த்து வந்தார் என்பது பெரும்பாலோர் அறிந்த உண்மை. ஆனால் பலரும் அறிந்திராத விஷயம் அவர் தினமும் ராதா தன் பள்ளிப்பாடங்களை படித்து முடித்த பிறகு தூங்கப்போகும் முன்பு பத்து திருக்குறளை படித்து எம்ஜிஆரிடம் ஒப்பிக்க வேண்டும் என்று தன் மகளுக்கு இட்டிருந்த அன்பு கட்டளை. அதுபோல அவர் ஜானகி அம்மையாரின் மகனான

சுரேந்திரனையும் தினமும் ஒரு இறைவணக்கப் பாடலை சொல்லும்படி சொல்வார். சுரேந்திரனின் பிள்ளைகளுக்கு செங்குட்டுவன், இளங்கோ, கவிதா என்று நல்ல தமிழ் பெயர்களையே சூட்டி மகிழ்ந்தார். ராதாவின் பிள்ளைகளுக்கு சத்யா என்றும் முத்து என்றும் பெயர் சூட்டினார். இந்த பிள்ளைகள் இன்று அமெரிக்காவில் வசித்தாலும் எம்.ஜி.ஆரின் தமிழ்ப்பற்றை அவர்களின் பெயர்கள் முழங்கிக் கொண்டிருக்கின்றன என்பதில் வியப்பொன்றும் இல்லை.



அவர் ஊரார் பிள்ளைகளுக்கு வெற்றி மாறன், செந்தமிழ்க் குமரன், தங்கமாங்கனி என்று பெயர்சூட்டியது மட்டுமல்ல தன் வீட்டுப் பிள்ளைகளுக்கும் நல்ல தமிழ் பெயர்களையே சூட்டியுள்ளார் என்பது கவனிக்கத்தக்கது. இன்றும் ராதாம்மா கீதாம்மா ஆகியோர் பேசும் தமிழ் சென்னைத்தமிழ் சாயல் இல்லாமல் ஆங்கிலக் கலப்பில்லாமல் நல்ல தூய தமிழாகவே இருப்பதும் குறிப்பிடத்தக்கது.

எம்.ஜி.ஆரின் தமிழார்வம்

எம்.ஜி.ஆர். பிறப்பால் மலையாளியாக இருந்தாலும் அவர் விவரம் தெரிந்த பருவத்தில் இருந்து தமிழ்நாட்டிலேயே வாழ்ந்ததாலும் தமிழ்ப்பற்று கொண்ட மக்களுடன் பழகி வந்ததாலும் தமிழ் ரசிகர்கள் அவர் மீது உயிரையே வைத்திருந்ததாலும் அவருக்கு இயற்கையாகவே தமிழ் மீது பற்றும் பாசமும் உண்டாகிவிட்டது. திராவிட இயக்கச் சிந்தனையில் ஆழ்ந்த ஈடுபாடு கொண்டிருந்த எம்.ஜி.ஆருக்கு தமிழில் தனக்கு நல்ல படிப்பறிவும் பேச்சாற்றலும் இல்லையே என்ற ஏக்கமும் இருந்து வந்தது. அவர் சிறுவனாக நாடகக் கம்பெனியில் நடித்த போது அங்கு நாடக ஆசிரியர்களும் பாடலாசிரியர்களும் இலக்கியம், காவியம் குறித்து விவாதிப்பதை கேட்டு அவருக்குத் தமிழின் மீதும் இலக்கியத்தின் மீதும் தீராக்காதல் உண்டயிற்று. அப்போது இராமாயணம், மகாபாரதம் குறித்த பாடல்களும் அவருக்கு மனப்பாடம் ஆயிற்று. பின்னர் அவர் தொல்காப்பியம் முதலான நூல்களை கேட்டும், படித்தும் தெரிந்து கொண்டார். ஒருமுறை தொல்காப்பியத்தில் எட்டு மெய்ப்பாடுகள் சொல்லப்பட்டுள்ளன என்று தமிழ் சான்றோர் ஒருவர் பேசியபோது “இல்லை அதில் ஒன்பதாவதாக சமநிலையும் குறிப்பிடப்பட்டுள்ளதே” என்று விளக்கி அவரை வியப்பில் ஆழ்த்தினார்.

எம்.ஜி.ஆர். திராவிட முன்னேற்றக் கழகத்தில் சேர்ந்த போது தமிழே திராவிட மொழிகளுக்கு தாய் என்று பொது மேடைகளில் பேச்சாளர்கள் முழங்கினர். அதனால் அவருக்குத் தமிழ் மீது மாறாத

பற்றும் பாசமும் உண்டாயிற்று. பின்னர் அவர் புதுக்கட்சி தொடங்கி அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தின் பொதுச் செயலாளர் ஆனபோது கலைஞர் கருணாநிதி எம்.ஜி.ஆரை மலையாளத்தான் என்று ஏசினார். ஸ்ரீரங்கத்தை பூர்வீகமாகக் கொண்டவர் ஜெயலலிதா. அவரது தாத்தா கர்நாடகத்தில் மைசூர் மகாராஜாவிடம் அரண்மனை வைத்தியராக இருந்ததால் சந்தியா அங்கேயே வாழ்க்கைப்பட்டு அங்கு குடியிருந்தார். எனவே ஜெயலலிதாவும் அங்கு பிறந்தார். இந்தத் தகவல் உலகத்துக்கே தெரிந்திருந்தும் கலைஞர் கருணாநிதி ஜெயலலிதாவை ''கன்னடத்துக்காரி'' என்று ஏசினார். இருவருமே தமிழ்ப்பற்று மிக்கவர்கள் என்பதற்குப் பல்வேறு சான்றுகள் உண்டு.

நடிகையாக இருக்கும் போது கங்காகவுரி படப்பிடிப்புக்குச் சென்ற இடத்தில் கன்னட வெறியர்கள் வந்து ஜெயலலிதாவிடம் "கன்னடம் வாழ்க தமிழ் ஒழிக" என்று சொல்லுங்கள் என மிரட்டி வலியுறுத்திய போது "தமிழ் ஒழிக" என சொல்லவே மாட்டேன் என மறுத்துவிட்டார். அவர்கள் கொலை வெறி பிடித்தவர்கள் எனப்படப்பிடிப்பு நடத்தியவர்கள் எச்சரித்த போதும் ஜெயலலிதா அதற்கு அஞ்சவில்லை. சொல்ல மறுத்து விட்டார். தமிழ் மீது பற்று உடைய ஜெயலிதா தான் நடிக்கும் காலத்திலேயே மன உறுதி கொண்ட இரும்புப் பெண்மணியாக இருந்தார் என்பதில் சிறிதளவும் ஐயமில்லை].



செந்தமிழ்க் குலவேளிர் எம்.ஜி.ஆர்.

எம்.ஜி.ஆருக்கு தன்னை மலயாளத்தான் என்று ஏசியது மனதுக்குள் உறுத்தலாகவே இருந்தது. தன்னையும் தன் ரசிகர்களையும் பிரிக்கும் செயலாகவே இந்த ஏச்சு அவருக்குத் தென்பட்டது. மேலும் அவர் தன் மனத்தால் செயலால் சிந்தனையால் தமிழனாக வாழத்தொடங்கி பல வருடங்கள் கழிந்த பிறகும் தன்னை மலையாளத்தான் என்று கூறுவதை அவரால் சகித்துக்கொள்ள முடியவில்லை அப்போது அவரிடம் பேசிய ஒரு தமிழ்ப்பேரறிஞர் “நீங்கள் மலையாளத்தை சேர்ந்தவர் இல்லை. ஏன் வருந்துகிறீர்கள்? உங்கள் வம்சத்தினர் ஒரு காலத்தில் கேரளத்திற்குப் பிழைக்க போனவர்கள். நீங்கள் மன்றாடியார் வகுப்பை சேந்தவர்” என்றார். எம்.ஜி.ஆருக்கு இத்தகவல் காதில் தேனாக இனித்தது. இதை உங்களால் நிரூபிக்க முடியுமா என்றார். உடனே இதற்கான பணிகள் தொடங்கின. செந்தமிழ் குலவெளிர் எம்.ஜி.ஆர். என்ற நூல்வெளி

வந்தது அதில் எம்ஜிஆரின் முப்பாட்டனார்கள் வரலாறு ஒன்பது தலைமுறை வரை ஆராய்ந்து எடுக்கப்பட்டு தரப்பட்டிருந்தது. எம்.ஜி.ஆருக்கு இது பெரும் ஆறுதலையும் நிம்மதியையும் மகிழ்ச்சியையும் கொடுத்தது. அதே சமயத்தில் அவர் கருணாநிதி தெலுங்குக்காரர் என்பதைச் சுட்டிக்காட்டவும் தயங்கவில்லை. மறுக்க முடியுமா என்று சவால் விட்டார், கருணாநிதி அதன் பிறகு வாயைத் திறக்கவேயில்லை.

"நடிகன் என்ற முறையில் எனக்கு சமூக பொறுப்பு இருக்கிறது; அதை நிறை வேற்றும் கடமையும் எனக்கு இருக்கிறது" என்று கூறும் எம்ஜிஆர் "லட்சக்கணக்கான சிறுவர்கள் என்னை தங்கள் ஹீரோவாக மனதில் வைத்திருக்கிறார்கள் அவர்கள் மனதில் நஞ்சை நான் விதைக்க முடியுமா? நாட்டின் எதிர்காலம் அவர்கள்



கையில் அல்லவா இருக்கிறது'' என்று பொறுப்புடன் ஒரு பேட்டியில் பதில் அளித்த எம்.ஜி.ஆர். சிறுவர்களுக்கு நல்ல நல்ல கருத்துக்களை தன் படத்தின் மூலமாக கதாபாத்திரத்தின் மூலமாக பாடல்களின் மூலமாக விதைப்பதை தலையாயக் கடமையாக கொண்டிருந்தார். அதனால் தான்

நல்ல நல்ல பிள்ளைகளை நம்பி

இந்த நாடே இருக்குது தம்பி

சின்னஞ் சிறுகைகளை நம்பி

ஒரு சரித்திரம் இருக்குது தம்பி

எனப் பாடினர். பாடலாசிரியர் வேறு என்றாலும் கருத்து இவருடையதே.

திருக்குறள் முன்னேற்ற கழகம் [திமுக] என்று கலைவாணர் என்.எஸ்.கிருஷ்ணன் ஒரு படத்தில் பாட்டு பாடும் அளவுக்கு திருக்குறள் திராவிட இயக்கங்களின் வேத நூலாக இருந்தது. குறள்வழி வாழ்ந்த எம்.ஜி.ஆர். திருக்குறளைத் தன் படங்களில் இடம்பெறச் செய்தார். திருக்குறளை சிறுவர் பாடல்களில் போற்றியிருக்கிறார். குழந்தைகளை வாழ்த்தும்போது

'மலர் போல சிரித்து – நீ குறள் போல வாழு'

என்றும், தன்மகன்

'இரண்டு வரி கொண்டு மூன்று நெறி கண்ட குறளின் வழி பார்த்து சொல்வான்'

என்றும் பாடினர். மேலும் அவனை

முக்கனியின் சாறெடுத்து

முத்தமிழின் தேனெடுத்து

முப்பாலிலே கலந்து

எப்போதும் இனித்திருப்பாய்

என்றுவாழ்த்தினார்.

முதல்வராக எம்.ஜி.ஆர் தமிழுக்கு ஆற்றிய தொண்டு

எம்.ஜி.ஆர். சினிமாவில் தன் தமிழ்ப்பற்றை பிள்ளைகளுக்கு கற்றுக் கொடுத்ததோடு அவர் தன் கடமை முடிந்து விட்டதாகக் கருதவில்லை. அவர் முதலமைச்சரானதும் 1981 இல் உலகத்தமிழ் மாநாட்டை தமிழுக்குச் சங்கம் வளர்த்த மதுரை மாநகரில் நடத்தினார். சனவரி ஒன்று முதல் பத்து தேதிகள் வரை மதுரை ஒரே கொண்டாட்டக்களமாக இருந்தது. அது அவர் வெற்றி பெற்ற மதுரை மேற்கு சட்டமன்ற தொகுதி [எங்கள் தொகுதி] என்பதால் பொதுமக்களுக்கும் அறிஞர் பெருமக்களுக்கும் தனித்தனியாக தமிழ் இன்பத்தை அள்ளிப்பருக வசதி செய்யப்பட்டிருந்தது. பல்கலைக்கழக வளாகத்தில் தமிழ்ச் சான்றோர்களின் ஆய்வரங்குகள் நடந்தன. ரேஸ்கோர்ஸ் மைதானத்தில் கண்காட்சி. குமரிக்கண்டம் திரைக்காட்சி, எம்எஸ்சுப்புலட்சுமி பாட்டரங்கம், ஜெயலலிதாவின் காவிரி தந்தகலைச் செல்வி நாட்டிய நாடகம், கவியரங்கம், பட்டிமன்றம் எனத்தமிழின் தலை சிறந்த பெருமக்கள் பேச்சாளர்கள் ஆடல் பாடல் கலைஞர்கள் பங்கேற்று மாநாட்டைச் சிறப்பித்தனர். பிற மாவட்டங்களில் இருந்து வந்தும் மாநாட்டு நிகழ்ச்சிகளைப்

பொதுமக்கள் கண்டு களித்தனர். பத்து நாட்களும் மதுரை விழாகோலம் பூண்டிருந்தது. நிறைவு நாளன்று திமுக அணியில் இருந்த பாரத பிரதமர் அன்னை இந்திராகாந்தி வந்து வாழ்த்தி பேசினார்.

தமிழ்ப் பல்கலைக்கழகம்

மதுரையில் உலகத்தமிழ் மாநாடு நடத்திய எம்.ஜி.ஆர். தஞ்சையில் தமிழுக்கு எனத்தனிப் பல்கலைக்கழகம் அமைத்தார். அதற்கென்று ஆயிரம் ஏக்கர் நிலம் வழங்கினார். வருமானம் ஈட்டாத பல்கலைக்கழகமாக ஆராய்ச்சி கழகமாக இருக்க வேண்டும் என்று விரும்பி முதுகலைப் படிப்புகள் கூட வைக்காமல் ஆராய்ச்சிக்கு மட்டும் எனத்தொடங்கினார். ஆனால் அதற்குப் பின் ஆட்சிக்கு வந்தவர்கள் அதன் நோக்கத்தை குலைத்து விட்டனர். முழுக்க முழுக்க அரசின் நிதியிலேயே அந்தப் பல்கலைக்கழகம் நடத்த திட்டமிடப்பட்டு அதிக தொகை அதற்கு ஒதுக்கப்பட்டது. அதன் பிறகு வந்தவர் ஆட்சியில் சம்பளம் கொடுக்க முடியாமல் நூலகத்தொகையை எடுத்து சம்பளம் போட்டதாகக்கூட கேள்விப்பட்டதுண்டு.

தமிழாசிரியர் பெருமை

எம்.ஜி.ஆர். ஆட்சியில் தமிழ் ஆசிரியர்கள் துணைத்தலைமை ஆசிரியர்களாக நியமிக்கப்பட்டனர். ஆசிரியர்கள் கற்பித்தல் பணியை மட்டும் மேற்கொண்டால் மட்டும் போதும்; நெருக்கடி நிலை அறிவிக்கப்பட்ட போது கட்டாயப்படுத்தப்பட்டு செய்தது போல இனி கருத்தடைக்கு ஆள் பிடிக்க தேவையில்லை என்ற மாற்றமும் எம்ஜிஆரால் கொண்டு வரப்பட்டது.

கணவருக்கு மனைவி வேலைபார்க்கும் ஊருக்கு மாற்றல் வழங்கவும் முன்னுரிமை தரப்பட்டது. கணவன் மனைவி அருகருகே வேலை பார்க்கும் வகையில் குடும்பத்தினர் ஒரே இடத்தில் சேர்ந்து வாழும் வகையில் அவர்களுக்கு மாற்றல் வழங்கப்பட்டது.

எழுத்துச் சீர்திருத்தம்

தமிழின் எழுத்துருவங்கள் பல நூற்றாண்டுகளாக மாற்றம் பெற்று வந்துள்ளன. வீரமாமுனிவர் காலத்தில் அவர் தான் எகர ஒகரங்களுக்கு குறில் நெடில் வேற்றுமையை கொண்டுவந்தார். இவ்வாறிருக்க மொழியியல் அறிஞர்கள் தமிழில் எழுத்துச் சீர்திருத்தம் கொண்டு வர முனைந்த போது அதற்கு தமிழ்ப் பெருமக்கள் கடும் எதிர்ப்பு தெரிவித்தனர் எம்.ஜி.ஆர். பெரியார் தம் 'விடுதலை' நாளிதழில் பின்பற்றிய எழுத்து சீர்திருத்தங்களை துணிந்து அரசு பதிவுகளிலும் தமிழில் எழுதப்பட்ட பாட நூல்களிலும் அறிமுகப்படுத்தினார். ***லை, னை, ணா, னா*** *ஆகியன அன்று முதல் மாற்றம் பெற்றன. தி.மு.க தலைவர்கள் அண்ணாத் துரை கருணாநிதி ஆகியோரின் கையெழுத்தைப் பார்த்தால் முன்பு* ***ணா*** *எவ்வாறு எழுதப்பட்டது என்பதைத் தெரிந்து கொள்ளலாம்.*

தமிழ் அறிஞர் பிள்ளைகளுக்குச் சலுகை

தமிழ்ச் சான்றோர் பலர் ஆரம்ப கட்டத்தில் சுயமரியாதையை வலியுறுத்துதல், பகுத்தறிவு பிரச்சாரம் செய்தல், பின்னர் இந்தி எதிர்ப்பு போராட்டம் என தீவிரமாக பொதுத் தொண்டில் ஆழ்ந்து விட்டதால் குடும்பப் பொறுப்புகளைக்

கவனிக்க முடிமாமல் இருந்து விட்டனர். இவர்களைப் போல இவர்களின் பிள்ளைகள் அறிவாளிகளாக இருந்தும் ‘சான்றோன் ஆக்குதல் தந்தைக்குக் கடனே’ என்ற கடமையைத் தவிர்த்து இப்பெருமக்கள் சமுதாய விழிப்புணர்வுப் பணியில் முழுமூச்சாக இறங்கி விட்டதால் இந்த பிள்ளைகள் ஓரிரு சதவீதத்தில் மருத்துவம் பொறியியல் போன்ற தொழில் கல்வி படிப்புகளை இழக்கும்நிலை ஏற்பட்டது. அப்போது எம்.ஜி.ஆர். தமிழ்ப் பெருமக்களின் பிள்ளைகளுக்கு என இரண்டு சதவீதம் ஒதுக்கீடு அளித்துச் சிறப்பித்தார். இதனால் எம்.ஜி.ஆரை அதுவரை திட்டித் தீர்த்த திமுகவைச் சேர்ந்த பெருமக்களின் பிள்ளைகளும் பலனடைந்தனர்.

உலகத் தமிழ்ச்சங்கம்

மதுரையில் உலகத் தமிழ்சங்கம் கொண்டு வரவேண்டும் என்று அவாவிய எம்ஜிஆரின் உள்ளம் அவர் அமெரிக்கா சென்று சிகிச்சை பெற்று மறுபிறவி எடுத்து திரும்பிய பிறகு அதைச் செயல்படுத்தியது. எம்.ஜி.ஆர். இந்த உலகத் தமிழ்ச்சங்கத்துக்கு எட்டு கோடி ரூபாய் நிதி அளித்தார். தாமரையின் மீது ஏடுகளும் உலக உருண்டையும் இருப்பது போன்ற சின்னம் வடிவமைக்கப்பட்டது; தொடக்க விழா நடந்தது. பேச்சு பயிற்சி எடுத்து வந்த எம்.ஜி.ஆர். இந்த விழாவில் மிகுந்த பயிற்சி எடுத்து தெளிவான உச்சரிப்புடன் பேசினார். ‘உலகமெலாம் தமிழ்பரவும் வகை செய்ய வேண்டும் என்ற கொள்கையுடன் உலகத் தமிழ்ச் சங்கத்தை ஆரம்பித்தார். அதற்காக நிலம் கையகப்படுத்தப்பட்டது. அந்தத் திட்டம் எம்.ஜி.ஆரால் தொடங்கப்பட்டது என்பதால் கருணாநிதி அப்படியே கிடப்பில் போட்டுவிட்டார். ஜெயலலிதா கடைசியாக பதவிக்கு

வந்தபோது போனால் போகிறது என்று தொடங்கி வைத்தார். இச்சங்கம் இப்போது பெயரளவில் நடந்து கொண்டிருக்கிறது. இன்னும் தீவிரமான செயல்பாடுகளில் இறங்கவில்லை. நூலகம் கண்காட்சி போன்ற வேலைகள் ஓரளவு முடிந்துள்ளன. அவ்வப்போது கருத்தரங்குகள் நூலாய்வு போன்றவை நடக்கின்றன. எம்.ஜி.ஆர். தொல்பொருள் ஆய்வு, கல்வெட்டாராய்ச்சி போன்றவை சிறப்பாக நடைபெற வேண்டும்; தமிழின் தொன்மை உலக அரங்கில் நிலை நிறுத்தப்பட வேண்டும் என்று விரும்பினார். அதற்கான சில திட்டங்களை வைத்திருந்தார். ஆனால் அவை நடைபெறவில்லை என்று அவருடன் பணியாற்றிய ஐ.ஏ.எஸ் அதிகாரி நாளிதழ் ஒன்றில் தெரிவித்திருந்தார்.

நிறைவு

எம்.ஜி.ஆர். தமிழை நேசித்தார். தன்னைப் போல் அடுத்த தலைமுறையும் நேசிக்க வேண்டும் என தீர்மானித்தார். தன் படங்களில் பாட்டுக்களில் தமிழின் சிறப்பை பிள்ளைகளுக்கு எளிமையாக ஊட்டினார். அது மட்டுமல்ல தன் அன்றாட வாழ்க்கையிலும் குடும்பத்திலும் ஆட்சியிலும் தமிழைப் போற்றினார். “**நாடோடியாக தமிழ்நாட்டுக்கு வந்தேன். உயிர் வாழ்வதற்காக ஒரு நாடகக் கம்பெனியில் சேர்ந்தேன். சிறிய அளவில் தமிழ் மொழியை கற்றேன். வாழ வழியின்றித் தவித்த எனக்கு தமிழ் நாடும் தமிழ் மொழியும் வாழ்வளித்தன. இந்தத் தமிழ் நாட்டை என்றும் மறக்க மாட்டேன் என்னை வாழ வைத்த தமிழ் மொழி வாழ வேண்டும் அந்த மொழி வளர்ச்சிக்கு என்னால் இயன்ற உதவியை செய்யத் தயங்கமாட்டேன்**” என்ற அவரது பேச்சு அவரது தமிழ்ப்பற்றை உறுதிப்படுத்துகிறது.

10. சிறுவர்களுக்கு எம்.ஜி.ஆர். புகட்டிய உழைப்பின் பெருமை



திருடாதே படத்தில் எம்.ஜி.ஆர். குழந்தைகளுக்கு பூந்தி வழங்கும்போது ஒரு குழந்தை மட்டும் அதுவே கையை விட்டு பூந்தியை அள்ளும். அதைப் பார்த்ததும், உரியவர் அனுமதி இல்லாமல் எடுப்பதைக் கண்டித்து

திருடாதே பாப்பா திருடாதே

வறுமை நிலைக்குப் பயந்து விடாதே

திறமை இருக்கு மறந்து விடாதே

திருடாதே பாப்பா திருடாதே

எனப் பாடுவார். இது பாப்பாவுக்கு மட்டுமல்ல பெரியவருக்கும் சேர்த்து சொல்லப்பட்ட கருத்து ஆகும்.

வறுமை அல்லது தேவைக்காகத் திருடுவதும் குற்றம் குற்றமே. திருக்குறள், பெற்றவள் பசியைப் போக்க கூட திருடக்கூடாது என்கிறது. யாரும் பார்க்கவில்லை என்று நாலாபுறமும் சுற்றிப் பார்த்துவிட்டு செய்யும் குற்றத்தையும் மேலே இருந்து இறைவன் பார்க்கின்றான். அவன் நம் கணக்கில் எழுதிக்கொள்வான் என்ற அச்சம் எவருக்கும் ஏற்பட வேண்டும்.

திருடாதே படம் தாயின் பசியை போக்க திருடுவதாக எம்.ஜி.ஆர். திருட்டுக்கு நியாயம் கற்பித்தாலும் அவர் திருடிய பணத்தில் இருந்து தரும் நன்கொடையை அநாதை பள்ளி நடத்தும் பெரியவர் ஏற்றுக் கொள்ள மறுத்து விடுவார். திருட்டுப் பணத்தில் தர்மம் செய்யாதே, இந்தப் பணத்தை இந்த ஆனாதை ஆசிரமம் ஏற்றுக் கொள்ளாது என்பார். வேலையில்லாத் திண்டாட்டமும், வறுமையும் பசியும், பட்டினியும் வாட்டிய காலம் அது. பட்டினிச்சாவு மிகுந்த காலத்திலும் திருட்டை யாரும் ஆதரித்ததில்லை. எம்.ஜி.ஆர். பாட்டிலும் வசனத்திலும் காட்சியிலும் இதை வலியுறுத்தினார். கெட்ட பழக்கம் சிறு வயதில் தொடங்குவதால் சிறுவர்களுக்கு அறிவுரை கூறினார்.

தெரிந்தும் தெரியாமல் நடந்திருந்தால் - அது

திரும்பவும் வராமல் பார்த்துக்கோ

என்ற வரிகள், தவறு செய்பவன் மனிதன் அதை மன்னித்து ஏற்றுக்கொள்பவன் தெய்வம் எனப்

பெரியவர்கள் சொல்வதால் தவறி நடந்தால் நீயே உன்னை திருத்திக்கொள் என்கிறார்.

> ***தவறு என்பது தவறி செய்வது***
>
> ***தப்பு என்பது தெரிந்து செய்வது***
>
> ***தவறு செய்தவன் திருந்தப் பார்க்கணும்***
>
> ***தப்பை செய்தவன் வருந்தியாகணும்***

என்று மற்றொரு பாடலில் நல்ல நல்ல பிள்ளைகளை நம்பி இந்த நாடே இருக்குது தம்பி என்ற நம்பிக்கையைக் கொடுக்கிறார். ஆக வாழ்க்கையில் முறைகேடுகளை நியாயப்படுத்தாமல் திருந்தி விடுவதே நல்லது என்பது எம்ஜிஆரின் வாழ்வியல் கருத்தாகும்.

பிச்சைக்காரன் தொழில் முனைவோர் ஆன கதை

இரயில் நிலையத்தில் இரு கால்களையும் இழந்த ஒரு பிச்சைக்காரன் சினிமா பாட்டுபாடி பிச்சை எடுத்து கொண்டிருந்தான். ஒரு நாள் அங்கு எம்.ஜி.ஆர். வரப்போவதாகத் தெரிந்ததும் அவன் அங்கிருந்த போலிசாரிடம் ‘‘அய்யா எனக்கும் எம்.ஜி.ஆரைப் பார்க்கணும் அவரை நல்லா பார்க்குற மாதிரி ஒரு இடத்தில் என்ன இருக்கச் செய்யுங்கள்’’ என்று வேண்டிக் கேட்டுக் கொண்டான். அவரும் சம்மதித்து ஒரு இடத்தில் இருக்கும்படி கூறினார். எம்.ஜி.ஆர். அந்தப் பக்கமாக நடந்து வந்ததும் இந்த பிச்சைக்காரன் ‘எம்.ஜி.ஆர். வாழ்க’ என்று உற்சாகமாக முழங்கினான். எம்.ஜி.ஆர். குனிந்து பார்த்தார். இவனது நிலை கண்டு நின்றார். அங்கிருந்த போலீஸ்காரரர் ‘‘சார் பிச்சைக்காரன்; ரயிலில் பாட்டுபாடி பிச்சை எடுப்பான்’’ என்றார்.

உடனே எம்.ஜி.ஆர். அவனிடம் ஐந்து பத்து ரூபாய் நோட்டுகளை கொடுத்து பிச்சை எடுக்காதே; உழைச்சுப் பிழைக்கணும் என்று சொல்லி விட்டுப் போய்விட்டார். இவனுக்கு சுரீர் என்று உறைத்தது. உடனே புது துணி எடுத்து உடுத்தி கொண்டு சில வார நாளிதழ்களை வாங்கி விற்க ஆரம்பித்தான். இப்போது இவன் தொழில் முனைவோர் ஆகிவிட்டபடியால் அருகில் இருந்த தேவாலயத்தில் இவனுக்குத் தங்க இடம் கிடைத்தது. அதன் பிறகு அவர் கைக்குட்டை, பேனா வாங்கி டி.நகர்., ரங்க நாதன் தெருவில் விற்றார்.

இவர் இரவில் தங்கும் தேவாலயத்தில் பிரார்த்தனைக்கு வரும் ஒருவர் இவருக்கு சக்கர நாற்காலி வாங்கிக் கொடுத்தார். பின்பு டி.நகரில் ஒரு சிறிய கடையில் ஒரு பகுதியில் ஒரு மேசை மட்டும் போட்டுக் கொண்டு சில பொருட்களை வாங்கி வைத்து விற்பனை செய்து வந்தார். மெல்ல மெல்ல முன்னேறினார். இப்போது யாரும் நம்ப இயலாத நிலைக்கு உயர்ந்து விட்டார். கோடீசுவரனாக இருக்கிறார்; சொகுசு கார் வைத்திருக்கிறார்; அதை கொஞ்சம் மாற்றி அமைத்து தானே ஓட்டுகிறார். எம்.ஜி.ஆருக்கு விழா எடுப்பதாகப் போய் எவரொருவர் சொன்னாலும் உடனே ஆயிரங்களை அள்ளிக் கொடுப்பார். பிச்சை எடுப்பது கேவலம்; உழைத்துப் பிழைக்க வேண்டும் என்ற எண்ணத்தை அவரிடத்தில் உருவாக்கிய வழிகாட்டி அல்லவா எம்.ஜி.ஆர்.

இதைப் போல பல சம்பவங்களை எம்.ஜி.ஆர். வாழ்க்கையில் இருந்து எடுத்துக்கூறலாம்.

உழைப்பின் உயர்வு

உழைப்பதிலா உழைப்பைப் பெறுவதிலா இன்பம்

உண்டாகும் என்றே சொல் என் தோழா

உழைப்பவரே உயர்வு பெறுவதிலே இன்பம்

உண்டாகும் என்றே சொல் என் தோழா

என்று நாடோடி மன்னன் படத்தில் குதிரையில் பயணிக்கும் போது பாடும் பாடல் ஒன்று இடம் பெற்றிருந்தது. உழைப்பின் உயர்வை உணர்த்தும் கருத்துச் செறிவுள்ள பாடல் வரிகள்.

உழைப்பால் உயர்ந்த எம்.ஜி.ஆர்.

எம்.ஜி.ஆர். '**உழைப்பவரே உயர்ந்தவர்**' என்று தான் ஆட்டோகிராபில் எழுதிக் கையெழுத்துப் போடுவார். காரணம் அவர் உழைப்பின் சுவை அறிந்தவர். உழைப்பு என்பது உடல் உழைப்பு மட்டுமல்ல; மூளை உழைப்பையும் சேர்த்துதான் குறிப்பிடுகிறது. மலைக்கள்ளன், மர்மயோகி, போன்ற வெற்றிப் படங்கள் வந்த பிறகும் அவர் தன் படங்களில் சில மாற்றங்களைச் செய்யச் சொல்லும் போது இயக்குனர்கள் சம்மதிக்கத் தயங்கினர். தயாரிப்பாளரிடம் பஞ்சாயத்து நடந்தது எம்.ஜி.ஆரின் வசிய சக்தியால் தயாரிப்பாளர் சம்மதித்து விடுவார். ஆனாலும் எம்.ஜி.ஆருக்கு அது பெரிய பிரம்மப்பிரயத்தனமாக இருந்தது. அதனால் தன் விருப்பத்துக்கு தன் மூளையின் ஆற்றலை செலவழித்து சொந்தப் படம் எடுக்கிறார். பெரும் பொருட்செலவில் மூன்று படம் எடுக்கும் செலவில் நாடோடி மன்னன் என்ற பெயரில் ஒரே படம் எடுத்தார்.

தெற்கு ஆசியாவின் மிகப்பெரிய திரை அரங்கமான மதுரை, தங்கம் தியேட்டரில் வெள்ளிவிழா கொண்டாடியது. மதுரை ரசிகர்கள் மதுரை முத்து தலைமையில் அவரை குதிரைகள் பூட்டிய சாரட் வண்டியில் அமர்த்தி நகர்வலம் அழைத்து வந்து 110 பவுனில் தங்கவாள் பரிசளித்தனர் அதைப் பின்னர் அவர் கர்நாடகாவில் கொல்லூரில் உள்ள மூகாம்பிகை கோயிலுக்கு காணிக்கையாகக் கொடுத்து விட்டார். அந்த வாள் வெள்ளிக்கிழமை தோறும் அம்மனின் அருகில் சார்த்தப்பட்டிருக்கும்.

உழைப்புக்கேற்ற ஊதியம்

நாடோடி மன்னன் படத்தில் அவர் மன்னனானதும் அனைவருக்கும் திறமைக்கேற்ற தொழில் உழைப்புக்கேற்ற ஊதியம் வழங்கப்படும் என்று ஒரு வசனம் இடம் பெற்றது. பலர் இன்று தனியார் நிறுவனங்களில் உழைப்பை உறிஞ்சிக்கொண்டு குறைந்த ஊதியம் தருகின்றனர். ஆனால் எம்.ஜி.ஆர். அப்படி கிடையாது. அவர் படத்தில் நடித்தால் நல்ல ஊதியம் கிடைக்கும் அதுவும் அவர் சொந்த படம் என்றால் பணத்தைத் தண்ணீராக செலவழிப்பார். கடன் பட்டாவது அனைவருக்கும் சகல வசதிகளும் செய்து கொடுப்பார். காரணம், எம்.ஜி.ஆர். உழைப்பின் பலனை ருசிபார்த்தவர், அது தரும் தனி ஆனந்தத்தை அனுபவித்தவர். எனவே அனைவரும் கடுமையாக உழைத்து; அதன் சுகத்துக்கு அடிமையாகுங்கள்; அடுத்தவரின் உழைப்பைச் சுரண்டாதீர், பிறர் உழைப்பில் வாழாதீர் என்று உபதேசம் செய்யும் தகுதி பெற்றிருந்தார்.

ஏழையின் உழைப்பைச் சுரண்டக்கூடாது அவனுக்கு நல்ல கூலி கொடுக்க வேண்டும் என்பதில் உறுதியான நம்பிக்கை கொண்டிருந்த எம்.ஜி.ஆர். தன் படங்களில் நடித்தவருக்கு நல்ல சாப்பாடும், சம்பளமும் பெற்றுத் தந்தார். அதனால் அவர் படங்களில் நடிக்க அனைவரும் ஆர்வமாய் இருந்தனர். ஏழையின் கண்ணீர் கூரிய வாளை ஒக்கும் என்பதை நன்றாக புரிந்து கொண்ட எம்.ஜி.ஆர். அதை தன் பாடலிலும் அதை வலியுறுத்தினார். முகராசி படத்தில் **கேளம்மா சின்ன பொண்ணு கேளு** எனத்தொடங்கும் பாடலில்

'ஏழை மனம் பாடுபட்டால்

என்னென்னவோ நடக்கும்'

என்றார். உழைப்பின் வியர்வை உலரும் முன்னே கூலி கொடுக்க வேண்டும் என்று கிறிஸ்தவ மறை நூல் கூறும் அது எம்.ஜி.ஆர். வாழ்வில் உண்மையாகி விட்டது அவர் படங்களில் படம் வெளிவருவதற்கு முன்பே அனைத்துப் பணியாளருக்கும் சம்பளம் கொடுத்து முடிக்க வேண்டும் என்பது ஒரு கடுமையான நடைமுறை. படம் வெளியான பின்பு வரும் இலாபம் விநியோகஸ்தருக்குப் போய்விடும் அதில் காலணா கூட பணியாளர்களுக்கு கிடைக்காது. அவர்களுக்குக் கிடைப்பதெல்லாம் முன்னர் பேசப்பட்ட சம்பளம் மட்டுமே என்பதால் அதை பாக்கி வைக்காமல் முழுமையாகக் கொடுத்துவிட வேண்டும் என்பதில் எம்.ஜி.ஆர். கண்டிப்பாக இருந்தார்.

செலவும் ஜப்தியும்

எம்.ஜி.ஆர். உலகம் சுற்றும் வாலிபன் படம் எடுத்தபோது வெளி நாட்டு படப்பிடிப்பில் ஓட்டல்களில் தங்கியிருந்த நடிக நடிகையர் ஐஸ்கிரீம் வாங்கி சாப்பிட்டதில் மட்டும் எண்பதினாயிரம் பில் வந்திருந்தது. இதனால் அவருக்கு தயாரிப்புச் செலவு அதிகமாகி அவர் ராமாவரம் வீட்டை அடமானம் வைக்க நேர்ந்தது. ஒரு நாள் அது ஜப்திக்கும் வந்து விட்டது. பின்பு தடையாணை வாங்கி வீட்டை மீட்டார். அது தனிக் கதை.

உழைப்பின் பலன் உவகை

எம்.ஜி.ஆர். வெளிநாட்டுக்கு தான் அழைத்து சென்ற இருபத்தைந்து பேருக்கும் இரண்டு செட்கோட்ஸூட், பட்டு சேலை மற்றும் சென்ட், பாட்டில், கேமரா என வேண்டிய பரிசு பொருட்களை ஏராளமாக வாங்கிக் கொடுத்தார். அவரவர் செலவுக்கும் கையில் ஒரு தொகையும் கொடுத்திருந்தார். அவர் *நாடோடி மன்னன்* எடுத்தபோது தயாரிப்புச் செலவை கேட்டு அவர் அண்ணன் சக்கரபாணிக்கு வந்த எரிச்சல், *உலகம் சுற்றும் வாலிபன்* எடுத்தபோது ஆர்.எம்.வீரப்பனுக்கு வந்தது. எம்.ஜி.ஆர். தன் விருப்பப்படி அதை வாங்கிக் கொடு, இதை வாங்கிக் கொடு என்று சொல்லிவிடுவார். வீரப்பனுக்கு இருக்கும் பணத்தை வைத்து சமாளித்து எம்.ஜி.ஆர். சொன்னபடி வாங்கிக் கொடுத்து அவர்களை தமிழ்நாட்டுக்குத் திரும்ப அழைத்து வருவதற்குள் போதும் போதும் என்றாகிவிட்டது. எம்ஜிஆர். தன்

படத்தில் வேலை பார்ப்பவருக்குத் தாராளமாகச் செலவு செய்ய அஞ்ச மாட்டார்; தயங்கமாட்டார்.

உலகம் சுற்றும் வாலிபன் படத்தில் சிறுவர்களிடம் அவர் உழைப்பின் மகிமையை அவருக்கு மனதில் ஆழமாகப் பதிய வைக்க வேண்டும் என்பதற்காக

சிரித்து வாழ வேண்டும் பிறர்

சிரிக்க வாழ்ந்திடாதே

உழைத்து வாழ வேண்டும் பிறர்

உழைப்பில் வாழ்ந்திடாதே

எனப்பாடுவார். இது ஏதோ ஒரு பாடல் ஆசிரியர் எழுதிக் கொடுத்து அதை டி.எம்.சௌந்திரராஜன் பாடி எம்.ஜி.ஆர். வாயசைத்து கையசைத்த பாடல் அல்ல.

அப்படி எம்.ஜி.ஆர். படப்பாட்டுகளையும், காட்சிகளையும் கருதக்கூடாது. எம்.ஜி.ஆரின் சொந்தக் கருத்துகளையே அவர் பாடி நடிக்கிறார். அவருக்கு உடன்பாடில்லாத கருத்துக்களை அவர் பாடமாட்டார்; நடிக்க மாட்டார் என்பதை நினைவிற்கொள்ள வேண்டும்.

ஏதிலி பெண்களுக்கு உதவி

ஒரு பொதுக் கூட்டத்தில் எம்.ஜி.ஆர். பேசிக்கொண்டிருந்த போது கால் நடக்க முடியாத இரு பெண்கள் அவர் நின்றிருந்த மேடையை நோக்கி நகர்ந்து வந்ததைப் பார்த்த எம்.ஜி.ஆர். அவர்களுக்கு வழிவிடும்படி கூறினார். அருகில் வந்ததும் என்ன வேண்டும் என்று கேட்டார். அவர்கள் நாங்கள் அநாதைகள்; சகோதரிகள்; அம்மா, அப்பா யாரும்

இல்லை தையல் மிஷின் இருந்தால் பிழைத்துக் கொள்வோம் என்றனர்.

உடனே எம்.ஜி.ஆர். தன் மெய்க்காப்பாளர்களை அனுப்பி கையால் தைக்கும் தையல்மிஷின் வாங்கி வரச்சொன்னார், அப்போது மணி பத்துக்கு மேலாகிவிட்டது. 'எள் என்றால் எண்ணெயாக' நிற்கும் அவர்கள் கடைகளைத் திறக்க செய்து இரண்டு கைத்தையல் மிஷின்கள் வாங்கி வந்து கொடுத்தனர். எம்.ஜி.ஆர். அந்தப் பெண்களுக்கு ஆளுக்கு இரண்டாயிரம் கொடுத்து 'உழைத்துப் பிழைக்க முன் வந்ததில் மகிழ்ச்சி' என்று வாழ்த்தி அனுப்பினார்.



உழைப்புக்கு மதிப்பு

ஏழைத் தொழிலாளர்களை கிள்ளுக் கீரையாக கருதும் ஆணவம் பிடித்த பணக்காரப்பெண் ஒருத்தியின் செருக்கை உடைத்து அவளுக்கு உழைப்பின் மதிப்பை உணர்த்தும் பாடலில் சிறுவர்களையும் சேர்த்து கொள்வார். அப்பாடல் கேலிப் பாடலாக தோன்றினாலும் கருத்துள்ள பாடல் ஆகும். குமரிக் கோட்டம் படத்தில் சிறுவர்கள் மத்தியில் ஜெயலலிதாவிடம்

பட்டோடு பருத்தி பிண்ணி எடுத்துஉங்கள்

பகட்டுக்கு புத்தாடையார் கொடுத்தார்

கட்டாந்தரையிலே கல்லை உடைத்து உங்கள்

கண்ணாடி மாளிகையை யார் படைத்தார்.

என்றும் அடுத்த சரணத்தில்

பத்தும் பறந்தோடும் பசிப்பிணிக்கு உங்கள்

பவளமும் வைரமும் பயன்படுமா

பாலோடு பச்சரிசி படியளக்கும் இந்தப்

பண்பான மக்களிடம் அலட்சியமா?

என்றும்கேட்பார். இந்த பாடல் வரிகளில் சிறுவர்கள் இடம் பெற்றிருப்பர். உழைப்பின் மகத்துவத்தை சிறு வயதில் உணர வேண்டும், என்பதற்காக இந்த காட்சியில் சிறுவர்களும் இடம் பெற்றனர். மேலும் சிறுவன் வண்டியின் குறுக்கே வந்து விழுந்ததற்கு அவனை அடிக்க கை ஓங்கும் ஆணவம் அந்த பணக்காரப் பெண்ணுக்கு இருந்ததை கண்டிக்கும் விதமாகவும் இந்த பாட்டு அமைந்திருக்கும்.

நல்ல நேரம் *படத்தில் எம்ஜிஆர் யானைகளை வைத்து வித்தை காட்டி அவரும் சில உயிருக்கு ஆபத்தான செயல்களை செய்து வருமானம் ஈட்டுவார். அப்போது பாடும் பாட்டும் உழைப்பின் பெருமையை உணர்த்துவதாகும்.*

ஓடி ஓடி உழைக்கனும்

ஊருக்கெல்லாம்கொடுக்கணும்

ஆடிப் பாடி நடிக்கணும்

அன்பைநாளும்விதைக்கணும்

எனத் தொடங்கும் பாடலில் ஒரு ஜான் வயிற்றுக்காக மனிதன் படும்பாடுகளை விவரிக்கும் வரிகள் அற்புதமானவை

வயித்துக்காக மனுஷன் இங்கே

கயித்தில் ஆடுறான் பாரு

ஆடி முடிச்சு இறங்கி வந்தா

அப்புறம் தாண்டா சோறு

என்று கழைக் கூத்தாடியின் நிலையைப் பாடியிருப்பார். மேலும்

நாம் பாடுற பாட்டும் ஆடுற ஆட்டமும்

படிப்பினைத் தந்தாகணும் நாட்டுக்கு

படிப்பினைத் தந்தாகணும்

என்பார். இந்த வரிகள் ஒவ்வொரு மனிதனுக்கும் சமூகக்கடமை இருக்கிறது என்பதை அழகாக உணர்த்துகிறது. "ஒரு நடிகன் என்ற முறையில்

எனக்கு சமூகப்பொறுப்பு இருக்கிறது'' என்று அவர் கூறியிருந்தார். அதைப் பல இடங்களில் வெளிப்படுத்தவும் செய்தார். அந்த உணர்வு அவரது மனத்தில் ஆழமாக இருந்ததனால் அதை படங்களில் செயல்படுத்தினார். பின்னர் அவர் தனிக்கட்சி ஆரம்பித்த போது இந்தக் காட்சிகளும் பாடல்களும் அவருக்கு மக்களின் நம்பிக்கையைப் பெற்றுத் தந்தன.

உழைப்பவருக்கு உதவி செய்தல்

எம்.ஜி.ஆர். ரிக்க்ஷாக்காரன் படத்தில் நடித்த பிறகு அந்த படம் ஓடி வெற்றி பெற வேண்டும் என்று நினைத்து ரிக்க்ஷாகாரர்களுக்கு அவர் உதவி செய்யவில்லை. 1961 இல் மழையில் நனைந்த ரிக்க்ஷாக்காரர் ஒருவர் தன் ரிக்க்ஷா நனையக் கூடாது என்று மூடி வைத்ததை அவர் பார்க்கிறார். தாயுள்ளத்துடன் அவர்களுக்கு மழைக்கோட் வாங்கித் தர முடிவெடுக்கிறார். தன் சத்யா ஸ்டுடியோவில் இரவு பகலாக தையல்காரர்களை வைத்து தைத்து ஐயாயிரம் பேருக்கு அறிஞர் அண்ணாவின் பொறக்கரத்தால் மழைக்கோட் வழங்குகிறார். பத்து வருடங்கள் கழித்து தான் ரிக்க்ஷாக்காரன் படத்தில் நடிக்க அவருக்கு வாய்ப்புக் கிடைத்தது. உழைப்பவருக்கு உதவுவதில் எப்போதும் முன்னணியில் நிற்பவர் எம்.ஜி.ஆர். இதனால் தான் உழைக்கும் கரங்கள், ஊருக்கு உழைப்பவன் என்ற படப்பெயர்கள் அவருக்குப் பொருந்தியதை போல வேறு யாருக்கும் பொருந்தியதில்லை.

ஒருவருக்குத் தக்க காலத்தில் செய்த உதவி இவ்வுலகத்தில் மிகப் பெரியதல்லவா. அதுபோல உரிய காலத்தில் எம்.ஜி.ஆர். உழைப்பாளிகளுக்கு செய்த உதவி அவருக்குத் தக்க காலத்தில் வாழ்த்துக்களைப் பெற்று அவரை நோயிலிருந்து குணம் பெற்று மீண்டும் வாழ வைத்தது. மீனவனாக, கைவண்டி இழுக்கும் தொழிலாளியாக, பூட்டுவிற்பவனாக, பெயிண்டராக, கிணற்றில் தூர் வாருபவனாக, சாலைப் பணியாளராக, மாட்டுக்காரனாக, விவசாயியாக, பரிசல் ஓட்டியாக பல தொழிலாளர்களின் வேடங்களில் நடித்த எம்.ஜி.ஆர். அந்தந்த தொழிலாளிகளின் உள்ளத்தில் இடம் பிடித்தார்.

சோம்பலும் தூக்கமும் முன்னேற்றத்துக்கு எதிரி

சிறுவருக்கு சோம்பேறித்தனம் கூடாது. அவர்கள் எப்போதும் சிறகடித்து பறக்கும் வண்டை போல ரீங்காரமிட்டுக் கொண்டு சுறுசுறுப்பாக இருக்க வேண்டும்.

சோம்பேறியாக இருந்துவிட்டாக்கா

சோறு கிடைக்காது தம்பி

சுறு சுறுப்பில்லாம தூங்கிக்கிட்டிருந்தா

துணியும் இருக்காது தம்பி

இதை அடுத்தவன் சொன்னாக சக்கும்

கொஞ்சம் அனுபவம் இருந்தா இனிக்கும்

எனப் பாடும் பாட்டு தம்பிக்கு சோம்பலை வெறுக்கவும் சுறு சுறுப்பை உண்டாக்கவும் பாடப்பட்ட பாட்டாகும்.

நாடோடி மன்னன் படத்தில் சோம்பேறிகளின் நிலையை எடுத்துரைக்கும் ஒரு சரணம் எல்லாக் காலத்துக்கும் பொருந்தக் கூடியது.

போர்ப்படைதனில் தூங்கியவன்

வெற்றி இழந்தான்

உயர் பள்ளியில் தூங்கியவன்

கல்வி இழந்தான்

கடைதனில் தூங்கியவன்

முதல் இழந்தான் – கொண்ட

கடமையில் தூங்கியவன்

தன்னை இழந்தான்–இன்னும்


பொறுப்புள்ள மனிதரின் தூக்கத்தினால் பல

பொன்னான வேலை எல்லாம் தூங்குதப்பா

என்ற பாடல் வரிகள் சோம்பேறித் தனத்தை விட்டு சுறுசுறுப்பாக தான் செய்யும் தொழிலில் ஈடுபட்டால் முன்னேற்றம் உறுதி என்பதை விளக்குகின்றன. ஏழைக்கும் பணக்காரனுக்கும் கடவுள் பொதுவா கஅளித்திருக்கும் இருபத்தி நான்கு மணி நேரத்தை முறையாகப் பயன்படுத்தினால் வாழ்வு சிறக்கும். இதில் பல மணி நேரங்களைத் தூங்கிக் கழித்தால் சோம்பலும், துக்கமும் தான் மிஞ்சும். உதயத்தை பார்க்காதவன் உயர்வை பார்க்க மாட்டான் அல்லவா?

சொந்த வாழ்வில் சுறுசுறுப்பு

எம்.ஜி.ஆர். தன் வாழ்வில் எப்போதும் சுறுசுறுப்பாக இருப்பார். மதியம் சாப்பிட்டவுடன் தூங்குவது, காலையில் ஏழு மணிவரை தூங்குவது போன்ற கெட்ட பழக்கங்கள் இல்லாதவர். அதிகாலை நாலரை மணிக்கு அவரோடு அவர் வீட்டில் வளரும் குழந்தைகளும் எழுந்து விட வேண்டும் .



அப்போதே உடற்பயிற்சி தொடங்கி விட வேண்டும் அவருக்கு தேநீர், காபி குடிக்கும் பழக்கம் கிடையாது. வீட்டில் பல பசுமாடுகள் இருந்தன காலையிலும் இரவிலும் நல்ல பசும்பாலை காய்ச்சி குடிக்கும் வழக்கம் இருந்தது. ஏழு மணிக்கு எம்ஜிஆர் தன்னைப் பார்க்க வந்திருக்கும் கட்சிக்காரர்கள் அரசியல்வாதிகள் நண்பர்கள் போன்றோரைச் சந்திக்க ஹாலுக்கு வந்து விடுவார். சுதா, ஜானு, கீதா எனப்பிள்ளைகளும் பள்ளிக்கூடம் கிளம்பிவிடுவர்.

மாடியில் இருக்கும் தன் அறைக்கு எம்ஜிஆர் படிக்கட்டுகளில் ஏறித்தான் செல்வது வழக்கம் அவர் அமெரிக்கா போய் சிகிச்சை பெற்று வந்த பிறகு தான் அவர் வீட்டில் லிப்ட் வைக்கப்பட்டது. ஆனால் விழாக்களில் படியேறி வந்து பீடத்தின் மீதுள்ள சிலைகளுக்கு மாலை போடும்போது எம்ஜிஆர் மடமட வென்று படிக்கட்டுகளில் ஏறுவார். அனாயசமாக பெரிய மாலைகளை தூக்கி அணிவிப்பார். சுறு சுறுப்பின் திலகமாக வாழ்ந்து மற்றவர்களுக்கும் வழி காட்டினார்.

முதல்வரான பின்பு தொழிலாளர் நலத் திட்டங்கள்

எம்.ஜி.ஆர். சினிமாவில் ஆடிப் பாடிச் சொன்ன கருத்துகள் யாவையும் அவர் முதல்வரான பிறகு நடைமுறைக்குக் கொண்டு வர முயன்றார். அவர் அதிகாரத்துக்கு உட்பட்ட அளவில் பல நல்ல திட்டங்களை நிறைவேற்றினார்.

பனை ஏறிகளுக்கும், நெசவாளிகளுக்கும், தீப்பெட்டி தொழிலாளர்களுக்கும், விபத்து நிவாரண திட்டம் கொண்டு வந்தார். அவர்கள் திடீரென தொழில்கூடத்தில் விபத்தில் சிக்கினால் அவர் குடும்பத்துக்கு நிவாரணம் கிடைக்க வழி செய்தார்.

படகோட்டிகளை குடிசை வீட்டை மாற்றி அடுக்குமாடி வீடுகளில் குடியிருக்கச் செய்தார். அவர்களுக்கு என சிறப்பு வீட்டு வசதித் திட்டம் அவர் ஆட்சியில் நடைமுறைக்கு வந்தது.

வீட்டுக்கு ஒரு இலவச மின் ஒளிவிளக்கு வசதி அளித்தார். இதனால் கிராமங்கள் ஒளி பெற்றன. தலித் குழந்தைகள் தங்கள் வீட்டில் இருந்தபடியே படிக்கும் வசதி பெற்றனர். விவசாய நிலங்களில் மூன்று இலட்சம் மின் பம்பு செட்களுக்கு இலவச மின்சாரம் வழங்கினார். சுமார் மூன்றரை கோடிக்கான விவசாயக் கடனைத் தள்ளுபடி செய்தார்.

நிறைவு

உழைப்பாளிகளுக்கு உயர்வளிக்க விரும்பிய எம்.ஜி.ஆர். அதனைப் பாட்டாகவும் காட்சியாகவும் தன் படங்களில் சிறுவர்களுக்கு எடுத்துரைத்து அவர்கள் மனதில் பசுமரத்தாணி போலப் பதியச் செய்தார். பின்பு முதல்வரானதும் உழைப்பாளிகளுக்குப் பல நலத் திட்டங்களைத் தீட்டி அவர்கள் வாழ்வில் ஒளி விளக்கு ஏற்றினார்.



11. எம்.ஜி.ஆர். – தாயும் சேயும்



எம்.ஜி.ஆர் படங்களில் தெய்வத்தாய், கன்னித்தாய், தாய்க்குப் பின் தாரம், தாயைக் காத்த தனயன், தாய் சொல்லை தட்டாதே, தாயின் மடியில் என்ற பெயர்களை கொண்ட படப்பெயர்கள் அவர் ஒரு மகனாகத் தாய்க்குத் தரும் முக்கியத்துவத்தை உணர்த்துகின்றன. தாய்க்குலம் என்று பெண்களை அவர் அழைத்ததும் பொதுக்கூட்டங்களில் என்னை வாழவைக்கும் தெய்வங்களாகிய தாய்மார்களே என

விளித்ததும் அவர் ஒரு மகனாகத் தன் கடமையைச் செவ்வனே தமிழக மக்களுக்கு ஆற்றியதையும் தாய்மாரை மதித்ததையும் தெளிவாக உணர்த்துகின்றன.

நிஜ வாழ்வில் எம்.ஜி.ஆர். தன் தாயைத் தெய்வமாகக் கருதினார். சத்யபாமா என்ற இயற்பெயருடைய அந்த சத்தியத் தாய்க்கு தனது வீட்டில் ஒரு கோயில் கட்டி இருந்தார். வீட்டை விட்டுக் கிளம்பும் போது தன் அன்னையார் கோயில் முன் சற்று நேரம் கார் நிற்கும். அங்கு இருந்த படியே தன் தாயை வணங்கிவிட்டுச் செல்வார். வாழ்வில் ஒவ்வொரு முடிவையும் தன் தாயை வணங்கியபின் எடுத்தார். எதற்கெடுத்தாலும் தாயை வணங்கும் பழக்கத்தை இவர் கொண்டிருந்தார். இதற்கு இரண்டு எடுத்துக்காட்டுகளைக் கூறலாம்.

இந்தியா வெற்றி பெற அம்மாவைக் கும்பிட்ட எம்.ஜி.ஆர்.

ஒருமுறை இந்தியா ஆஸ்திரேலியாவுக்கு இடையே கிரிக்கெட் போட்டி நடந்து கொண்டிருந்தது. சத்யா படப்பிடிப்பு நிலையத்தில் நடித்துக்கொண்டிருந்த எம்ஜிஆர் அவ்வப்போது வந்து ஸ்கோர் கேட்டபடி இருந்தார். இயக்குனரும், லதாவும் செட்டில் இருந்தனர். அப்போது ஆஸ்திரேலியா வெற்றி பெறும் சூழ்நிலையில் இருந்தது. அனைவரும் இந்தியா தோற்றுவிடும் என்றும் இந்திய வீரர்கள் சரியாக விளையாடவில்லை என்றும் கேலி பேசிக் கொண்டிருந்தனர். எம்.ஜி.ஆர். அவர்களைப் பார்த்து இல்லையில்லை இந்தியாதான் ஜெயிக்கும் நம் வீரர்கள் நன்றாக விளையாடுகின்றனர் என்று எதிர்

வாதம் செய்தார். அவருக்கு இந்தியா தோற்கும் என்று மற்றவர்கள் கூறியது கோபத்தை வரவழைத்தது.

ஆஸ்திரேலியா தான் ஜெயிக்கும் என்று மற்றவர்கள் ஆயிரம் ரூபாய் பந்தயம் கட்டினர். எம்.ஜி.ஆர் இந்தியா ஜெயிக்கும் என்று ஆயிரம் ரூபாய் பந்தயம் கட்டினார். திரும்பவும் நடிக்க செட்டுக்கு போய்விட்டார். வந்து பார்த்தால் இந்தியாவின் நிலைமை முன்பைவிட மோசமாக இருந்தது. ஆஸ்திரேலியாவுக்காக பந்தயம் கட்டியவர்கள் எம்.ஜி.ஆர். தோற்று விடக்கூடாது என்பதற்காக பந்தயத்தை விட்டுவிடலாம் என்றனர். ஆனால் அவர் விடவில்லை. 'இந்தியா தான் ஜெயிக்கும் பாருங்கள்' என்று சொல்லிவிட்டு தனது தனி அறைக்குள் போய்விட்டார்.

சிறிது நேரத்தில் இந்தியா ஜெயித்துவிட்டது என்ற மகிழ்ச்சியான செய்தியை எம்.ஜி.ஆரிடம் தெரிவித்தனர். அவருக்கு ஒரே மகிழ்ச்சி. உடனே அவர் சொன்ன ஒரு தகவல் சிறப்பானது. "**இந்தியா ஜெயிக்கனும்னு நான் உள்ளே போய் எங்கம்மாகிட்ட வேண்டிக்கிட்டேன்**" என்றார். எல்லோரும் அசந்து போய் விட்டார்கள். இந்தியா தோற்று விடுமோ என்ற அச்சம் வந்ததும் அவர் தன் அம்மாவின் படத்தின் முன் போய் வேண்டிக் கொண்டார். சத்தியாம்மா தன் மகன் கேட்டதைத் தந்துவிட்டார். இது அவரிடம் உள்ள ஒரு நல்ல பழக்க.ம் அவருக்கு அவர் தாய் தான் கடவுள். சிறு பிள்ளை தன் அம்மாவிடம் கேட்பது போல நல்லதோ கேட்டதோ எதுவாக இருந்தாலும் அவர் தன் அம்மாவிடம் வேண்டிக்கேட்பார்.

கட்சி இணைப்பு பற்றி அம்மாவிடம் வேண்டிக்கொண்ட எம்.ஜி.ஆர்.

சிறு வயதில் தாயைப்பிரிந்து வந்தாலும் எம்.ஜி.ஆருக்கு அவர் அம்மாவே அனைத்து முடிவுகளும் எடுக்க அவருக்கு உதவியாக இருந்தார். திமுக மற்றும் அதிமுக கட்சிகளை இணைக்க ஒரிசா முதல்வர் பிஜு பட்நாயக் சென்னை வந்து கலைஞரை சந்தித்துப் பேசினார். கலைஞர் 'கட்சித் தலைவராகவும் எம்.ஜி.ஆர். முதல்வராகவும் இருக்கலாம்' என்றார். மேலும் கொடி கட்சி பெயர் குறித்து தன் முடிவுகளைச் சொல்லி இணைப்புக்கு இணங்கி வந்துவிட்டார். எம்.ஜி.ஆர். சார்பாக அவர்களுடன் சிலர் பேசினர். எம்.ஜி.ஆர். இரு கட்சிகளின் இணைப்பு குறித்து டி.ஜி.பி.மோகன்தாசிடம் தன் காரில் அவர் கருத்தை கேட்டபடி சென்றார். அவரும் இணைவது சரிதான் என்றார். எம்ஜிஆரும் அதை ஆமோதித்தார். மாம்பலம் ஆபிசுக்குள் எம்ஜிஆர் கார் சென்றதும் மோகன்தாஸ் விடைபெற்றுக் கொண்டார்.

அன்று மாலை பத்திரிகையாளர் சந்திப்பில் தன் அம்மா கட்சிகள் இணைய வேண்டாம் என்று தன்னிடம் சொன்னதாக எம்ஜிஆர் தெரிவித்தார்,. அண்ணா திமுக தனித்து இயங்கும் என்று சொல்லி விட்டார். பிஜு பட்நாயக்கின் முயற்சி தோல்வியில் முடிந்தது. கலைஞரும் ஒரு கனத்த வார்த்தையை சொல்லி விட்டுச் சென்றார். இதுபோன்ற முக்கிய முடிவுகள் எடுக்கும் போதும் எம்.ஜி.ஆர். தன் தாயை வணங்குவதும் வாக்கு பெறுவதும் அவருக்குப் பழக்கமாக இருந்தது. அன்றைக்குத் தாய் சொல்லை தட்டாத தனயனான எம்.ஜி.ஆர். எடுத்த முடிவு

திராவிட இயக்க வளர்ச்சிக்கு எருவாக அமைந்தது. இன்றைக்கு இரண்டு இயக்கங்கள் வலுவாக இருப்பதால் வலது சாரிகள் அச்சம் கொள்கின்றனர். ஒன்றரைக் கோடி உறுப்பினர்களுடன் அண்ணா திமுகவை ஜெயலலிதா இந்தியாவிலேயே வலுவான மாநிலக்கட்சியாக வளர்த்துவிட்டார். தமிழகத்தில் இக்கட்சி 25–32% வாக்கு வங்கியுடன் இருக்கிறது. தோற்கும் காலத்தில் கூட இதன் வாக்கு வங்கி 25% ஆக இருந்துள்ளது. மேலும் திமுகவில் இருந்து பிரிந்தவைகோ தலைமையிலான மறுமலர்ச்சி திமுகவும் உலகத் தமிழர்களுக்காக குரல் கொடுத்து வருகிறது. மற்ற சில கட்சிகள் திமுக மற்றும் அண்ணாதிமுகவில் இருந்து தோன்றி பின்னர் உதிர்ந்து விட்டன. வலிமையான இந்த இரு கட்சிகளும் தேசியக் கட்சிகள் தமிழகத்தில் எந்த வகையிலும் வேரூன்ற முடியாமல் தடுத்துவிட்டன.

இன்றைக்குத் தமிழ் நாட்டில் தெய்வ நம்பிக்கை வளர்ந்தாலும் திராவிட இயக்க கருத்துக்கள் மூடநம்பிக்கைகளுக்கு இடம் தராமல் இவ்விரு கட்சிகளும் சமூக நீதியைக் காத்து நிற்கின்றன. இந்த வகையில் எம்.ஜி.ஆரின் தாயார் அன்றைக்கு அண்ணா திமுக தனித்து வளரட்டும் என்று தன் மகனுக்கு இட்ட அன்பு கட்டளை தமிழகத்துக்கும் உலகத்தமிழர்களுக்கும் நன்மை அளித்துள்ளது.

பாட்டும், பொருளும்

திரையுலகிலும் அரசியலிலும் எம்.ஜி.ஆர். கண்ட மாபெரும் வெற்றிக்கு காரணமாக இருந்தது அவரது தாயின் அன்பும் ஆசியும் என்பதை மறுக்க

இயலாது. அது போல தமிழகத்து தாய்மார்களும் அவரை தனது தலைமகனாக மதித்துப் போற்றி வாழ்த்தி தமது ஆசிகளை வழங்கினர்.

வெற்றி மீது வெற்றி வந்து என்னை சேரும் அதை

வாங்கித் தந்த பெருமை எல்லாம் உன்னை சேரும்

என்று எம்.ஜி.ஆர். தன் தாயைப் பார்த்துப் பாடுவது கற்பனை அல்ல; நிஜம். எம்.ஜி.ஆர். திரைப்படங்களில் தாயை நேசிப்பதும் மதிப்பதும் படத்துக்காகவோ கதைக்காகவோ மட்டும் அல்ல. உண்மையில் அவர் தன் தாயை அதிகமாக நேசித்தார். அதைப் படத்திலும் பாட்டிலும் காட்டினார்.

தாயில்லாமல் நான் இல்லை

தானே எவரும் பிறந்ததில்லை

எனக்கொரு தாய் இருக்கின்றாள்

என்றும் என்னைக் காக்கின்றாள்

என்று அவர் பாடிய பாடல் வெறும் சொற்கோர்வை அல்ல அது அவர் வாழ்வின் நிதர்சனம். இந்தப் பாட்டை எழுதி வாங்கி இசை அமைப்பதற்குள் எம்.எஸ்.விஸ்வநாதனுக்கு போதும் போதும் என்றாகிவிட்டது. ஆனால் இன்று வரை அந்த பாட்டு காவியமாக நிலைத்து நிற்கிறது.

தாய்ப்பாசமும் மகனின் கடமையும்

எம்.ஜி.ஆரை மகனாகக் கருதிய தாய்மார் அவர் சிறிய அளவில் கூட சிரமப்படக் கூடாது என்பதில் கவனமாக இருந்தனர். ஒருமுறை வெள்ளம் வந்து தாழ்வான பகுதிகளுக்குள் தண்ணீர் போய்விட்டது.

எம்ஜிஆர் உடனே பாதிக்கப்பட்ட பகுதிகளைப் பார்க்கவும் நிவாரண உதவிகளை அளிக்கவும் கிளம்பி விட்டார். நடிகராக இருக்கும்போதே எம்.ஜி.ஆர். இந்தப் பணிகள் செய்வதை தன் கடமையாகக் கொண்டிருந்தார். அவ்வாறு தண்ணீரில் இறங்கி வந்த எம்.ஜி.ஆரை பார்த்த பெண்கள் **“ஐயையோ சாமி நீ தண்ணிக்குள்ள வராதையா ஒரே சேறும் சகதியுமாக இருக்கு”** என்று தடுத்தனர். தன் பிள்ளை போன்ற எம்.ஜி.ஆர். சேற்றில் கால் வைப்பதை அந்த அன்புத் தாய்மார் விரும்பவில்லை. உடனே அவரிடம் ‘‘நாங்க நல்லா இருக்கோம்யா. எங்களுக்கு எந்த குறையும் இல்ல. நீ இருக்கும் போது எங்களுக்கு என்னய்யா குறை. அதிகாரிகள் வந்துட்டாங்க. எங்களை கவனிச்சுக்கிட்டாங்க. **நீ தண்ணியில வர வேணாம் ஐயா.. நீ நல்லா இருந்தால் எங்களுக்கு அதுவே போதும்யா’’** என்று சொல்லி அவரைத் திருப்பி அனுப்பி வைத்தனர்.



எம்.ஜி.ஆர். நன்றாக ஆரோக்கியமாக இருக்க வேண்டும் என்று தமிழகத் தாய்மார் நினைத்தனர். அவர்கள் நன்றாக இருக்க வேண்டும் என்று அவர்களின் அன்பு மகன் எம்ஜிஆர் நினைத்தார். இந்த பரஸ்பர அன்பு இன்றும் அவருக்கு புகழ் மாலை சூட்டிக் கொண்டிருக்கிறது.

தாய்மாரின் கட்டளைக்கு அடிபணிந்து காருக்குள் வந்து உட்கார்ந்த எம்.ஜி.ஆர். கண்ணீர் வடித்தார். "**என் மீது இவ்வளவு அன்பு வைத்திருக்கும் இந்தத் தாய்மார்களுக்கு நான் என்ன செய்ய போகிறேன்"** என்று சொல்லி அழுதார். உடன் இருந்தவர்கள் வாயடைத்து போயினர். எம்.ஜி.ஆர். கண் கலங்குவது அவர்களுக்கு வியப்பாக இருந்தது வருத்தமாகவும் இருந்தது. மக்களுக்காக எம்.ஜி.ஆர். கண்ணீர் விட்ட நிகழ்ச்சியைப் பலர் பதிவு செய்துள்ளனர். அவற்றில் இது ஒரு சம்பவம் ஆகும். அதன் பின்பு அவர் முதியோர் பென்ஷன் திட்டத்தை அறிமுகம் செய்தார். அதைப் பாட்டிமார் எம்.ஜி.ஆர். காசு என்று தான் சொல்வார்கள். ஆயிரம் ரூபாய் மாமியார் கையில் இருந்தால் எந்த மருமகளும் மனம் கோணாமல் சாப்பாடு போடுவார் இல்லையா. மேலும் சத்துணவு திட்டத்திலும் அந்தந்த பகுதியில் இருக்கும் முதியவர்களுக்கு மதிய உணவு இலவசமாக அளிக்கவும் திட்டம் கொண்டு வந்தார்.

ஒரு மகனாகத் தனது கடமையைச் செய்த எம்.ஜி.ஆரை முதியவர்கள் தங்கள் மகனாகப் போற்றி மகிழ்ந்ததில் வியப்பேதும் இல்லை.

காலபட்ட இடமெல்லாம் மலராக

தாயன்பில் திளைத்த எம்ஜிஆருக்கு ஒரு ராசி உண்டு. அவர் எங்காவது பிரச்சாரத்துக்கு சென்றால் அந்த பகுதியில் மழை பெய்யும் என்றொரு நம்பிக்கை மக்கள் மனதில் இருந்தது. இது மதுரையில் பலமுறை நடந்தும் இருக்கிறது. ஒருமுறை எம்.ஜி.ஆர். பிரச்சாரத்துக்கு போய் வரும்போது ஒரு இடத்தில் கிராம மக்கள் வழிமறித்து நின்றனர். எம்.ஜி.ஆர். காரில் இருந்து இறங்கினார். அங்கிருந்தவர்கள் அவரிடம் ஒரு வேண்டுகோள் வைத்தனர். அந்த பகுதியில் மழையே இல்லை அதனால் விவசாயம் பொய்த்து விட்டது. அவர்கள் மிகவும் கஷ்டப்படுகின்றனர். எனவே, எம்ஜிஆர் கொஞ்ச தூரம் நடந்து வந்து அவரது திருப்பாதத்தை தங்கள் வயலில் வைக்க வேண்டும் என்றனர். எம்.ஜி.ஆருக்குச் சங்கடமாக இருந்தது. இந்த வேண்டுகோளை மறுக்க இயலுமா, எனவே சம்மதித்தார்.

நாடு செழிக்கணும்; நல்ல மழை பெய்யணும்

கிராமத்து மக்கள் எம்.ஜி.ஆரை. வலியுறுத்திக் கேட்கவும் எம்.ஜி.ஆர். சாலையில் இருந்து சற்று தொலைவில் உள்ள வயலுக்குள் நடந்துச் சென்றார். வயல் காய்ந்துபோய் கிடந்தது. சிறிது நேரம் அங்கு நின்று அவர்களுடன் பேசினார். அவர்களுக்கு ஆறுதல் சொன்னார். அண்ணா திமுக ஆட்சி மலர்ந்ததும் அவர்களின் துன்பமெல்லாம் தீரும் என்று ஆறுதல் அளித்து விட்டு வந்தார். அவர் அங்கிருந்து நகரவும் பலரும் அவர் நின்ற இடத்தின் காலடி மண்ணை எடுத்து, நடந்த காலடி தடத்தின்

மண்ணை எடுத்து தங்கள் சேலை முந்தானையின் ஓரத்தில் முடிந்து கொண்டனர்.

இதயவீணை, சிரித்து வாழ வேண்டும் பல்லாண்டு வாழ்க ஆகிய படங்களை தமது உதயம் ப்ரொடக்ஷன்ஸ் படநிறுவனம் மூலமாக எடுத்த மணியன் அந்த காரில் எம்ஜிஆர் கூட வந்தார். அவர் அந்த பெண்களை பார்த்து 'என்ன செய்கிறீர்கள்' எனக்கேட்டார். [காலடி மண்ணை எடுத்து அந்த நபருக்கு செய்வினை செய்து அந்த ஆளைக்கொன்று விடலாம் அல்லது கால் கையை முடக்கி விடலாம் என்பது ஒரு நம்பிக்கை]. அங்கிருந்த பாட்டிமார் 'எம்.ஜி.ஆர். காலடி மண்ணை கொண்டு போய் எங்கள் வயல்களில் போடுவோம் அப்புறம்பாருங்க அது நல்லாவிளையும் என்று மகிழ்ச்சியுடன் தெரிவித்தனர். மணியனுக்கு ஆச்சரியமாக இருந்தது. இப்படி ஒரு நம்பிக்கையா? என அவர் வியந்தார். பின்பு அவரும் காருக்கு போய்விட்டார். வண்டி கிளம்பி விட்டது. .

தாய் – மகனின் அன்பு மழை

எம்.ஜி.ஆர் திட்டமிட்டபடி அந்த மாவட்டத்தின் பல ஊர்களிலும் பிரச்சாரம் செய்துவிட்டு திரும்பி வரும் போது அந்த பகுதியில் நல்ல மழை பெய்திருந்தது. மக்களின் நம்பிக்கை பலித்தது. எம்.ஜி.ஆர். நிம்மதிப் பெருமூச்சு விட்டார்; அகம் மகிழ்ந்தார். நல்ல எண்ணங்களைப் பரிமாறி கொள்வதால் நல்ல விளைவுகள் ஏற்படும் என்பது உளவியலார் கருத்து. அதுபோல தமிழகத் தாய்மார்களும் எம்.ஜி.ஆரும் தங்களுக்குள் நல்ல

எண்ணங்களைப் பரிமாறிக் கொண்டனர். அது அவர்களுக்கு நல்ல விளைவுகளை ஏற்படுத்தியது.

எம்.ஜி.ஆர். ஒரு தாய்க்குரிய கடமை உணர்ச்சியோடும் பொறுப்புணர்ச்சியோடும் நடந்து கொண்டார் என கண்ணதாசன் பாராட்டுவதற்கு முக்கியக்காரணம் எம்.ஜி.ஆர். ஒரு நல்ல தாயிடம் வளர்ந்ததால் தான் என்று உறுதியாகக் கூறலாம்.

கவியரசு கண்ணதாசனின் புகழ்மாலை

எம்.ஜி.ஆர். கால்பட்டது செழிக்கும் என்பது வெறும் நம்பிக்கை மட்டுமல்ல. கவிஞனின் வாழ்த்தும் ஆகும் என்பதற்கு கண்ணதாசனின் புகழ்மாலையை எடுத்துகாட்டலாம்.

எம்.ஜி.ஆருக்கு பிறந்த நாள் வாழ்த்து பாமாலை பாடிய கவியரசு கண்ணதாசன்

நீ தொட்டது துலங்கும்;

நின் கை கொடுத்தது விளங்கும்'

நின் கண் பட்டது தழைக்கும்;

நின் கால் படிந்தது செழிக்கும்

நின் வாய் இட்டது சட்டம்

என்றார்.

எம்.ஜி.ஆர். தாய் – கவிஞர் கண்ணதாசன் சேய்

எம்.ஜி.ஆரை கவிஞர் கண்ணதாசன் அன்பாக சாமி என்று அழைப்பார் எம்.ஜி.ஆர். கண்ணதாசனை கவிஞர் என்று அழைப்பார். இருவருக்குள்ளும் அரசியல் கொள்கை வேறுபாடுகள் ஏற்பட்ட பிறகு எம்.ஜி.ஆர். அவரை நீக்கி விட்டு வாலியைத் தனது

படங்களுக்கு பாடலாசிரியராக நியமித்தார். ஆனாலும் இருவருக்குள்ளும் இருந்த அன்பும் மதிப்பும் குறையவே இல்லை. எம்.ஜி.ஆர். முதல்வரானதும் கண்னதாசன் அவர்களை அழைத்து அரசவைக் கவிஞர் ஆக்கினார். அப்போது கண்ணதாசன் எவ்வளவு நாள் எனக்கேட்டார். எம்.ஜி.ஆர். ஆயுள் உள்ளவரை என்றார். அவர் சொல் பலித்தது. அமைச்சருக்குரிய அந்தஸ்துள்ள பதவி அது. கண்ணதாசனும் ‘‘இனி நான் சாகும் போது அரசு மரியாதையுடன் என் உடல் அடக்கம் செய்யப்படும் அதற்கு மகிழ்கிறேன்’’ என்றார். அவரது சொல்லும் பலித்தது.

அரசவைக் கவிஞரானதும் ஒரு கூட்டத்தில் கண்ணதாசன் ‘‘எம்.ஜி.ஆர். என்ற தாய்க்கு கவிஞர்களாக பல மகன்கள் உண்டு. அவர்களில் நான் அடங்காத மகன்; தாய் தன் மகன் திருந்தும் வரை அவனது தேவைகளை நிறைவேற்றி திருந்தியதும் அவனுக்கென பொறுப்பை அளிப்பாள். அதுபோல எம்.ஜி.ஆர். அவர்களைக் கடுமையாக விமர்சித்த நான் இப்போது பக்குவப்பட்டிருக்கிறேன். என்னை அவர் அரசவை கவிஞர் ஆக்கியிருக்கிறார்’’ என்றார்.

எம்.ஜி.ஆர். நல்லவர்களைத் தன் அருகில் வைத்திருந்தார். தீய சக்திகளைத்தான் கிட்ட வரவிடாமல் துரத்தி அடித்தார். அதனால் அவரைச் சுற்றி நல்ல ஆக்கப் பூர்வமான சக்தி [பாசிட்டிவ் எனெர்ஜி] விளங்கியது. அவரைக் கண்டு மீண்டவர் எல்லோரும் மகிழ்ச்சியாக வந்தனர். அவர் தாயாரின் ஆசியும் தமிழகத்துத் தாய்மாரின் ஆசியும் அவரை இன்னல்களில் இருந்து காத்தது.

ஆபத்தில் உதவிய லீலாவதியின் ஆரோக்கியம்

தாயைத் தெய்வமாக போற்றி வாழ்ந்த எம்.ஜி.ஆர் தன் வாழ்வின் அனைத்து நிலைகளிலும் தாயை வணங்கி வந்தார். தமிழகத்தின் தாய்மார் எல்லோரும் அவருக்காகக் கடவுளை வணங்கி வந்தனர். அந்த வேண்டுதல் பலித்ததை அவர் அமெரிக்காவில் இருந்து சிகிச்சை பெற்று வந்ததில் இருந்து அறிவோம். அவருக்கு சிறுநீரகம் தானம் அளித்த அவரது அண்ணன் மகள் லீலாவதி அம்மையார் ஒரேஒரு சிறு நீரகத்துடன் இன்றும் ஆரோக்கியமாக வாழ்ந்து வருகிறார். ஜுலை பதினைந்தாம் நாள் வேல்ஸ் அகாடமியில் சைதை துரைசாமி அவர்கள் நடத்திய எம்.ஜி.ஆர். உலக பேரவை பிரதிநிதிகள் மாநாட்டில் லீலாவதி அம்மையாரை அழைத்து வந்து சிறப்புச் செய்தனர். அவர் அழகாகவும் ஆரோக்கியமாகவும் இருந்தார். சிறுநீரகம் தானம் அளித்து முப்பத்திரண்டு ஆண்டுகள் ஆன பின்பும் அவர் நல்ல உடல் நலத்துடன் வாழ்ந்து வருகிறார். இதுவும் தமிழக மக்களின் வேண்டுதலுக்குக் கிடைத்த பலன்தான். அவருக்கு ஏதாவது ஆபத்து ஏற்பட்டிருந்தால் எம்.ஜி.ஆரால் ஏற்பட்டது என்றுதானே குற்றம் சுமத்துவர். அந்த வசைச்சொல் எம்.ஜி.ஆருக்கு வராதபடி கடவுள் லீலாவதியைக் காப்பாற்றி வருவது எம்.ஜி.ஆருக்காக மக்கள் நடத்திய பிரார்த்தனையின் பலன்களில் ஒன்றாகும்.

தாயின் ஆசியும் தக்க சமயத்தில் உயிர் காக்கும்

ஒருமுறை எம்.ஜி.ஆர் சென்ற கார் விபத்துக்குள்ளாக இருந்து கண நேரத்தில் தப்பியது.

உடனே வண்டியை ஒரு ஓரமாக நிறுத்தி விட்டு வண்டி ஓட்டி வந்த திருப்பதிசாமி அமைதியாக அமர்ந்து விட்டார். "நல்லவேளை தப்பித்து விட்டோம் என்றார். அதற்கு எம்.ஜி.ஆர். "நாம் எப்படி தப்பித்தோம் தெரியுமா?" என்றார். அவர் என்ன சொல்லப் போகின்றார் என்று திருப்பதிசாமி அவர் முகத்தையே பார்த்தார். "நம் இருவரின் தாயின் ஆசி நம்மோடு இருந்ததால் தப்பித்தோம்" என்றார். எம்.ஜி.ஆருக்கு எப்போதும் அவர் அம்மா அவர் கூடவே இருக்கிறார்.

ஜீவ நதியாய் வருவாள் என் தாகம் தீர்த்து மகிழ்வாள்

என்றும்

ஆதி அந்தமும் அவள்தான் எனை

ஆளும் நீதியும் அவள்தான்

என்றெல்லாம் எம்.ஜி.ஆர். பாடியது அவர் ஒரு நல்ல மகனாக இருந்ததையும் அவரது தாய் அவருக்கு ஒரு வழி காட்டும் ஆன்மாவாக [guardian spirit] இருந்ததையும் உணர்த்துகிறது.

நிறைவு

எம்.ஜி.ஆர். தன் தாயாரை தமிழகத்தின் அனைத்து தாய்மார்களிலும் கண்டார். அவர்களும் தாய்க்குத் தலைமகனாகக் கருதி இவரிடம் அன்புசெலுத்தினர். நல்ல மகனுக்கு இவர் ஒரு முன் மாதிரியாக [ரோல்மாடல்] விளங்கினார். பெண்களைத் தாயாக மதித்தவரும் பெற்ற தாய்க்குக் கோயில் கட்டி வழி பட்டவருமான எம்.ஜி.ஆருக்கு மக்கள் இன்று கோயில் கட்டி வழிபடுகின்றனர்.

12. எம்.ஜி.ஆர். வளர்த்த அன்புக் குழந்தைகள்



எம்.*ஜி.ஆர் வாழ்வில் அவர் வளர்த்த சிறுவர் சிறுமிகளை இங்கு நினைவு கூர்வது இன்றியமையாததாகவும் சுவையானதாகவும் இருக்கும் எம்.ஜி.ஆரும் அவர் அண்ணன் சக்கரபாணியும் கூட்டுக் குடும்பமாக வாழ்ந்தபோது எம்.ஜி.ஆரின் மனைவி சதானந்தவதி ஜானகி அம்மையார் அங்கு வந்து அவரோடு சேர்ந்து வாழ சம்மதித்திருந்தார். அப்போது ஜானகி அம்மையார் அவருடைய சின்ன பாட்டியின் பேரக்குழந்தைகள்*

இருவரை, பெற்றோரை இழந்த ஒரு சிறுவனையும் சிறுமியையும் தன்னுடைய வளர்ப்புக் குழந்தைகளாக வளர்த்து வந்தார். அவருடைய மகன் சுரேந்திரனோடு அப்பு, ராதா என்ற இந்த இரு குழந்தைகளும் அந்த வீட்டில் வளர்ந்து வந்தனர். சக்கரபாணியின் பிள்ளைகள் 9 பேருடன் இவர்களும் சேர்ந்து எம்.ஜி.ஆரை சித்தப்பா என்று அழைத்தனர்.

அப்பு ஜானகி அம்மையாரின் வளர்ப்பு குழந்தை என்றாலும் எல்லோருடனும் அன்பாக மரியாதையாக பழகுவான். சதானந்தவதி அம்மையாருக்கு குழாய் மூலமாக ஆக்சிஜன் கொடுக்கப்பட்டு அவர் மூச்சுத்திணறலோடு சிரமப்பட்டுக் கொண்டிருந்த காலம் அது. 1962 இல் எம்.ஜி.ஆர். தீவிரமாக அரசியல் பணிகளிலும் படப்பிடிப்புகளிலும் ஈடுபட்டிருந்த காலங்களில் வீட்டில் மனைவியின் சுகவீனம் அவருக்கு நிம்மதி இல்லாத ஒரு சூழ்நிலையை ஏற்படுத்தியது. அப்போது சதானந்தவதிக்கு மூச்சுக்குழலை ஆக்சிஜன் அளவை சரி செய்வதில் ஜானகி அம்மையாரின் வளர்ப்பு மகன் அப்பு கெட்டிக்காரன். அப்பு சற்று திக்கி பேசுவான் அவ்வாறு அவன் பேசும்போது சதானந்தவதி மிகவும் ரசித்து சிரிப்பார். அவர் சிரிக்கிறார் என்பதற்காகவே அவர் சிரிக்கும் படியாக அவன் இன்னும் சற்று திக்கித்திக்கி பேசுவது உண்டு.

சதானந்தவதியும் அப்புவும் தாயும் மகனுமாக ஒருவர் மீது ஒருவர் பற்றும் பாசமும் அன்பும் நேசமும் வைத்திருந்த வேளையில் ஒருநாள் சதானந்தவதிக்குக் கடுமையான மூச்சுத்திணறல் ஏற்பட்டது. அருகில் இருந்த எம்.ஜி.ஆர். ஆக்சிஜன்

குழாய் சரியாக பொருத்தி அதனுடைய அளவை சரி செய்யத் தெரியாமல் திணறினார். நர்சும் அந்நேரம் அங்கு இல்லை. சதானந்தவதி 'அப்பு எங்கே அப்பு அப்பு அவனை கூப்பிடுங்கள் என்றார். 'உடனே அப்புவை கூப்பிட்டு அவன் வந்து அந்தக் குழாயை சரியாக பொருத்தி அவருக்குரிய அளவு ஆக்சிஜன் செல்லும்படி வைத்தான். இவர்கள் இருவரும் தாயும் பிள்ளையும் இறைவனால் படைக்கப்படவில்லை என்றாலும் பாசத்தோடு பழகி வந்தது எம்.ஜி.ஆருக்கு மிகுந்த மனநிறைவை கொடுத்தது. அதற்கான சூழ்நிலையும் அவரது வீட்டில் இருந்தது.

சதானந்தவதி அம்மையாரிடம் அப்பு அன்பாகப் பழகியது போல அவரது சகோதரி ராதா எம்.ஜி.ஆர். மீது வெறித்தனமான அன்பு வைத்திருந்தார். தந்தை மீது பெண் பிள்ளைகள் தன் தாய்க்கு போட்டியாக வெறித்தனமாக காட்டும் அன்பை உளவியல் சிக்கல் என்று விவரிக்கும் சிஜேயுங் என்ற உளவியலார் இதனை எலெக்ட்ரா காம்ப்ளேக்ஸ் என்று அழைப்பார். இந்த பிள்ளைகள் தனது தந்தையின் அருகில் தாயார் வந்தால் கூட கோபபப்டுவார்கள். அப்படி ஒரு வெறித்தனமான அன்பு (போசெசிவ்னேஸ்) வைத்திருப்பார்கள். திருமணமானதும் தன் கணவர் தனது தந்தையைப் போல இருக்க வேண்டும் என்று எதற்கெடுத்தாலும் இருவரையும் ஒப்பிட்டு பேசுவர். அன்புள்ள அப்பா படத்தில் நதியா நடித்த கதாப்பாத்திரம் ஏறக்குறைய இது போன்றது தான். இந்த உளவியல் சிக்கல் தீவிரமடையும் போது இவர்கள் கணவனை விட்டுப் பிரிந்து விடுவார்கள்.




எம்.ஜி.ஆரை அவருடைய வளர்ப்பு மகள் ராதா தன் அன்புச் சிறைக்குள் கட்டிப் போட்டிருந்தார் என்றே சொல்லலாம். எம்.ஜி.ஆருக்கு பெண்கள் அனுப்பிய பொங்கல் வாழ்த்துக்கள் எல்லாம் இந்த சிறு பெண் கிழித்துப்போட்டு விடுவார். தன்னைத் தவிர வேறு எந்த பெண்ணும் எம்.ஜி.ஆரைச் சொந்தம் கொண்டாடக் கூடாது என்பதில் அவர்

உறுதியாக இருந்தார். சிறு பெண் என்றாலும் தன் தந்தையிடம் அவளுக்குப் பிரியம் அதிகம். இவருக்கு முணுக்முணுக் என்று கோபம் வரும். அப்போது எம்ஜிஆர் இந்த சிறு குழந்தையிடம் பிரியமாக வந்து "ராதே உனக்கு கோபம் ஆகாதடி" என்ற பாடலைப்பாடி அவரைச் சிரிக்க வைப்பார்.

*மைசூரில் **தாலி பாக்கியம்** படத்துக்கு படப்பிடிப்பு நடந்தது. எட்டாம் வகுப்பு படித்துக் கொண்டிருந்த இப்பெண் எம்.ஜி.ஆர். ஜானகி அம்மா ஆகியோருடன் படப்பிடிப்பு பார்க்க மைசூருக்குச் சென்றார். அப்போது ஒருநாளில் இச்சிறுமி படப்பிடிப்பை பார்க்க வந்தவர் முழுவதும் பார்க்காமல் வேகமாக தன் அறைக்கு திரும்பி விட்டார். படப்பிடிப்பு முடிந்து மாலையில் ஹோட்டல் அறைக்கு வந்த எம்.ஜி.ஆர். "எங்கே அவள் திடீரென்று ஆளைக் காணோமே; என்ன ஆயிற்று" என்று கேட்டார். ஜானகி அம்மா அதற்கு சிரித்தபடியே "அவளிடமே கேளுங்கள்" என்று சொல்லி விட்டார். என்னவென்று எம்.ஜி.ஆர். காரணம் கேட்டால் "நீங்க சரோஜாதேவியை கட்டிப்பிடித்தது எனக்கு பிடிக்கலை" என்று காட்டமாக பதில் உரைத்தார் . எம்.ஜி.ஆர். சிரித்து விட்டார் அவர் இந்த பதிலை எதிர்பார்த்திருக்கவில்லை. அவர் சிரித்த படியே "உங்க அம்மாவை கட்டிப்பிடித்தால் எனக்கு யார் பணம் கொடுப்பார்? கதாநாயகியைக் கட்டிப்பிடித்தால் தானே பணம் கிடைக்கும்" என்று சொல்லி விட்டு போய் விட்டார். அவளுடைய கோபம் அவருக்கு விநோதமாக இருந்தது. அவளது கோபத்தை ஜானகி மிகவும் ரசித்தார். எம்.ஜி.ஆர். மீது அந்த சிறுமிக்கு அப்படி ஒரு வெறித்தனமான அன்பு*

இருந்தது. இன்று பேரன் பேத்தி எடுத்து விட்ட சூழ்நிலையிலும் அவர் எம்.ஜி.ஆரின் வளர்ப்புப் பிள்ளைகளில் மிகவும் முக்கியமானவராகவும் சட்ட உரிமை கொண்டவராகவும் திகழ்கிறார்.



மலையாளக் குடும்பங்களில் சில சடங்கு சம்பிரதாயங்களை வாரிசு முறைப்படி செய்வதற்கு பெண்களுக்கு மட்டுமே உரிமை உண்டு. அந்த உரிமைக்கு உரியவர் ராதா தான். மலையாளிகள் சமுதாயம் பாரம்பரியப்படி பெண்ணுரிமைச் சமுதாயமாகும். தமிழ்நாட்டில் ஆண்வாரிசுக்கு இருக்கும் உரிமை கேரள நாட்டில் பெண் வாரிசுக்கு தான் இருக்கிறது. இதனால் ஜானகியம்மா தன்னுடைய குடும்ப வாரிசாக இந்தப் பெண்ணைச் சட்டப்படி சுவீகாரம் செய்திருந்தார். இவரே குடும்பச் சடங்குகளில் ஜானகி அம்மாவுக்கு சாங்கியங்களைச் செய்யும் உரிமை பெற்றவர் ஆவார்.

எம்.ஜி.ஆர். வீட்டில் பெண்களுக்குத் துணிமணிகள் வாங்குவதாக இருந்தால் வீட்டுக்கே ஜவுளி கடைக்காரர்கள் சேலைகளைக் கொண்டு வந்து விடுவார். அப்போது ஜானகி அம்மா ராதாவை அழைத்து முதலில் தேர்ந்தெடுக்கச் சொல்வார். இவர் முதன் முதலில் தேர்ந்தெடுத்தது போக எஞ்சியவற்றை தான் ஜானகி அம்மா தன் அண்ணன் பிள்ளைகளுக்குத் தெரிவு செய்வார். இவருக்கு முன்னுரிமையும் முதல் பங்கும் தலைப்பேறு உரிமையும் அந்தக் குடும்பத்தில் அளிக்கப்பட்டு வந்தது.

ஒருநாள் எம்.ஜி.ஆருடன் ராதாவும் சாப்பாட்டு அறையில் சாப்பாட்டு மேசையில் உட்கார்ந்து சாப்பிட்டுக் கொண்டிருந்தனர். பொதுவாக எம்.ஜி.ஆர். தனித்து சாப்பிடும் போது தரையில் அமர்ந்துதான் சாப்பிடுவார். ஆனால் அன்று சாப்பாட்டு மேஜையில் உட்கார்ந்து சாப்பிட்டுக் கொண்டிருந்தார். சிறுமிக்கு ஜானகி அம்மையார் தான் மூன்று வேளையும் சாப்பாடு ஊட்டி விடுவது வழக்கம். மதிய வேளையில் பள்ளிக்கூடத்துக்குக் கார் அனுப்பி வீட்டுக்கு வரவழைத்து சாப்பாடு ஊட்டி விட்டு பின்பு பள்ளிக்கூடத்திற்கு அனுப்பி வைப்பார். ராதாவுக்கு அசைவ உணவுகளில் விருப்பம் கிடையாது. குறிப்பாக கோழி இறைச்சி என்றால் அறவே பிடிக்காது. ஆனால் எம்டன் மகன் படத்தில் வந்தது போல அன்று எம்.ஜி.ஆர். கோழி இறைச்சியை எடுத்து வைத்து எலும்புகளை நீக்கி விட்டு இச்சிறுமிக்கு வாயில் ஊட்டி விட்டார் ‘உன் அம்மா ஊட்டினால் தான் சாப்பிடுவாய் நான் ஊட்டினால் சாப்பிடமாட்டாயா? என்று கேட்டபடி அவளது வாயில் ஊட்டி விட்டார். ஜானகி

அம்மையாரும் அவர் ஆசை மகளும் எம்.ஜி.ஆரிடம் வகையாகச் சிக்கிக்கொண்டார்கள் இவளுக்கு கோழி இறைச்சியை மென்று விழுங்க விருப்பமில்லை. வாயில் வைத்துக் கொண்டே இருக்கிறார். எம்.ஜி.ஆர். குனிந்து சாப்பிட்டுக் கொண்டிருக்கிறார். திடீரென்று தொலைபேசியின் அழைப்பு மணி ஒலித்தது எம்.ஜி.ஆர். எழுந்து சென்று விட்டார். ராதா அந்த இறைச்சியைத் துப்பிவிட்டார். ஜானகியம்மா அதைத் தூர எறிந்து விட்டார், எம்.ஜி.ஆர். திரும்பி வந்ததும் சாப்பிட்டாயா என்று கேட்டதற்கு நன்றாக சாப்பிட்டு முழுங்கிவிட்டேன் என்று சொல்லி விட்டார். இப்படியாக எம்.ஜி.ஆரும் ஜானகியம்மாவும் அந்தக் குழந்தையிடம் மிகவும் அன்பாக, பாசமாக, நேசமாக இருந்தனர்.

ஒருமுறை ஜானகி அம்மா அந்தக் குழந்தைக்கு அவளுடைய நீளமான முடியை கத்தரித்து விட்டு கிராப் வெட்டி விட்டார். இந்தச்சிறுமிக்கு ஒரே அழுகை. ஐயோ தன் நீளமான முடியைக் கத்தரித்து விட்டார்களே என்று அன்று முழுவதும் அழுது கொண்டிருந்தார். ஜானகி அம்மா எவ்வளவு சமாதானப்படுத்தியும் அவள் கேட்கவில்லை. இதுதான் உன் முகத்துக்கு நாகரீகமாக அழகாக இருக்கிறது என்று சொல்லிப் பார்த்தார். ஆனால் அச்சிறுமி தான் அதனை விரும்பவில்லை. தன் அப்பா வரவும் அம்மா இப்படி செய்துவிட்டார்கள் என் முடியை வெட்டி விட்டார்கள் என்று சத்தமாக அழுது விட்டாள். எம்.ஜி.ஆருக்கு மிகவும் வருத்தமாக போய்விட்டது. ஐயோ பெண் பிள்ளையின் முடியை ஏன் இப்படி வெட்டி விட்டாய் என்று ஜானகி அம்மையைரைக் கோபித்துக் கொண்டார். இந்த குழந்தையைப்

பிரியமானதைச் செய்ய விடக்கூடாதா? உனக்குப் பிரியமானதைச் செய்யவா அவள் இருக்கிறாள்? என்று ஜானகி அம்மாவிடம் சொல்லிவிட்டு இவளைப்பார்த்து ‘‘இனி உன் முடிமேல் கை வைத்தால் என்னிடம் சொல்லு. நான் அவளை என்ன செய்கிறேன் பார்" என்று சிறுமியையும் சமாதானப்படுத்தி இருவரையும் சேர்த்துப் பின்பு சிரிக்க வைத்தார்.

இவ்வாறு தாயும் தந்தையும் மகளுமாக இவர்கள் ஒருவர் மீது ஒருவர் பாசமாக இருந்து வந்தாலும் இச்சிறுமி தான் பள்ளிக்கூடம் போகும் போது மட்டும் தன் அப்பா கூட வருவதை விரும்ப மாட்டாள். அவர் "நான் படப்பிடிப்புக்கு கிளம்புகிறேன் நீயும் வா உன்னை பள்ளிக்கூடத்தில் விட்டு செல்கிறேன்’’ என்று சொன்னால், 'என்னைச் சற்று தூரத்திலேயே விட்டுவிட வேண்டும் என்று பள்ளிக்கூடத்திற்குள் நீங்கள் காரை கொண்டு வரக்கூடாது, பள்ளிக்கூட வாசலில் நிறுத்தி என்னை இறக்கி விடக்கூடாது' என்றெல்லாம் பல நிபந்தனைகளைச் சொல்வாராம். அதன்படி எம்ஜிஆரும் சரி என்று கேட்டுக்கொண்டு சற்று தொலைவில் அந்த குழந்தையை இறக்கிவிட்டு அது பள்ளிக்கூடத்துக்குள் வெகுதூரம் செல்லும் வரை காருக்குள்ளேயே இருந்து பார்த்து விட்டு பின்பு அந்த இடத்தைவிட்டு புறப்படுவார். இதற்கு என்ன காரணம் என்று கேட்டால் அந்தக் காலத்தில் சினிமாக்காரரர் என்றால் பள்ளிக் கூடத்தில் யாரும் மதிக்க மாட்டார்கள். எனவே 'நான் என்னை சினிமா குடும்பத்தைச் சேர்ந்தவள் என்று யாரிடமும் சொல்வதில்லை' என்று அச்சிறுமி கூறினார். செயின்ட்டொமினிக் பள்ளிக்கூடத்தில் படிக்கும்

போது நடந்த இந்த சம்பவத்தை அவர் எடுத்துக்கூறிய போது அந்தக் காலத்தில் சினிமாக்காரர்களின் குடும்பத்தார் அவர்களின் குழந்தைகளைப் படிக்க வைக்க பட்ட கஷ்டம் நம் மனக்கண்ணில் தோன்றுகிறது.


இவ்வேளையில் இன்னொரு சம்பவம் நினைவுக்கு வருகின்றது ஜெயலலிதா சிறுமியாக இருக்கும்போது விமானப்பணிப் பெண்ணாக இருந்த அவருடைய சித்தி இப்படித்தான் அவரது முடியை வெட்டிவிட்டு கிராப்பாக்கி விட்டார். நெற்றியில் மங்கி கிராப் வைத்தார். அப்போது ஜெயலலிதாவுக்கு ஒரே அழுகை 'என் நீளமான கூந்தலை வெட்டி விட்டார்கள்' என்று அழுகையோடு எடுக்கப்பட்ட புகைப்படம் தான் அவர் வீட்டில் முன் அறையில் இன்றும் இருக்கிறது. அந்தப் புகைப்படத்தில் அவருடைய முகம் சோகமாகவும் அவருடைய கண்கள் கண்ணீரை மறைத்த கண்களாகவும் தோன்றும். இந்த புகைப்படம் தன் வாழ்நாளில் மறக்க முடியாத ஒரு படம் என்று ஜெயலலிதா சொல்லி இருக்கிறார்.

பெரியவர்கள் தங்களுடைய ஆசாபாசங்களை பிள்ளைகளின் மீது திணிக்கிறார்கள் என்பதற்கு இந்த சிறுமிகளின் முடி வெட்டப்பட்டது ஒரு உதாரணமாகும். சாதாரண மக்கள் சினிமாக்காரர்களைப் பார்த்து தன் பிள்ளைகளுக்கு முடி வெட்டி விடுகிறார்கள் என்று நினைக்கிறோம். ஆனால் சினிமாக்காரர்களும் அதுபோலவே சினிமாவைப் பார்த்து தங்கள் பிள்ளைகளுக்கு முடியை வெட்டி விடுகிறார்கள். சாவித்திரி இவ்வாறு தனக்கு முடி வெட்டிவிட்டதாக கமலா செல்வராஜ்

சொல்லியிருக்கிறார். ஆக பெற்றோர் என்ற நிலை உண்டான பிறகு சினிமாக்காரரர்கள் ஆக இருந்தாலும் சாதாரண மக்களாக இருந்தாலும் எல்லோரும் பிள்ளைகளைப் பார்க்கும் பார்வையும் நடத்தும் விதமும் ஒன்று போலத்தான் இருக்கிறது.

எம்.ஜி.ஆர். அப்பு மற்றும் ராதா ஆகிய குழந்தைகள் மீது மிகுந்த அன்பு காட்டி அவர்களைப் பாசத்தோடு வளர்த்து வந்தார். ராதாவுக்கு திருமணமானதும் தான் ஜானகி அம்மையாரின் அண்ணன் பிள்ளைகள் மூவர் ராமாவரம் தோட்டத்துக்கு வந்து அவர்களுடன் இருந்தனர். பின்பு ராதாவும் அவர் கணவரும் இந்த மூன்று பெண்களையும் கோடை விடுமுறைக்கு வெளியூருக்குப் பாதுகாப்பாக அழைத்துச் செல்வார்கள். அவ்வாறு அவர்கள் மதுரை, மைசூர், பெங்களூர் என்று பல ஊர்களுக்கு இந்த மூன்று சிறுமிகளை அழைத்துக் கொண்டு சென்று இருக்கின்றனர். ஒரு மூத்த சகோதரியாக இருந்து ராதா மற்ற மூன்று சகோதரிகளுக்கும் உறுதுணையாக இருந்து வருகிறார் இப்போதும் இவர் ராமாவரம் தோட்டத்தில் கீழ்தளத்தில் ஒருபகுதியில் வசித்து வருகிறார்.

13. குழந்தைகளிடம் எம்.ஜி.ஆர். காட்டிய அன்பு



எம்ஜிஆர் தன் வீட்டில் பிள்ளைகளைப் பாசமாக வளர்த்தது போலவே வெளியிலும் வெளியே வரும் போதும் அங்கு காணும் சிறுவர் சிறுமியரிடம் பாசத்தோடும் கண்டிப்போடும் இருப்பது வழக்கம்.

ஓடி வந்த சிறுவர்கள்

ஒருமுறை அவர் ஒரு பொதுக்கூட்டத்திற்கு வந்தபோது இரண்டு சிறுவர்கள் அவர் காரைப்பிடித்துக் கொண்டு காருக்குப் பின்னால் ஓடி வந்தனர். அவர்கள் ஓடி வருவதைப் பார்த்ததும் எம்.ஜி.ஆர். ஓட்டுநரை பார்த்து 'மெதுவாகபோ' என்றார். காரின் வேகம் குறைய குறைய ரசிகர்களின் கூட்டம் காரைச் சுற்றி அதிகரிக்க ஆரம்பித்தது. கார்

நகர முடியாத அளவுக்கு ரசிகர்கள் சுற்றி வளைத்து விட்டனர்.

காரின் கதவை மெதுவாகத் திறந்து ரசிகர்கள் காயம்படாத வகையில் மெல்ல இறங்கிய எம்.ஜி.ஆர். அந்த இரண்டு சிறுவர்களையும் தன் இரண்டு கைகளாலும் இறுகப் பிடித்துக்கொண்டார். சிறுவர்கள் பயந்துவிட்டனர். அவர்களை அடிக்க கையை ஓங்கிய அவரைப் பார்த்து நடுங்கி விட்டனர். ஆனால் அவர் அடிக்கவில்லை. அடிப்பதைப் போல நடித்தார். 'ஏன் இப்படி ஓடி வருகிறீர்கள். உங்கள் உயிருக்கு ஆபத்து ஏற்பட்டால் உங்கள் தாய்மாரின் நிலை என்ன ஆகும்' என்று அவர்களைச் சத்தம் போட்டு அதட்டி அனுப்பி வைத்தார்.

எம்.ஜி.ஆர். காரில் வரும்போது பல ரசிகர்கள் அவர் கையைப்பிடிப்பதும் கன்னத்தை தொட்டு பார்ப்பதும் முத்தமிடுவதும் சிலர் கடித்து விடுவதும் உண்டு. ஆனால் எம்.ஜி.ஆர். ஒருபோதும் இதற்கு முகம் சுளிப்பதே இல்லை. அவர்கள் நம்மிடம் மிகுந்த பாசம் வைத்திருக்கிறார்கள் அதை அவர்கள் இவ்வாறு வெளிப்படுத்துகிறார்கள் என அவர் அதைப் பெருந்தன்மையுடன் ஏற்றுக்கொண்டார்.

துப்புரவுத் தொழிலாளியின் மகள்

என் அண்ணன் படப்பிடிப்புக்காக எம்ஜிஆர் ஊட்டிக்குப் போயிருந்த சமயம் ஒரு நாள் படப்பிடிப்பு பார்க்க வந்த பொதுமக்கள் கூட்டத்தில் இருந்த ஒரு எட்டு வயதுச் சிறுமி டிச்சுக்குள் விழுந்து விட்டாள். அது ஒரு கழிவு நீர் சாக்கடை. உடனே அந்த இடத்தில் ஒரு பரபரப்பு ஏற்பட்டது. அங்கே கூட்டம் கூடிவிட்டது.

படப்பிடிப்பில் இருந்த எம்.ஜி.ஆர். 'என்ன ஆயிற்று அங்கே போய் பார்த்து விட்டு வா' என்று தன் உதவியாளரிடம் கூற அவர் போய் பார்த்து விட்டு வந்து 'ஒரு சிறுமி ஒரு சாக்கடைக்குள் விழுந்து விட்டாள் அவளைத் தூக்குவதற்கு சிரமப்படுகிறார்கள்' என்றார். உடனே எம்.ஜி.ஆர். அந்த இடத்திற்கு வந்து அந்த சிறுமியை அங்கிருந்து எடுப்பதற்கு ஊக்கமளித்து அங்கு இருந்தவர்களுக்கு சில யோசனைகள் சொல்லி அந்தச்சிறுமியை வெளியே தூக்கிக் கொண்டு வர ஆவன செய்தார். பிறகு அவளைக் குளிக்க வைத்து அவளுக்கு வேறு புத்தாடை வாங்கிக் கொடுத்து வீட்டுக்கு அனுப்பி வையுங்கள் என்று ஒரு 500 ரூபாய் கொடுத்து விட்டுத் தன் அறைக்கு திரும்பி விட்டார்.

தோட்டி முதல் தொண்டைமான் வரை

எம்.ஜி.ஆர். தங்கியிருந்த ஓட்டல் வாசலில் மறுநாள் காலையில் சுமார் 150 பேர் வந்து கூடி விட்டனர். என்னவென்று விசாரித்தால் 'எம்.ஜி.ஆரை பார்க்க வேண்டும். அவர் எங்கள் பெண்ணை காப்பாற்றி இருக்கிறார். அவருக்கு நன்றி சொல்ல வந்திருக்கிறோம்' என்றனர். அந்தச் சிறுமி ஒரு தோட்டி மகள் எனவே அங்கு வந்திருந்த அனைவரும் துப்புரவு பணியாளர் அல்லது தோட்டி வேலை செய்பவர்கள். இதைக் கேள்விப்பட்ட எம்.ஜி.ஆர் .உடனே தன் அறையில் இருந்து வெளியே அவர்களைப் பார்க்க கிளம்பினார்.



எம்.ஜி.ஆர். கிளம்பும் தருணத்தில் அறையில் இருந்த நம்பியார், அசோகன் ஆகியோர் "அண்ணே இவர்களை எல்லாம் போய் பார்க்க வேண்டுமா. பேசாமல் இருங்கள்" என்று சொன்னார்கள். எம்.ஜி.ஆரோ 'ஏன் அவர்களைப் போய்ப்பார்த்தால் என்ன? என்னைப் பார்க்க வேண்டும் என்று ஆசையோடு வந்திருக்கிறார்கள். போய்ப் பார்த்தால் என்ன குறைந்து விடவா போகிறேன்' என்று சொல்லிவிட்டு வெளியே வந்து விட்டார்.

துப்புரவு தொழிலாளர்கள் தங்கள் பெண்ணைக் காப்பாற்றியதற்காக எம்.ஜி.ஆருக்கு மரியாதை செய்ய வேண்டும் என்ற நோக்கத்தில் அன்போடு ஒரு ரோஜா பூ மாலை வாங்கி வந்திருந்தார்கள். எம்.ஜி.ஆரிடம் வார்த்தைகளால் நன்றி சொல்லிவிட்டு இந்த மாலையை வாங்கிக் கொள்வீர்களா என்று பவ்யமாக கேட்டனர். அதற்கு எம்.ஜி.ஆர். 'ஓ வாங்கிக் கொள்வேனே. நீங்களே என் கழுத்தில் போட்டு விடுங்கள்' என்று சொல்லி தலையைக் குனிந்து மாலையைப் பெற்று கொண்டார். அவர்கள் மிகுந்த சங்கடத்துடன் அந்த மாலையை அவருக்கு அணிவித்தனர். பிறகு அந்த மாலையை கழற்றி கையில் வைத்துக் கொண்டு அவர்களிடம் பேசி வழி அனுப்பி விட்டு தன் அறைக்குத் திரும்பினார்.

அறைக்குள் இருந்த நடிகர்கள் இருவரும் "என்னண்ணே இதப்போயி ரூமுக்குள்ள கொண்டு வந்து கிட்டு, அதை அங்கேயே போட்டுட்டு வர வேண்டியது தானே" என்று அந்த மாலையை அருவருப்பாக பார்த்தனர். அப்போது எம்.ஜி.ஆர். 'ஏன் இந்த மாலை நன்றாகத்தானே இருக்கிறது. இந்த மாலையில் உள்ள பூக்களும் நல்ல வாசனையாகத்தானே இருக்கிறது. பூவுக்கும் மாலைக்கும் என்ன தோஷம். நான் மாலையை விட அவர்களின் அன்பை நினைத்துப் பார்க்கிறேன்' என்று சொல்லிவிட்டு அந்தப் பூமாலையை தன் மேஜையில் தன் அருகில் வைத்துக் கொண்டார். எம்.ஜி.ஆரைப் பொறுத்தவரை தோட்டியும் ஒன்று தான்; தொண்டைமானும் ஒன்று தான்.

வீணை கௌரி

எம்.ஜி.ஆர். முதலமைச்சரான பிறகு அவருக்கு ஒரு திருவல்லிக்கேணியைச் சேர்ந்த சிறுமி கௌரி ஒரு கடிதம் எழுதினாள். அந்தப்பெண் தனக்கு சொந்தமாக வீணையில்லை எனவே தனக்கு ஒரு வீணை வாங்கித்தர வேண்டும் என்று எம்.ஜி.ஆருக்கு ஒரு வேண்டுகோள் கடிதம் அனுப்பியிருந்தார். எம்.ஜி.ஆரும் தன் உதவியாளர்களிடம் சொல்லி இந்த முகவரியில் இருக்கும் இந்தச்சிறுமிக்கு உடனே ஒரு வீணை வாங்கிக் கொடுங்கள் என்று சொல்லி விட்டார்.

சில மாதங்கள் கழித்து அவர் ஒரு நிகழ்ச்சியில் கலந்து கொள்ள கிளம்பிக் கொண்டிருந்தார். அப்போது அந்த நிகழ்ச்சியில் கௌரி என்ற சிறுமி வீணை போட்டியில் கலந்து கொண்டு முதல் பரிசு பெற்றிருந்தார். அந்தப் பெண்ணுக்கு பரிசு கொடுக்கும் நிகழ்ச்சியும் அன்றைக்கு இருந்தது.

எம்.ஜி.ஆர். தன் உதவியாளரிடம் 'நாம் வீணை வாங்கிக் கொடுத்தோமே அந்த கௌரி தானா இவள்' என்று கேட்டார். அப்போது உதவியாளர் ''கௌரிக்கு இதுவரை வீணை வாங்கி கொடுக்கவில்லை அது மைசூரில் இருந்து வாங்கிக்கொண்டு வர வேண்டும் அங்கு இன்னும் தயாராகவில்லை' என்று ஏதோ சாக்குபோக்கு சொல்ல எம்.ஜி.ஆருக்கு மிகுந்த கோபம் வந்து விட்டது. அந்த அதிகாரியிடம் ஒன்றும் பேசாமல் கிளம்பி விட்டார்.

எம்.ஜி.ஆர். விழா மேடைக்கு வந்தார். சிறுமிக்கு பரிசளிக்கும் நேரம் வந்தது. அப்போது அந்த சிறுமி தன் கையிலிருந்த சின்ன கடிதத்தை

எம்.ஜி.ஆரிடம் ரகசியமாக கொடுத்தாள். அந்தக் கடிதத்தைப் பிரித்துப் பார்த்தார். நான் ‘இரவல் வீணையில் பயிற்சி செய்து இந்தப் பரிசு பெற்றிருக்கிறேன். உங்களிடம் வீணை கேட்டிருந்தேன், எனக்கு இன்னும் வந்து சேரவில்லை’ என்று குறிப்பிட்டிருந்தார். அந்தப் பெண்ணின் மன உறுதியை எண்ணி எம்.ஜி.ஆர். புன்னகை புரிந்தார்.

எம்.ஜி.ஆர். அந்தப் பெண்ணை தன் அருகில் நிறுத்தி ‘சற்று பொறு நீ கேட்டது கிடைக்கும்’ என்று சொல்லிவிட்டு தன் மெய்க்காப்பாளரை பார்த்தார். அவர் உடனே காரில் இருந்து ஒரு பெரிய வீணையை எடுத்துக்கொண்டு வந்து கொடுத்தார். வீணை வாங்கித்தராமல் சாக்குப் போக்கு சொன்ன அரசு அதிகாரிக்கு எப்படி திடீரென்று வீணை வந்தது என்று புரியவில்லை. எம்.ஜி.ஆர். ராமாவரம் தோட்டத்தில் இருந்து விழா மேடைக்கு வரும் வழியில் பூம்புகார் கைவினை நிலையத்தில் இருந்து நல்லதோர் வீணை ஒன்றை வாங்கி வந்திருந்தார்.

சில வேளைகளில் அரசாங்க அதிகாரிகள் எம்.ஜி.ஆரின் அன்புள்ளத்தையும் வள்ளல் குணத்தையும் புரிந்து கொள்ளாமல் அலட்சியமாக இருந்து விடுவதுண்டு. அது எம்.ஜி.ஆருக்கு கெட்ட பெயரை ஏற்படுத்தி விடுவதும் உண்டு. ஆனால் எம்.ஜி.ஆரின் கவனத்திற்கு அச்செயல் வந்துவிட்டால் அவர் உடனே அதைச் சரி செய்யும் முயற்சியில் இறங்கி விடுவார். அவ்வாறு அன்றைக்கு அந்தச் சிறுமிக்கு வீணை கிடைத்தது.

குட்டி ஜாக்சன்

ஜானகி அம்மையாரின் அண்ணன் மகள் கீதா மது மோகனின் மகன் மூன்று வயது சிறுவனாக இருந்த காலத்திலேயே மைக்கேல் ஜாக்சன் பாட்டுக்கு வீட்டில் நடனம் ஆடுவான். அதைப்பார்த்து எம்.ஜி.ஆர். மிகுந்த மகிழ்ச்சி அடைவார். அவரைப் பார்க்க வரும் அதிகாரிகளிடமும் அரசியல்வாதிகளிடமும் நண்பர்களிடமும் 'இதோ இவன் மிகச்சிறப்பாக நடனம் ஆடுவான் பாருங்கள்' என்று சொல்லி அவனை நடனமாடச் சொல்லுவார்.

சென்னையில் எங்கேயாவது மேலை நாட்டு நடன நிகழ்ச்சிகள் நடந்தால் அதற்கு எம்.ஜி.ஆர். செல்வதாக இருந்தால் கீதாவையும் அவர் மகனையும் கண்டிப்பாக அழைத்துச் செல்வார். அவனுக்கு விருப்பமும் ஈடுபாடும் இருக்கும் துறையில் அவனுக்கு நிறைய அறிவை ஊட்ட வேண்டும் என்பது அவருடைய விருப்பமாக இருந்தது. கீதா, சுதா, லதா ஆகியோர் நடனம் கற்று வரும் நாட்களில் அவர்களை நடனம் ஆடச்சொல்லி பார்த்து மகிழ்வார். தானும் சில நடன ஸ்டெப்களைப் போட்டுக் காட்டி அவர்களுக்குச் சொல்லித் தருவார். நடனத்தில் எம்.ஜி.ஆருக்கு மிகுந்த ஈடுபாடு உண்டு. அவர் சினிமாவில் அறிமுகமான புதிதில் குமரன் ஆசான் என்பவரிடம் நடனம் கற்றார். எம்.ஜி.ஆரும் மாலதியும் ஆடிய சிவதாண்டவம் புகழ் பெற்றதாகும். சென்னையில் எம்.ஜி.ஆர். இரஷ்யக் கலைக்குழுவினரின் நிகழ்ச்சியைக் கண்டு ரசித்த போது இச்சிறுவனைத் தன் மடியில் வைத்துக் கொண்டார்.

குழந்தைகளுடன் டி.வி. பார்க்கும் எம்.ஜி.ஆர்.

எம்.ஜி.ஆர். வீட்டில் இருக்கும் நேரங்களில் பகல் வேளையில் தன் அறையில் உள்ள பெரிய டீவி.யில் தன் பிள்ளைகளை அழைத்து நல்ல நிகழ்ச்சிகளைப் பார்க்கும்படி சொல்லுவார். அந்த நிகழ்ச்சிகள் பெரும்பாலும் விளையாட்டு அல்லது குத்துச்சண்டையாக [WWF] இருக்கும். விளையாட்டு என்றால் கிரிக்கெட், கால் பந்தாட்டம் போன்றவையாக இருக்கலாம். குத்துச்சண்டை என்றால் டபிள்யூ.டபிள்யூ.டபிள்யூ.எஃபாக. இருக்கும். இதில் பெண் பிள்ளைகளுக்கு அவ்வளவு சுவாரஸ்யம் இருக்காது என்றாலும் எம்.ஜி.ஆர். அழைத்து காண்பிக்கின்றார் என்ற காரணத்திற்காக அவர்கள் அமைதியாக உட்கார்ந்து அந்த நிகழ்ச்சிகளைப் பார்த்துக் கொண்டிருப்பார்கள். அவருக்கு மிகவும் பிரியமானது மல்யுத்தம் குஸ்தி போன்றவை என்பதால் அவர் அந்த சண்டைகளை ஆர்வத்தோடு பார்ப்பார். தன்னுடைய ஆர்வத்தை வீட்டில் அந்த சிறுவர்களோடு சிறுமிகளோடு பகிர்ந்து கொள்வதில் அவருக்கு மிகுந்த மகிழ்ச்சி.

சினிமாவில் குழந்தைகளுக்கு எம்.ஜி.ஆர். தரும் முத்தம்

எம்.ஜி.ஆர். தன் வீட்டில் பிள்ளைகளிடம் காட்டிய அன்பையும் பாசத்தையும் அவர் படங்களிலும் காட்டினார். பெற்றால் தான் பிள்ளையா படத்தில் ஒரு சிறுவன் கீழே விழுந்த காசை எடுத்துக்கொடுத்ததும் அவனுக்கு நெற்றியில் முத்தம் கொடுத்து பாராட்டுவார்.

எம்.ஜி.ஆர். தனது படங்களில் சிறுவர்களுக்கு முத்தம் கொடுப்பதில் கூட ஒரு கண்ணியத்தைப் பின்பற்றுவார். நம்நாடு படத்தில் சேரியில் வாழும் தன்னை வந்து பார்த்துச்செல்லும் அண்ணன் குழந்தைகளை வழியனுப்பும் போது வளர்ந்த பெண் பிள்ளையான குட்டி பத்மினியை நெற்றியிலும் சிறுவனாக நடித்திருக்கும் ஸ்ரீதேவிக்கு கன்னத்திலும் முத்தம் கொடுப்பார். வளர்ந்த பெண் பிள்ளைக்கு கன்னத்தில் முத்தம் கொடுக்கக்கூடாது என்ற நல்ல பழக்க வழக்கத்தை அவர் அந்த படத்தில் ரசிகர்களுக்குக் கற்பித்தார்.



14. சிறுவர்களுக்கு மதிப்பளித்த எம்.ஜி.ஆர்.



இன்றைய சிறுவர்கள் நாளைய இளைஞர்கள். அவர்களே இந்தியாவின் நாளைய தூண்கள் என்பதை நன்கு உணர்ந்த எம்.ஜி.ஆர். சிறு வயதிலேயே தனது படங்களின் மூலமாக அவர்களுக்கு நல்லொழுக்கத்தையும் பகுத்தறிவையும் சுய மரியாதையையும் கற்றுத்தர வேண்டும் என்பதில் தீவிர ஆர்வமும் அக்கறையும் கொண்டிருந்தார். அவர் சிறுவர்களிடம் காட்டிய அன்பு அவர்களுக்கு அளித்த மதிப்பு ஆகியவை குறிப்பிடத்தக்கதாகும்.

சிறுவன் பேச்சை கேட்டு சின்ன காருக்கு மாறிய எம்.ஜி.ஆர்.

1960களில் ப்ளைமவுத்கார் பணக்காரர்களிடையே மிகவும் பிரபலமாயிற்று. அப்போது கோடம்பாக்கத்தில் மேம்பாலம் கிடையாது. இரயில் வரும்போது கேட் போட்டு விடுவார்கள் வண்டி வாகனங்கள நின்று

இரயில் போன பின்பு போக வேண்டும். ஒருநாள் எம்ஜிஆர் காரில் வரும்போது கோடம்பாக்கம் இரயில்வே கேட், ரயில் வருவதற்காக அடைக்கப்பட்டிருந்தது. அப்போது அவர் காருக்குள் அமர்ந்து கேட் திறப்பதற்காகக் காத்துக் கொண்டிருந்தார். அப்போது வெளியே அந்த காரைச்சுற்றி பார்த்த ஒரு சிறுவன் தன் நண்பனிடம் "பாத்தியாடா ஒரே ஒரு ஆளுக்கு எவ்வளவு பெரிய கார்" என்று சொன்னான். இதைக்கேட்டதும் எம்.ஜி.ஆருக்கு ஓர் உண்மை சுள் என்று உறைத்தது.

ஒரு தனிமனிதனுக்கு வசதிகள் தேவைதான். ஆனால் அந்த வசதி ஆடம்பரமாக இருக்கக்கூடாது என்பதை உணர்ந்தார். அன்று முதல் அவர் எப்போதும் சிறிய அம்பாசிடர் காரிலே போவதையே தன் வழக்கமாகக் கொண்டார். அவர் முதல்வர் ஆனதும் அரசு நிகழ்ச்சிகளுக்கு அரசு கார் கண்டசாவில் சில சமயம் போனதுண்டு. அவருடைய சொந்த பிரயாணங்களுக்கும் கட்சிப் பயணங்களுக்கும் அவர் தனது எம்.எஸ்.எக்ஸ். 4777 என்ற எண்ணுள்ள நீலநிற காரையே பயன்படுத்தி வந்தார். அந்தக் கார் இன்று அவருடைய நினைவு இல்லத்தில் அவர் நினைவாக வைக்கப்பட்டுள்ளது.

எம்.ஜி.ஆர். அமெரிக்காவில் சிறுநீரக மாற்று அறுவைச் சிகிச்சை பெற்று 1985இல் ஜனவரி மாதம் சென்னைக்குத் திரும்பியபோது அவருக்கு நோய்த்தொற்று ஏற்படாமல் இருக்கவும் பாதுகாப்பாக அழைத்துச் செல்லவும் அமைச்சர் முத்துச்சாமியும், ஆர்.எம்.வீரப்பனும் ஒரு காரை நவீன முறையில் பல வசதிகளோடு தயாரித்துக் கொண்டு வந்து விமான நிலையத்தில் நிறுத்தி

இருந்தனர். ஆனால் அவர் மேடையை விட்டு கீழே இறங்கியதும் தான் எப்போதும் பயணம் செய்யும் அம்பாசிடர் கார்தான் வேண்டும் என்று கேட்டார். உடனே அந்த பழைய கார் வரவழைக்கப்பட்டு அவர் அந்த காரில் தன் விட்டுக்குச் சென்றார்.

எம்.ஜி.ஆர் இருந்த காரைப் பார்த்து, "ஒரு சிறுவன் ஏதோ விளையாட்டுத்தனமாக சொல்கிறான்; இதற்குப்போய் இவ்வளவு மதிப்பு கொடுக்க வேண்டுமா?" என்று நாம் யோசிக்கலாம். மற்றவர்கள் அப்படித்தான் யோசித்திருப்பார்கள். ஆனால் சமதர்ம கொள்கையில் நம்பிக்கை உள்ள எம்.ஜி.ஆர். தன்னுடைய தேவைக்கு அதிகமாக வசதிகளைச் சேர்த்து வைத்துக் கொள்வது மாபெரும் குற்றம் என்றும் அது ஒரு தேசத் துரோகம் என்றும் நம்பி வந்தார். இந்தக் கருத்தை அவர் மற்றவர்களிடமும் பகிர்ந்து கொண்டார்.

நாம் வசதியாக வாழ்வதில் தவறு கிடையாது. நம்முடைய உழைப்பைக் கொண்டு நாம் வருமானம் ஈட்டி அதில் நமக்கு தேவையான வசதிகளை ஏற்படுத்திக் கொள்வதில் தவறு ஒன்றும் இல்லை. ஆனால் வசதி என்ற பெயரில் வீண் ஆடம்பரங்களுக்கு இடம் கொடுக்கக்கூடாது என்பதில் உறுதியாக இருந்தார். இன்றுவரை அவர் வீட்டில் குடிநீர் வசதி கிடையாது. கிணற்று நீரை தான் குடிக்கின்றனர். தரையில் டைல்ஸ் பதிக்கவில்லை. சிமென்ட் தளம் தான். சிறுநீரக மாற்று அறுவைச் சிகிச்சை செய்து திரும்பும்வரை அவர் அறையில் ஏசி கிடையாது. லிப்ட் கிடையாது. அவர் மாடியில் உள்ள தன் அறைக்கு படிகளில் விரைந்தேறி செல்வார்.

தனிப்பட்ட முறையில் எம்ஜிஆர் ஒரு கார் பிரியர். வாட்ச் பிரியர். மாருதி கார் அறிமுகமானபோது முதலில் பதிவு செய்தவர்கள் எம்.ஜி.ஆரும், ஜெயலலிதாவும், என்.டி.ஆரும். என்பர். அவரிடம் பலவகையான கார்கள் இருந்தாலும் அவற்றை அவர் வீட்டினர் ஒவ்வொரு தேவைக்காகவும் பயன்படுத்தி வந்தனர். இப்போது சென்னையில் நடந்த கார் கண்காட்சியில் எம்.ஜி.ஆரின் பழைய காரும் இடம் பெற்றது. எம்.ஜி.ஆர். தனது பயணத்துக்கு பொது ஜனங்கள் மத்தியில் வரும்பொழுது ஏழைகளின் மனம் ஏற்கும்படி எப்போதும் தனது அம்பாசிடர் காரில் வந்தார். அவர் காரை அடையாளம் கண்டு கொண்டு மக்கள் அந்தக் காரைச் சூழ்ந்து கொள்ளும் அளவுக்கு அவர் அந்த ஒரே காரில் பயணித்தார்.

ஒரு சிறுவனின் ஒற்றைச்சொல் அவரிடத்தில் இத்தகைய சிறப்பான மாற்றத்தை உயர்வை ஏற்படுத்தியது. ‘‘மடல் பெரிது தாழை மகிழ் இனிது கந்தம்’’ என்பது போல சிறுவனின் சொல் அவ்வைக்கு கிடைத்த முருகனின் வாக்கு போல எம்.ஜி.ஆருக்கு எளிமையாக வாழக்கற்று தந்தது. அவர் அந்தச் சொல்லை தன் படிப்பினையாக்கிக் கொண்டார். மற்றவர்கள் சிறுவனின் கருத்தை உதாசீனப்படுத்தி இருப்பர். இதுதான் மற்றவர்களுக்கும் எம்.ஜி.ஆருக்கும் உள்ளவேறுபாடு.

எம்.ஜி.ஆர். நூற்றாண்டு தபால் உறை

எம்.ஜி.ஆர். சிறுவர்களின் மீது கொண்டுள்ள அன்பையும் மதிப்பையும் கருத்தில் கொண்டு எம்.ஜி.ஆர். நூற்றாண்டு தபால் உறை

தயாரிக்கப்பட்டது. இந்த தபால் உறைக்கான வடிவமைப்பை ஒரு போட்டி வைத்து அரசு தேர்ந்தெடுத்தது. அப்போது கோவையில் உள்ள சி.எஸ்.அகாடமியின் ஓவிய ஆசிரியர் முத்தரசு முதல் பரிசு பெற்றார். அவர் வரைந்து கொடுத்த ஓவியம் தான் தபால் உறையில் இடம் பெற்றது.

பரிசு பெற்ற ஓவியத்தில் எம்.ஜி.ஆர். தன்னுடைய ஒரு கையில் ஒரு சிறுமியை தூக்கி வைத்துக்கொண்டு மறுகையால் அருகில் நிற்கும் ஒரு சிறுவனை அணைத்து இருப்பார். மேலும் சிறுமி சிறுவன் ஆகிய இருவர் கைகளிலும் ஒரு சிலேட் இருந்தது. அந்த சிலேட்டில் நூற்றுக்கு நூறு என்று ஒரு மதிப்பெண் எழுதப்பட்டிருந்தது. இருவரும் அரசுப்பள்ளி மாணவர் சீருடையில் இருந்தனர். எம்.ஜி.ஆரின் அன்புக்கும் அக்கறைக்கும் உரிய அரசு பள்ளி மாணவர்கள் நூற்றுக்கு நூறு மதிப்பெண் வாங்குவர் என்ற சிறப்பான கருத்தை இப்படம் உணர்த்தியதால் இந்தப் படமே பரிசு பெறும் தகுதியைப் பெற்றது. இதனை ஓவியர் முத்தரசு தனது பேட்டியில் தினமலர் நாளிதழில் குறிப்பிட்டுள்ளார்.

இயேசு கிறிஸ்து சிறுவர்களை என்னிடத்தில் வரவிடுங்கள் என்று சொன்னது போல சமுதாயத்தில் மாற்றத்தை கொண்டு வர நினைக்கும் பெரியவர்கள் அதற்கான விதைகளை இளம்பிஞ்சுகளின் நெஞ்சங்களில் விதைக்கவே விரும்புகின்றனர்.

இலவசக் காலணி திட்டம்

இலவச சீருடை. சத்துணவு. பாடப்புத்தகம் போன்ற பல வசதிகளை பள்ளி மாணவர்களுக்கு அவர்களின் பெற்றோரின் தயவை எதிர்பார்க்காமல்

அதை தன்னுடைய கடமையாக நினைத்து எம்.ஜி.ஆர். செய்து கொடுத்தார். இன்று பள்ளி மாணவர்களுக்கு பதினெட்டு இலவசப் பொருட்களை அரசு வழங்குகிறது.

எம்.ஜி.ஆருக்கு, பள்ளிச் சிறுவர்களின் காலுக்கு செருப்பு கொடுக்க வேண்டும் என்ற எண்ணம் தோன்றியது. ஆனால் அத்திட்டத்தை நிறைவேற்றுவதற்குள் அவர் காலமாகி விட்டார். எனவே அத்திட்டத்தை அவரது மனைவியார் முதலமைச்சரானதும் நிறைவேற்றினார். அவருடைய மனைவி ஜானகி இராமச்சந்திரன் தனது பதவிக்காலமான 28 நாட்களில் இலவசக் காலணி திட்டத்தை நிறைவேற்றினார்.

எம்.ஜி.ஆர். செருப்பு வாங்கிய கதை

எம்.ஜி.ஆர். ஆறு வயதில் பள்ளிக்கூடத்திற்கு செல்லும் போது அவர் காலுக்கு செருப்பு கிடையாது. பொடிக்கற்கள் அவர் பிஞ்சுகாலில் குத்திய போது அவருக்கு கடும்வலி எடுத்தது. நொண்டி நொண்டி நடந்தபடி பள்ளிக்குச் சென்றார். அப்போது அவர் தன்னுடைய பிரச்சனைக்கு ஒரு தீர்வு காண முடிவு செய்தார். காலுக்கு ஒரு செருப்பு வாங்க வேண்டும் என்று திட்டமிட்டார். இந்த நிகழ்வை அவர் தன் வாழ்க்கை வரலாற்றில் விரிவாக விளக்குகிறார்.

தினமும் சிறுகச்சிறுக காசு சேர்த்து ஒரு நாள் தன் நண்பன் கோபால்சாமி என்பவனை அழைத்துக் கொண்டு செருப்பு கடைக்கு போய் செருப்பு வாங்கி வந்தார். கோபால்சாமி செருப்பு தைப்பவரிடம் விலை பேரம் பேசி செருப்பு வாங்கிக் கொடுத்தான். வீட்டுக்கு செருப்புப் போட்டுக் கொண்டு வந்த

மகனை பார்த்த சத்யா அம்மையார் 'செருப்பு வாங்க உனக்கு காசு ஏது?' என்று அதட்டினார். எம்.ஜி.ஆர். நடந்ததை சொல்லி தாயின் பாராட்டை பெற்றார்.

அண்ணா அவர்கள் முதலமைச்சராக இருந்த காலத்தில் அமைச்சர் பதவிக்குரிய அந்தஸ்து நிறைந்த சிறு சேமிப்பு துணைத்தலைவர் பதவியை எம்.ஜி.ஆருக்கு வழங்கி கௌரவித்தார். அப்போது எம்.ஜி.ஆர். சிறுவர்களிடம் சிறுசேமிப்பின் அவசியத்தை உணர்த்தி சேமிக்கும் பழக்கத்தை ஊக்குவித்தார். சிறு சேமிப்பு சிக்கனம் என்பதில் நம்பிக்கையும் பயிற்சியும் உள்ளவர் எம்.ஜி.ஆர். பணத்தின் மதிப்பு தெரிந்தவர்.

எம்.ஜி.ஆர். முதலமைச்சராக இருந்த போது 1983இல் இந்த நண்பர் கோபாலசாமி போய் நேரில் சந்தித்தார். அவர் அதே ஊரில் கும்பகோணத்தில் கோயில் கணக்கராக பணி செய்து கொண்டிருந்தார். இந்த நண்பர் கோபால்சாமி தான் செருப்பின் விலையை குறைத்து பேசி எம்.ஜி.ஆருக்கு வாங்கிக் கொடுத்தார்.

இன்றும் தொடரும் சிறு குழந்தை ரசிகர்கள்

1987ம் ஆண்டு, டிசம்பர் 24ம் தியதி எம்.ஜி.ஆர். இறந்த செய்தி அதிகாலை 4 மணிக்கு சென்னையைச் சுற்றியுள்ள மாவட்டங்களில் பரவத்தொடங்கியது. அப்போது நிறைய லாரிகள் அண்ணா திமுக தொண்டர்களையும் எம்.ஜி.ஆர். ரசிகர்களையும் ஏற்றிக்கொண்டு சென்னையை நோக்கி மறுநாள் நடக்க இருந்த எம்.ஜி.ஆர். மருத்துவப் பல்கலைக்கழக திறப்பு விழாவுக்காக வந்து கொண்டிருந்தன. விழுப்புரம் செங்கல்பட்டு

மாவட்டங்களில் வந்தபோது எம்.ஜி.ஆரின் மறைவுச்செய்தி கேட்டு பலரும் அதிர்ச்சியுற்று கண்ணீர் சிந்தினர். அந்த அதிகாலை வேளையில் பேப்பர் பொறுக்கி கொண்டு வந்த சிறுமி எம்.ஜி.ஆரின் சாவை கேட்டு அழுத படியே ஒரு சத்தியவாக்கு உரைத்தாள். 'இனிமே எம்.ஜி.ஆரே பிறந்து வந்தாலும் அவர் எம்.ஜி.ஆர். ஆக முடியாது' என்றாள். இதனால் அறியப்படுவது என்னவெனில் எம்ஜிஆர் என்பது ஒரு தனிமனிதர் அல்ல; அது ஒரு பாரம்பரியத்தின் வெளிப்பாடு. ஒரு மரபுச் சின்னம்.

மக்கள் துன்பங்களில் நேரடி பங்கு

எம்.ஜி.ஆர். திருமணம் பெயர் சூட்டல், வெள்ளம், தீ விபத்து என வரும் மக்களின் இன்ப துன்பங்களில் உடனடியாக நேரடியாக பங்கு பெற்றார். அவர்களின் கஷ்ட நஷ்டங்களை புரிந்து கொண்டு அதற்கான தீர்வுகளை தேடினார். அவர் மக்களோடு இணைந்து சிந்தித்தார். மக்கள்


பல லட்சம் குழந்தைகள் பட்டினி கிடக்க விடமாட்டோம்

சத்துணவுத் திட்டத்தை

கைவிடமாட்டோம்

'பிச்சை எடுத்தாவது நிறைவேற்றுவோம்'

புரட்சித்தலைவர் உணர்ச்சி முழக்கம்

அவர்களோடு இணைந்து செயல்பட்டார். அவர் மக்களின் கண்ணீரை துடைத்தவர் என்பதால் மக்கள் திலகமாக ரசிகர்களால் போற்றப்பட்டார். தொடர்ந்து அவர் செய்து வந்த இப்பணி அவரை மக்கள் தலைவர் ஆக்கிற்று. பெரியவர்கள் எம்.ஜி.ஆரை பற்றி சொல்ல கேட்டு வளர்ந்த சிறுவர்கள் தலைமுறைகளாக எம்.ஜி.ஆரின் ரசிகர்களாக இருக்கின்றனர். இது மற்ற நடிகர்களுக்கும் தலைவர்களுக்கும் கிடைக்காத பேறாகும். இதனால் சிறுவர் முதல் பெரியவர்வரை எம்.ஜி.ஆரின் ரசிகர்களாகவும் அண்ணா திமுகவின் தொண்டர்களாகவும் தொடர்ந்து இருந்து வருகின்றனர்.

தலைமுறையாக தொடர்ந்து வரும் எம்.ஜி.ஆர். ரசிகர்கள்

மரம் பிடுங்கி கவுண்டன் புதூர் என்ற ஊரில் உள்ள ஒரு பாட்டி எம்.ஜி.ஆர். ரசிகை ஆவார். அவர் மதுரை வீரன் படம் பார்த்ததில் இருந்து எம்.ஜி.ஆர். ரசிகை ஆனார். அவர் மகன் பொன்னுசாமி தீவிர எம்.ஜி.ஆர். பக்தர். அவர் பேரனும் இன்று எம்.ஜி.ஆர். ரசிகன். இவ்வாறு பலதலை முறைகள் தமிழ்நாட்டிலும் தெற்காசிய நாடுகளிலும், கர்நாடகாவிலும் எம்.ஜி.ஆர். ரசிகர்களாக பாட்டி, தாய், தந்தை, பிள்ளைகள் என இருந்து வருகின்றனர். தாய்வழி சொந்தங்கள் எனப்படும் தொப்புள் கொடி உறவுகள் எம்.ஜி.ஆர். ரசிகர்களாகத் திகழ்வது இயல்பான நிகழ்வாகும்.

சிறுவர்களை அதிமுக தொண்டர்களாக மாற்றிய எம்.ஜி.ஆர்.

யாதோன்கி பாராத் *என்ற இந்தி படத்தை தமிழில் எடுக்கலாம் என்று இயக்குனர் சேதுமாதவன் எம்.ஜி.ஆரை அணுகிய போது அவர் 'இது ஒரு மியூசிக் சப்ஜெக்ட் இதில் எனக்கு என்ன ஸ்கோப் இருக்கிறது' என்று கேட்டார். அதற்கு இயக்குனர் அவரிடம் இது உங்கள் படமாக வரும் என்று சொல்லி அவரது கால்ஷீட்டை பெற்று விட்டார். நாளை நமதே என்ற பெயரில் இந்தப்படம் வெளி வந்து வெற்றி வாகை சூடியது.*

நாளை நமதே *படத்தில் ஒரு குடும்பத்தைச் சேர்ந்த மூன்று மகன்கள் படத்தின் ஆரம்பத்திலேயே பிரிந்து விடுகின்றனர். அவர்கள் தம் பெற்றோரோடு இருக்கும் போது மகிழ்ச்சியாகப் பாடிய பாடலை ஒருவர் ஆங்காங்கே பாடி மற்ற இருவரைத் தேடி வருகின்றார். படத்தின் முடிவில் மூவரும் சந்தித்து ஒன்று கூடுகின்றனர். இந்த படத்தில் வரும் பேமிலி சாங் என்று அழைக்கப்படும் குடும்பப்பாட்டு இந்தியில் மிகவும் பிரபல மாயிற்று*

நாளை நமதே படத்தில் இந்தக் குடும்பப் பாட்டை எம்.ஜி.ஆர். படத்தின் அரசியல் மையக் கருத்துரையாக தன்னுடைய கட்சிக்கான விளம்பரமாக திரைப்படத்திலும் அரசியலிலும் தனக்கு ஆதாயமாக அமையக்கூடிய அளவில் சிந்தித்து உருவாக்கினார். இந்தப் பாட்டை குடும்பம் மற்றும் கொள்கை என இரண்டுக்கும் பொருத்தமாக அமையும்படி எழுதி வாங்கினார்.

அண்ணா திமுக கட்சி தொடங்கி அப்போது வந்த இடைத்தேர்தல்களில் பெரு வெற்றி பெற்று மக்கள் மத்தியில் செல்வாக்குப் பெற்று வந்த அண்ணா திமுக மேலும் நம்பிக்கை கொண்டு வளர வேண்டும் என்பதற்காகவும் அடுத்து வரும் சட்டமன்ற தேர்தலில் பெரும்பான்மை பெற்று ஆட்சியில் அமரும் என்ற எண்ணத்தை ஆழமாக விதைக்க வேண்டும் என்பதற்காகவும் இந்த பாட்டை செயல் ஊக்கம் தரும் பாட்டாக மாற்றி எம்.ஜி.ஆர். தனக்கு 100% சாதகமாகப் பயன்படுத்திக்கொண்டார்.

இந்தப் பாட்டில் வரும் பெற்றோர் அண்ணா திமுக கட்சி என்றும் பிள்ளைகள் அக்கட்சியின் தொண்டர் என்றும் பொருள் கொள்ளும் படியாகவும் பாடல் ஒலித்தது. இது படத்தின் தொடக்கத்தில் குழந்தைகள் பெற்றோருடன் சேர்ந்து பாடுகின்ற இனிமையான பாடல்ஆகும். பெற்றோர்கள் பிள்ளைகளுக்கு வாழ்க்கை குறித்த நம்பிக்கையை ஊட்டுகின்றனர்.

நாளை நமதே இந் தநாளும் நமதே

தாய் வழி வந்த சொந்தங்கள் எல்லாம்

ஓர் வழி நின்று நேர்வழி சென்றால்

நாளை நமதே இந்த நாளும் நமதே

என்ற பல்லவி சிறுவர்கள் அல்லது குழந்தைகள் எல்லோரும் ஒன்றுகூடி ஒற்றுமையாக இருந்து நேர்வழியில் அவர்கள் வாழ்க்கையை நடத்தினால் எதிர்காலம் இனிமை உடையதாக இருக்கும் என்ற

கருத்தைப் பெற்றோர் பிள்ளைகளுக்கு எடுத்துச் சொல்வதாக அமைந்துள்ளது.

சிறுவர்கள் பாடி மகிழும் இந்த பாட்டு அவர்களுக்கு எம்.ஜி.ஆர். என்ற ஓர் அரசியல் தலைவர் பிம்பத்தையும் மனதில் பதிய வைக்கின்றது. அதற்கு அடுத்த படியாக அவரது சிந்தனையையும் அவர்கள் அறியாமலேயே அடி மனதில் பதிய வைக்கிறது. இவர்கள் பதின்ம வயதினர் ஆனதும் தாமாகவே அண்ணா திமுக ஆதரவாளர்கள் ஆகி விடுவர். இந்த ஆதரவு திரைப்படத்தால் எம்.ஜி.ஆருக்கு சிறுவர் மூலமாக கிடைக்கும் பலன்.

அடுத்து கொள்கை பாடல் என்று ஆராய்ந்தால் அண்ணா திமுகவின் தொண்டர்கள் தாய் வழிச் சொந்தங்கள் போல சகோதரப் பாசத்துடன் உடன் பிறப்புகளாக ஒருங்கிணைந்து நேர்வழியில் உழைத்தால் அண்ணா திமுகவின் எதிர்காலமும் பொதுமக்களின் வாழ்க்கையும் பிரகாசமாக இருக்கும். திமுகவின் இன்றைய இன்னல் தரும் ஆட்சி மறைந்து நாளைய ஆட்சி நல்லாட்சியாக மலரும் என்ற நம்பிக்கை ஒளியைத் தோற்று விக்கிறது. அடுத்து வரும் சட்டமன்றத் தேர்தலில் ஆட்சியை அண்ணா திமுக பிடிப்பது உறுதி; எனவே தொண்டர்கள் உற்சாகமாகக் கட்சிப்பணிகளில் ஈடுபட வேண்டும்; திமுகவினரின் அராஜகத்தைக் கண்டு வன்முறைப் போக்குக்கு அஞ்சி சோர்ந்துவிடக்கூடாது; ஒற்றுமையும் நேர்வழியும் நமக்கு நல்ல எதிர் காலத்தை தரும் என்று ஒரு தலைவனாக இருந்து தன் தொண்டர்களுக்குக் கூறும்

கருத்துரையாகவும் இந்தப் பாடலின் பல்லவி அமைந்தது.

எம்.ஜி.ஆரின் திறன் மிகு உத்தி

படத்தின் பாடலை காட்சிகளை வசனத்தை படத்துக்கும் தனக்கும் அரசியல் கொள்கைக்கும் பொருந்தி வருமாறு அமைப்பது தான் எம்ஜிஆரின் திறன்மிகு தொடர்பியல் உத்திஆகும். இதைத்தான் ஆங்கிலத்தில் effective communication technique என்போம். தன்னிடம் இருந்த திரைப்படம் என்ற வலிமை மிகுந்த தொடர்பியல் சாதனத்தை 100 சதவிதம் ஆற்றலுடன் பயன்படுத்தி சிறுவர் முதல் பெரியவர் வரை தன்பால் ஈர்த்தவர் எம்.ஜி.ஆர்.

1960 களில் திமுகவின் முக்கிய தலைவர்களான கருணாநிதி, ஈ.வே.கி.சம்பத், நாவலர் நெடுஞ்செழியன் போன்றோர் எம்.ஜி.ஆருக்கு அண்ணா கொடுக்கும் முக்கியத்துவத்தை பற்றி அவரிடம் கடுமையாகப் பேசினர். அப்போது அண்ணா “உங்களுக்கு எம்.ஜி.ஆரின் ஆற்றல் பற்றி தெரியவில்லை. நீங்கள் உங்கள் வாக்கு வன்மையால் ஒருமாதம் முழுக்கக் கூட்டங்களில் பேசி ஆயிரக்கணக்கான மக்களைக் கவரலாம். ஆனால் எம்.ஜி.ஆர். இரண்டு மணி நேரத்தில் இலட்சக்கணக்கான மக்களை தன்பால் ஈர்த்துவிடுவார். அவரிடம் அந்த கவர்ச்சியும் திறமையும் உண்டு” என்றார். அவர் சொன்னது உண்மை என்பதை எம்.ஜி.ஆர். தன் ஆயுள் முழுக்க அசைக்க முடியாதவராக முதல்வர் பதவியில் இருந்து பிறகு தான் கருணாநிதி உணர்ந்தார்.

ஆசிரியர் அவர்களின் நூல் வரிசைகள்

